
www.padippakam.com




# ஆண்கள் விற்பனைக்கு

RAYA
87 RUE DE COLOMBES
92600 A... SUR
... FRANCE
பாரிஸ் ...

படிப்பகம்


www.padippakam.com

# நிஜங்கள்

வெளியீடு - 1



பார்த்திபன்




வெளியீடு - 2

படிப்பகம்

www.padippakam.com

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE ; FRANCE

வெளியீடு :5
மார்கழி: 1988

# ஆண்கள் விற்பனைக்கு

(நாவல்)

- பார்த்திபன்

நன்றி
அட்டை ஓவியம்: ரமணி
வெளியீடு: தென்னாசிய நிறுவனம்

படிப்பகம்

www.padippakam.com

PUBLICATION - 5
DECEMBER, 1988

# `AANKAL VITPANAIKKU'

(NOVEL)

By PARTHIPAN

THANK FOR

COVER DESIGN BY RAMANI
PUBLISH BY SUDASIEN BURO

படிப்பகம்

www.padippakam.com

# என்னுடைய பக்கம்

வணக்கம். ஐந்தாவது முறையாக உங்களிடம் வந்திருக்கிறேன். படியுங்கள். பின்னர் விமர்சியுங்கள். எதிர்பார்க்கிறேன்.

தலைப்பைப் பார்த்தவுடன் நாவலின் கரு புரிந்திருக்கும். சீதனம் என்பது இப்போது பெரிய பிரச்சினை அல்ல என்பது போல பலர் பேசிக் கொண்கிறார்கள். அது தவறானது என்பதை என்னால் நேரடியாகவே கண்டு கொள்ள முடிந்தது. சகோதரிகளுக்காக, பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக, காச் சம்பளத்தில் அடுப்பு வெக்கைக்கு முன்னால் வெந்து கொண்டிருக்கும் சகோதரர்களைச் சந்தித்த போதும், அட்டகாசமான திருமணக்கொண்டாட்டங்களில் பங்குபற்றும் பலர் தங்களுக்குள் மணமக்களைப் பற்றிக் கதைத்துக் கொள்ளும்போதும், அரசியல் தஞ்சம் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள், வேலை செய்பவர்கள், குடியேற்ற அந்தஸ்து கிடைத்தவர்கள் தங்களுடைய 'விலை' கூடிவிட்டதாக அறிவிக்கும் போதும், ஊரிலுள்ள ஆதனங்களை விற்று, கூடவே குடும்பத்தையும் கடனாளியாக்கிவிட்டு, சீதனப் பொதியுடன் பிராங்பேர்ட் விமான நிலையத்தில் வந்து குவியும் தமிழ்ப் பெண்களைப் பார்த்தபோதும் சீதனம் என்பதின் பாதிப்பு தெளிவாகவே புரிந்தது. தற்போதைய காலத்திற்கேற்ப சீதனம் என்பது புதுவடிவில் மாற்றப்பட்டிருக்கிறதே தவிர மறைந்துவிடவில்லை என்பதும் தெரிகிறது. அறுபதாம்ஆண்டில் வெளிவந்த இலக்கிய ஆக்கங்களிலும் சீதனம் இடம் பெற்றிருக்கிறது. இப்போது என்பத்தெட்டாம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளிவந்த 'ஆண்கள் விற்பனைக்கு' நாவலிலும் சீதனம் இடம் பெற்றிருக்கிறதென்றால் சீதனத்திற்கெதிரான போராட்டம் எப்படி உறங்கு நிலையிருக்கிறது என்று புரியும். இனியும் இந்த மந்த நிலை தொடரக் கூடாது. பத்மாவும், உமாவும் தயாராக இருக்கிறார்கள். இவர்களுடன் நானும் இணைந்து கொள்ளப் போகிறேன். உங்களையும் எதிர்பார்க்கிறேன்.

இந்தக் கதையின் எந்தப் பகுதியிலும் குருதி தோய்ந்த ஈழத்துச் சம்பவங்கள் எதையும் காணாமல், கதாபாத்திரங்கள் இலங்கையிந்தான் நடமாடுகிறார்களா என்று நீங்கள் சந்தேகப்படலாம். இந்தக் கதையில் ஈழத்து சம்பவங்களை நான் தவிர்த்துக் கொண்டமைக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

"எத்தினையோ ஆயிரக் கணக்கான எங்கட சனங்கள் தமிழர் என்டதுக்காக அநியாயமாய் செத்துப் போனார்கள். தங்களின்ரை வயசுக்கு மாறும் எத்தினையோ இளைஞர்கள் மண்ணுக்காய் போராடி இளம் வயதிலேயே தங்கட ஆயுளை அர்ப்பணிச்சிருக்கிறார்கள். சின்னப் பிஞ்சுகள் தங்கட நிகழ்காலத்தை வெடிச் சத்தங்களோடயும், பிணங்களோடயும் கழித்துக் கொண்டிருக்

(தொடர்ச்சி128ம் பக்கத்தில்)

படிப்பகம்

www.padippakam.com





# 1

பொழுது புலர்ந்து கொண்டிருப்பதை எங்கோ இருந்து கோழி ஒன்று அறிவித்தது. தொடர்ந்து வேறு பல உயிரினங்களும் தாங்கள் விழித்துக் கொண்டு விட்டதைச் சத்தம் போட்டுத் தெரிவித்தன.

பத்மா தூக்கம் கலைந்தாள். தற்செயலாகக் கோழி கூவ மறந்து வேறு அலுவலாக இருந்தாலும் பத்மா விழித்து விடுவாள். பலமாதங்களாக இதே நேரத்தில் அவள் விழித்தெழப் பழகிப் பழக்கமாகிவிட்டது. கிழமை நாட்களில் தேவையான இந்தப் பழக்கம் ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் அவளுக்குத் தொந்தரவாகவே போய்விட்டது.

பத்மா கட்டிலை விட்டிறங்கினாள். தூக்கம் மிச்சமிருந்த கண்களுடன் அம்மாவைப் பார்த்தாள்.

வேதா தூங்கிக் கொண்டிருந்தாள். கேசம் முடிச்சுப் போடப்பட்டிருந்தது. முகத்தில் தாராளமான சாந்தம். தலையணைக்கும் மேலாக இடது கையை மடித்து அதில் தலையை வைத்துப் படுத்திருந்தாள். வயது முதிர்ச்சியும், அதை மீறிய வேலைகளும் அவளுக்கு நல்ல தூக்கத்தை வழங்கிக் கொண்டிருந்தன.

அம்மா எழுந்து விடுவாளென்று சத்தம் செய்யாமல் மெதுவாக அறைக் கதவைத் திறந்து வெளியே வந்தாள் பத்மா.

பனிப்புகார் போன்ற இருள். சூரியக் கதிர்கள் இன்னமும் வீட்டிற்குள் அத்து மீறவில்லை.

பத்மா தடுமாறாமல் நடந்து போய் பற்பசையையும், தூரிகையையும் எடுத்துக் கொண்டு, சமையலறைக் கதவைத் திறந்து வீட்டிற்கு வெளியே வந்தாள்.

சில்லென்ற காலைக் காற்று உடலைத் தழுவியது. புற்களின் நுனியில் நீர்த் துளிகள் பூத்திருந்தன. இருளும், ஒளியும் கலவையாகியிருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



கிணற்றடிக்கு வந்த பத்மா பல் துலக்க ஆரம்பித்தாள்.

காகங்கள் தென்னங் கீற்றுகளில் அமர்ந்திருந்தன. பழைய சாக்குத் துணியின் மேல் நாயொன்று சுருண்டு படுத்திருந்தது.

கிணற்றிலிருந்து சற்றுத் தள்ளி ஐந்து வாழை மரங்கள் படுத்தி ருந்தன. அடிக்கடி நீர் கிடைப்பதால் அவைகள் அப்படி அகலமாயிருந்தன. ஒரு வாழையில் பொத்தி கூட வந்திருந்தது.

பத்மா தூரிகையைக் கிணற்றுக் கட்டில் வைத்து விட்டு வாளி யைக் கிணற்றுக்குள் இறக்கினாள். கப்பி மெல்லியதாகச் சத்தம் போட்டது

நீரைக் கோலியதும் வாளியை மேலே எடுத்து கட்டில் வைத் துவிட்டு, கைகளை உள்ளே வைக்கையில் குளிர் தாக்கியது.

வேகமாக வாய் கொப்பளித்து, முகம், கை, கால் கழுவினவள் கொடியில் தொங்கிக் கொண்டிருந்த துவாயை எடுத்துத் துடைத்துவிட்டு மீண்டும் பழையபடி தொங்க விட்டாள்.

தூரிகையை எடுத்துக் கொண்டு, படியில் கால்களை உதறி சமையலறைக்குள் வருகையில் அம்மா அடுப்புப் பற்ற வைத்துக் கொண்டிரு ப்பது தெரிந்தது.

பத்மா ஆச்சரியப்படவில்லை. என்னதான் அவள் அம்மாவை எழுப்ப விரும்பாமல் தனது காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினாலும் வேதா எழுந்து விடுவாள்.

தானே தேநீர் தயாரித்து, பத்மாவின் மத்தியானச் சாப்பா ட்டையும் கட்டிக் கொடுத்து விட்டால்தான் வேதாவுக்குத் திருப்தியாகவிரு க்கும். சந்தோசமாகவுமிருக்கும்.

மகளுக்குத் தொண்டு செய்வதற்காக விழித்து, விழித்து அவளுக் கும் பழக்கமாகிவிட்டது. இதை ஒரு கடமையாகக் கருதாமல் தன்னுடைய நித்திய கருமங்களில் ஒன்றாகவே அவள் ஆக்கிக் கொண்டாள்.

இப்போது விழித்தால் விழித்ததுதான். படுக்கும்வரை அவளுக்கு ஓய்வு கிடையாது. வீட்டைச் சுத்தம் செய்வது, வளவைத் துப்பரவாக்குவது சமையல் செய்வது எல்லாம் அவளுடைய சிரமதானங்கள். தையல் வேலை கொஞ்சம் ஊதியம் பெற்றுத் தரும். வேதாவின் தையல் வேலைப்பாடுகள் அந்த ஊரில் பிரசித்தம்.

படிப்பகம்

www.padippakam.com



பத்மா அறைக்குப் போய் தலைவாரினாள். ஒற்றைப் பின்னலை போட்டு முடித்த பின் போட்டிருந்த உடைகளை மாற்றினாள். சேலையில் மடிப்புகள் பிடித்துக் கொண்டிருக்கும்போது வேதா தேநீர்க் கோப்பையுடன் உள்ளே வந்தாள்.

"இன்டைக்கும் இந்தச் சீலையே?" என்று கேட்டுக்கொண்டே தேநீர்க் கோப்பையை மேசை மீது வைத்தாள் வேதா.

"மற்றது தோய்க்கையில்லை"

"இப்ப மறக்காம எடுத்து வை. நான் தோய்ச்சு வக்கிறன்" வேதா சொல்லிவிட்டுத் திரும்பவும் சமையலறைக்குள் போய் விட்டாள்.

கைக்கடிகாரத்தைக் கையில் கட்டிக் கொள்ளும் போதுதான் பத்மா நேரத்தைக் கவனித்தாள். ஆறு மணியாவதற்காகப் பெரியமுள் ஒன்பதைக் கடந்து கொண்டிருந்தது.

பத்மா சுறுசுறுப்பானாள். பஸ் பிடிப்பதற்கு ஒரு கட்டைதூரம் நடக்க வேண்டும்.

சில நேரங்களில் பஸ் நேரத்துக்கு வந்துவிடும். சிலவேளைகளில் தாமதமாக வரும். வராமலும் விடுவதுண்டு.

தேநீரை அவசரமாகக் குடித்துவிட்டு சமையலறைக்குப்போனபோது அம்மா இன்னும் சமையலை முடிக்காததை கவனித்தாள்.

"கெதியா அம்மா. நேரமாச்சு. பஸ்ஸை விட்டா அவ்வளவு தான்" சொல்லிக் கொண்டே திரும்பவும் அறைக்கு வந்து செருப்பை போட்டு வார்களைப் பூட்டிக் கொண்டாள்.

பஸ்ஸிற்குக் கொடுப்பதற்காகச் சில்லறைக் காசுகளை எண்ணிக்கொண்டிருக்கையில் வேதா சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள்.

"வாறன்" சில்லறைகளை அப்படியே பையில் கொட்டிவிட்டு சமையலறைக்கு வந்தாள் பத்மா.

சொதியில் நனைந்தபடி இடியப்பம் தயாராக இருந்தது. மேசையின் மறுபக்கத்தில் இடியப்பங்களைப் பொதியாக்கிவிட்டு சொதிப் போத்தலை மூடிக் கொண்டிருந்தாள் வேதா.

"எனக்க இடியப்பம் வையாதேங்கோ. ஒவ்வொரு நாளும் வீணே கொட்டுறது" பத்மா சாப்பிட்டபடியே சொன்னாள்.

"ஏன் கொட்டுவான். வடிவாச் சாப்பிடு. நான் முழுக்க வெறு

படிப்பகம்

www.padippakam.com



வயித்தோட நிண்டா அல்சர்தான் வரும்" -சொல்லிக் கொண்டு பத்மாவின் தட்டில் இன்னும் இரண்டு இடியப்பங்களைப் போட முயற்சிக்க, பத்மா அவசரமாக விலகிக் கோப்பையைக் கழுவி வைத்து விட்டாள்.

"வரேக்க என்ன வேண்டியாறது?" பையுடன் படிகளில் இறங்குகையில் பத்மா கேட்டாள்.

"ஒண்டும் வேண்டாம். நான் இங்க வாங்கிறன். நீ ஏதாவது கடையில வாங்கிச் சாப்பிடு" என்று வேதா சொல்லிக் கொண்டிருக்கையில் பத்மா பாதையில் இறங்கி மறைந்து போனாள்.

## 2

மதில்களும், வேலிகளும் மாறி, மாறி பாதையைப் பாதுகாத்துக்கொண்டிருந்தன.

பலருக்கு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுத்த திருப்தியில் பாதை வளைந்து, வளைந்து போய்க் கொண்டிருந்தது. பாதசாரிகள், சைக்கிளோட்டிகளைப் பரீட்சிக்க ஆங்காங்கே குழிகள் பதுங்கியிருந்தன. தார் காணமல் போய் விட்டதால் கற்கள் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன.

'நாய் கடிக்கும் கவனம்' போடப்பட்டிருந்த வீட்டிலிருந்து கணவனும், மனைவியும் அடிபட்டுக் கொள்வது வெளியே பலமாகக் கேட்டது.

பத்மா வேகமாக நடந்து கொண்டிருந்தாள். அடிக்கடி கடிகாரத்தையும் பார்த்துக் கொண்டாள். ஆறிருபது பஸ்ஸை அவள் பிடிக்க வேண்டும். அதற்காக அவள் இன்னும் கொஞ்சத் தூரம் நடக்க வேண்டும்.

பலர் சந்தையால் வந்து கொண்டும், போய்க் கொண்டுமிருந்தார்கள். பால்காரன் சைக்கிளில் மணியடித்துக் கொண்டு போனான். தூர இடங்களுக்குப் போய்ப் படிக்கும் மாணவர்கள் அன்றைய உற்சாகங்களுடன் பெரிய பெட்டிகளைச் சுமந்து கொண்டு போனார்கள்.

மிகவும் நிதானமாக காலை மலர்ந்து கொண்டிருந்தது.

வீடுகள் ஒழுங்கில்லாமல் விழித்துக் கொண்டிருந்தன. பல வீடுகளில் பயனில்லாமல் மின்சார விளக்குகள் இன்னும் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

பத்மா தனது வேகத்தை அதிகரித்தாள். வியர்வை துளிர்த்துக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருந்தது.

இரவிரவாக ஓடி, களைத்துப் போய் வந்த லொறி ஒன்று முடக்கில் திரும்புவதற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. பத்மா சாக்கிரதையாக விலத்திப் போனள்.

பஸ் தரிப்பு வந்துவிட்டது.

பஸ் அங்கே தரித்துப் போனல் மட்டுமே அது பஸ் தரிப்பு நிலையம். மற்றப்படி வேறெந்த அடையாளங்களும் அங்கே காணப்படவில்லை.

மழை என்றாலும், நல்ல வெயில் என்றாலும் பிரயாணிகளுக்கு ஓரளவிற்கு உதவி செய்து வருவது பாதையோர ஆலமரம்தான். தன்னுடைய சேவையை நன்றாக உணர்ந்ததால்தானே என்னவோ அந்த மரம் மிகவும் நன்றாகவே பரந்து வளர்ந்திருந்தது. ஏராளமான விழுதுகளையும் உற்பத்தி செய்திருந்தது. மரத்தின் வளைவுகளும், பள்ளங்களும் வசதியான ஆசனங்களாகப் பிரயாணிகளால் பாவிக்கப்பட்டன.

பத்மா வருகையில் ஏற்கெனவே பலர் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். இதே நேரம் தொடர்ந்து சந்தித்துக் கொள்வதால் அவளுக்குப் பல முகங்கள் பழக்கமாகியிருந்தன. அதனல் புன்னகைத்தாள்.

வைத்தியசாலைக்குப் போகும் உடல்கள், பாடசாலைக்குப் போகும் புதிய வாரிசுகள், வேலைக்குப் போகும் இயந்திரங்கள் எல்லாம் அங்கு கலந்திருந்தன.

முழுக்க, முழுக்க வெள்ளை உடை அணிந்த மார்புடன் கொப்பி புத்தகங்களை அணைத்துக் கொண்டிருந்த உமாவை நெருங்கிப் பத்மா நின்றுகொண்டாள்.

"என்ன இண்டைக்கு லேற்றாப் போனீங்கள்?" உமா கேட்டாள்.

"சாப்பாடு ரெடி பண்ண லேற்றாயிட்டுது. ஓடிவந்தும் பிரயோசனமில்லை. பஸ் வரயில்லைத்தானே?"

"பஸ் என்டா அப்பிடித்தான். நாங்க பிந்தின பஸ் முந்தும். நாங்க முந்தின பஸ் பிந்தும்"

இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

சூரியோதயத்தைக் காண அடிவாரத்தைப் பார்த்துக் கொண்

படிப்பகம்

www.padippakam.com



டிருப்பதைப் போல எல்லோரும் பஸ் வருகிறதா என்று பாதையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"இந்த மினிபஸ்ஸுகளைக்கூட காணேல"

"அதெப்பிடி வரும். பஸ்ஸுக்கு முன்னுலதான வருவாங்கள்"

"ஓட்டப்போட்டியில எல்லாருக்கும் நல்ல ஆசை"

பலர் தமது அவசரங்களுக்காகப் போக்குவரத்துச் சபையிலிருந்து சாரதிவரை விமர்சித்துக் கொண்டிருந்தார்கள்.

இன்னும் சிலர் அரசியலைக் கொண்டு வந்து சூடாக்கி நேரத்தையும், சக்தியையும் வீணுக்கிக் கொண்டிருந்தார்கள்.

"இண்டைக்கும் லேற்றான்" உமா சலித்துக் கொண்டாள்.

"பேசுவினமோ?" என்று பத்மா கேட்டாள்.

"ம். எல்லாருக்கும் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க வேணுமெண்டதை நினைச்சாத்தான் விசராக் கிடக்கும்"

பாதையில் எல்லா வாகனங்களும் ஓடிக் கொண்டிருந்தன பஸ் ஒன்றைத் தவிர. எல்லோரும் கடிகாரத்தையும், பாதையையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பஸ் அவர்கள் எல்லோரையும் ஏமாற்றிக் கொண்டிருந்தது.

இரண்டு பேர் பொறுமையிழந்து வீட்டுக்குப் போனார்கள். இரண்டொருவர் வாய்க்கு வந்தபடி ஏசினார்கள்.

"அங்க வருகுது" என்னெய்க் கிணறு கண்டு பிடித்தது போல திடீரென ஒருவர் சந்தோசப்பட்டுக் கத்தினர்.

இறக்கைகளை விரித்த பறவைகள் பறப்பது போல, ஆட்களை தொங்கவிட்டுக் கொண்டு மினிபஸ் வந்து நின்றது.

"ஏறுங்கோ ஏறுங்கோ" என்று நடத்துனன் அவசரப்பட்டான். சனநெரிசலைப் பார்த்தவர்கள் தயங்கினார்கள்.

"பஸ் வராது. நிண்டியள் எண்டா போய்ச் சேர மாட்டியள்" என்ற அறிவிப்பைத் தொடர்ந்து மூன்றுபேர் படிகளில் தம்து இடது கால்களை வைத்து வலது கால்களை காற்றில் மிதக்க விட்டனர்.

"றைற்" காசு நிரம்பிய கைகளால் நடத்துனன் ஜன்னலைப் பிடித்துக்கொண்டு தன்னுடைய உடம்பையும் முட்ட வைத்தபின் மினிபஸ் புறப்

www.padippakam.com



பட்டுப் போனது.

"ஸ்கூலுக்கு நேரமாச்சென்டா நீர் இதில போயிருக்கலாமே" என்று பத்மா கேட்டாள்.

"உதுக்குள்ள ஏறி நெரிபட்டா உடுப்புகள் பழுதாகிறது தான் மிச்சம். இறங்கேக்க தோட்டத்தில வேலை செய்து போட்டு வாற மாதிரியிருக்கும்" மடிப்புக் கலையாமல் இஸ்திரி போடப்பட்ட சட்டையுடன் நின்றுகொண்டிருந்த உமா தன்னுடைய கவலையைத் தெரிவித்தாள்.

ஆச்சரியமாக பஸ் வந்துவிட்டது.

உள்ளே கூட்டமே இல்லை. பத்மாவும், உமாவும் வசதியாக இருக்கையில் அமர்ந்து கொண்டார்கள்.

பஸ் நிதானமாகப் புறப்பட்டது.

## 3

பச்சையாய், பசுமையாய் காற்றில் தடுமாறிக் கொண்டு பயிர்கள் பரந்திருந்தன.

வெயிலில் கறுத்து, உழைப்பால் உரமேறிய உடம்புகள் தோட்டங்களில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தன. வேலைகளின் போது மட்டும் பெண்களுக்கும் சம உரிமை கிடைத்திருந்தது. உழவு இயந்திரங்கள் பெருமூச்சுடன் இயங்கிக் கொண்டிருந்தன.

"நீங்க எத்தினைமணி பஸ்ஸில திரும்புறனீங்கள்?" என்று உமா கேட்டாள்.

"சிலவேளை ஆறரைக்குள்ள பஸ் பிடிப்பன். சில வேளை பிந்தும்." பத்மா ஜன்னலால் வெளியே பார்த்தபடி பதிலளித்தாள்.

"அப்பவும் பஸ்ஸில சனமோ?"

"அவ்வளவு இல்லை"

பஸ் ஒருவரை இறக்கிவிட்டுப் புறப்பட்டது. நடத்துனர் சாரதியின் பின் ஆசனத்தில் அமர்ந்து எச்சில் தொட்டுக் காசு எண்ணிக் கொண்டிருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



"உம்மையல்லே நேரமிருக்கேக்க எங்கட வீட்ட வரச்சொன்னனான்" பத்மா உமாவிடம் கேட்டாள். இருவரும் ஒரே ஊர்தான் என்றாலும் முன்பு அதிகம் பழக்கம் இருக்கவில்லை. சமீப காலமாக ஆரம்பித்த இந்த ஒன்றான பஸ் பிரயாணத்தின்போதுதான் இருவருக்குமிடையில் நட்பு துளிர்க்க ஆரம்பித்திருந்தது.

"வரத்தான் வேணும். ஞாயிற்றுக் கிழமை மட்டும்தான் நீங்களும் பிரியா இருப்பியள். அதையுமேன் கெடுப்பானென்றுதான் வரேல" உமா சிரித்தபடி சொன்னாள்.

"சீசீ. அப்பிடியொன்றுமில்லை. நீர் தாராளமா வரலாம். இந்தக் கிழமை உம்மை எதிர் பாப்பன்" என்று பத்மா நட்பின் உரிமையுடன் சொன்னாள்.

உமா பதிலாகத் தலையாட்டினாள்.

பஸ் பள்ளங்களில் இறங்கி, மேடுகளில் ஏறிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது.

ஆட்களை பரப்பியபடி வந்த மினிபஸ் ஒன்று இந்த பஸ்ஸை விலத்தி விரைந்தது.

பாதைவிளிம்புடன் சைக்கிள்கள் உல்லாசமாகப் பயணம் செய்துகொண்டிருந்தன.

இடையில் தென்பட்ட கோயிலைக் கண்டதும் பஸ்ஸினுள் இருந்த இரண்டொருவர் கைகளால் சைகை செய்து நாகரிகமாக வணங்கிக் கொண்டார்கள்.

உமா எழுந்து கயிற்றை இழுத்து மணியை ஒலிக்கச் செய்தபின் நின்று கொண்டாள்.

தரிப்பிடத்தை அடையாளம் கண்டு கொண்ட பஸ் தற்காலிகமாக நின்று பெருமூச்சு விட "நாளைக்குச் சந்திப்பம்" என்று பத்மாவுக்கு சொல்லிக் கொண்டு உமா இறங்கினாள்.

நடத்துனர் றைற் சொன்னதும் பஸ் பயணத்தைத் தொடர்ந்து கொண்டது.

பாதையின் இருமருங்கிலும் பல வெண்மைகள் புத்தகங்களைச் சுமந்தபடி போய்க் கொண்டிருந்தன. கலகலவென சிரிப்புச் சத்தங்கள் வந்து கொண்டிருந்தன.

அவர்களைப் பார்த்ததும் பத்மா தனது பாடசாலை வாழ்க்

www.padippakam.com



கையை நினைத்துக் கொண்டாள். சட்டென ஏக்கம் மனதைத் தழுவியது.

அவசர அவசரமாக பள்ளிக்கூடம் போவதற்காக எழுந்து தயாரானதும், வேண்டா வெறுப்பாக சாப்பாட்டுப் பொதியைக் கொண்டு போனதும், பாதையில் தோழிகளுடன் கலகலத்துச் சிரித்ததும், வகுப்பில் ஆசிரியர் இல்லாத வேளைகளில் ,கும்மாளமடித்ததும், அதிக புள்ளிகள் எடுப்பதற்காகப் போட்டி போட்டுக் கொண்டு படித்ததும்.....

பழைய நினைவுகள் திடீர் சோகத்தை சிருஷ்டித்தன. நிகழ் காலங்களாய் இருக்க வேண்டியவையெல்லாம் கடந்தகாலங்களாகிப் போனதில் மனதில் ஒரு துக்கப் பாரம் தானகக் குடியமர்ந்தது.

இவற்றுக்கான காரணிகள் என்ன?

அம்மா!

பத்மா சட்டென எண்ணங்களைக் கலைத்துக் கொண்டாள்.

'அவற்றை நான் நினைக்கவே கூடாது. இப்போது நான்போகின்ற பாதைதான் சரியானது. பொருத்தமானது. எனக்கு மட்டுமல்ல. அம்மாவுக்கும்தான்'

அம்மாவை நினைத்துக் கொண்டதும் மறுபடி அவள் மனதில் சோகமும், பாரமும் ஒன்றன்பின் ஒன்றாக வந்துவிட்டன.

'அம்மாவையும், என்னையும் இந்த நிலைக்குத் தள்ளியதுயார்?

யார்? '

விடை தெரிந்தே இருந்தது. ஆனாலும் அந்த விடையை எதற்கும் பயன்படுத்த முடியவில்லை.

வெறுமனே யோசனைகளை உருவாக்கிக் கொள்வதிலும், அதில் தத்தளிப்பதும் தான் சுகமாக இருந்தது.

'அம்மா.

பழைய கறுப்பு, வெள்ளைப் படங்களில் இருந்த அம்மாவுக்கும் இப்போதைய அம்மாவுக்கும்தான் எவ்வளவு வித்தியாசங்கள்?

பாடித் திரியும் பறவைக்கும், ஓடி உழைக்கும் எருமைக்கும் வித்தியாசங்கள் இருக்கத்தானே செய்யும். பாடித் திரிவதால் மட்டுமே பறவை சந்தோசமடைந்து விடுகிறதா? உழைத்து உருக்குலைந்து போவதால் மாடுதான் தற்கொலை செய்து கொள்கிறதா?

படிப்பகம்

www.padippakam.com



மனிதர் உட்பட எல்லா உயிரினங்களுக்கும் எல்லாமே கிடைப்பதில்லை. கிடைக்காதவைகளுக்காக அந்த உயிர்கள் மரணிப்பதுமில்லை.

பணக்காரன் நிம்மதியில்லாமல் தவிக்கிறன். ஏழை பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறன். இருவருமே தமது விருப்பம் நிறைவேறும் என்ற எதிர்பார்ப்பிலேயே உயிர் வாழ்கிறர்கள்.

மனிதனின் வாழ்வை நிர்ணயிக்கும் காரணிகளில் எதிர்பார்ப்புகளும் அடங்குகின்றன.

தன்னுடைய வயதையும் தான் நினைத்துக் கொள்ளும் தத்துவங்களையும் எண்ணிப் பார்த்த பத்மா தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

வளைந்து, திரும்பி தனது வழக்கமான இளைப்பாறும் இடத்துடன் பஸ் தனது ஓட்டத்தை முடித்துக் கொண்டது.

# 4

கடைகளும், பாதையோர வியாபாரங்களும் ஏற்கெனவே விழித்துத் தயாராகிவிட்டன.

கடைக்காரர்கள் தங்கள் முன்னுள்ள நடைபாதையை ஆக்கிரமித்திருந்தார்கள். 'சாப்பாடு தயார்' பலகைகளும், பழப் பெட்டிகளும் கொஞ்சமிருந்த இடைவெளிகளையும் தடைசெய்து கொண்டிருந்தன.

அநேகமான வானொலிகள் தமிழ்ச்சேவை இரண்டை ஒலிபரப்ப சில கடைகள் மட்டும் வித்தியாசமாகப் பாடின.

தூரத்திலிருந்து வந்திருந்த கடையொன்று வாகனத்திலிருந்து பாதைக்குப் பரவிக் கொண்டிருந்தது.

புதிய உற்சாகங்களுடன் அனைவரும் களைப்புக்குத் தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

குறுகிய கால்வாய்களில் கறுப்பு நீர் ஏராளமான பதார்த்தங்களுடன் ஊர்ந்து கொண்டிருந்தது.

பத்மா நவீன சந்தையை அண்மித்தாள்.

'பானுமதி ரெக்ஸ்ரைல்' திறக்கப்பட்டிருந்தது. தரையில் மஞ்சள் தெளிக்கப்பட்டு, உள்ளே சாம்பிராணி மணத்தது.

படிப்பகம்

www.padippakam.com



பல வர்ணத் துணிகள் சுருண்டும், நெளிந்தும் வாசலில் கவர்ச்சி காட்டின.

காலை வணக்கத்திற்குப் பதிலாக புன்சிரிப்பை வெளியிட்டபடி தனது இடத்துக்குப் போனாள் பத்மா.

தவபாலன், ரகுராமன், மாலா எல்லோரும் ஏற்கெனவே வந்திருந்து வேலையை ஆரம்பித்திருந்தனர். பத்மாவும் சுறுசுறுப்பாக அவர்களுடன் இணைந்து கொண்டாள்.

கலைந்து போயிருந்த துணிச் சுருட்களை ஒழுங்குபடுத்தியும் அன்றைய அலங்கரிப்பில் ஈடுபட்டும் எல்லோரும் வேலையில் மும்முரமாக இருந்தனர்.

நகர் கொஞ்சம் கொஞ்சமாக வழக்கமான சுறுசுறுப்புக்கு வந்து கொண்டிருந்தது.

சனங்கள் தெருவில் பரவினார்கள்.

காலைப் படக்காட்சிக்காக படமாளிகை ஒன்று தயாராகிக் கொண்டிருந்தது.

அதிஷ்டம் நாடி வருவதாக சுவீப் விற்பவன் கத்த ஆரம்பித்திருந்தான்.

# 5

விளக்குமாற்றால் வளவைக் கூட்டி, பலாச் சருகுகளைக் குவியலாக்கினாள் வேதா. வியர்வை கொஞ்சமாக அரும்பியிருந்தது.

மரக் கொப்புகளில் காகங்கள் அமர்ந்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்தன.

கோழியொன்று சாவதானமாகப் படுத்திருந்து குஞ்சுகளின் அனுபவத்தைப் பரீட்சித்துக் கொண்டிருந்தது.

குவியலாக்கியவற்றைக் கடகத்தினுள் நிரப்பி, குப்பைக் கிடங்கினுள் கொட்டித் தனது வெளி அலுவல்களை முடித்துக் கொண்டு வீட்டினுள் வந்தாள். வெளி வேலைகளைத்தான் அவள் முதலில் முடிப்பாள். வெயில் வந்துவிட்டால் களைப்பு வந்துவிடும் என்ற பயம். கொஞ்ச நாட்களாக

படிப்பகம்

www.padippakam.com



தொந்தரவு செய்து கொண்டிருக்கும் தலைச் சுற்றல் வேறு.

வீட்டில் சுத்தம் செய்யக் கூடியளவிற்குத் தரை அழுக்காக இல்லாவிடினும் நித்தியமும் செய்து பழக்கமாகிப் போனதால் கூட்டித் துப் பரவாக்கினாள். தளபாடங்களை நேர்த்தியாகச் சரி செய்தாள்.

சமையலறைக்கு வந்தபோது வெயில் வந்துவிட்டது. பாத்திரங் களைச் சுத்தம் செய்து, பழையதுகளை வருத்தத்துடன் கொட்டி, அடுப்பிலிரு ந்த சாம்பலை வெளியேற்றி அவள் நிமிர்ந்த போது நேரம் இன்னும் கொஞ்சம் போய்விட்டது.

படுக்கையறைக்கு வந்து புடவைகளிருந்த அலமாரியைத் திறந் தாள். பத்மாவின் உடைகள் ஒழுங்கில்லாமலிருந்தன.

பத்மாவுக்கு நேரம் கிடைப்பதே அரிது.

திங்கள் முதல் சனிவரை அதிகாலை ஆறுமணிக்குப் போனால் திரும்பி வர இரவு ஏழு மணி, எட்டு மணியாகிவிடும். அதன் பின் சாப்பிட்டு விட்டு, அம்மாவுடன் கலந்துரையாடிவிட்டு அவள் படுத்துவிடுவாள்.

வேலை செய்த களைப்பு. தூக்கம் உடனே வந்துவிடும்.

ஞாயிறு ஒன்று மட்டும்தான் அவளுக்கு விடுமுறை தரும் கிழமை. ஒன்றாகச் சேர்ந்து சமைத்து, ஒன்றாகச் சாப்பிட்டு, கடந் காலங்களை மீட் டிப் பார்த்து ......

இப்படியே ஞாயிறும் போய்விடும்.

பிறகெங்கே உடைகளைச் சலவை செய்வது? வீட்டை அலங்கரி ப்பது?

எவ்வளவுதான் நேரமின்மையாக இருந்தாலும் அம்மா தன் முன்னால் கஉஷ்டப்பட பத்மா அனுமதிப்பதேயில்லை.

நேரமிருக்கும் போதெல்லாம் சமையல் என்றால் தானும் பங் கெடுத்து, தையல் என்றால் தானும் ஒத்தாசை செய்து பெருமளவு சிரம த்தைக் குறைக்க உதவுவாள்.

தையல் வேலை செய்ய வேண்டிய உடைகளைத் தனியாகத் தரம் பிரித்து எடுத்து வைத்துவிட்டு, சலவை செய்ய வேண்டியவைகளுடன் வேதா கிணற்றடிக்கு வந்தாள்.

வெயில் பளீரென்று அடித்தது.

தாவரங்கள் உற்சாகமாக ஆவியுயிர்ப்பு செய்து கொண்டிருந் தன.

படிப்பகம்

www.padippakam.com



பாதையில் போக்குவரத்தால் ஏற்படும் இரைச்சல்கள் இங்கும் கேட்டன.

வாளி ஒன்றிற்குள் நீர் நிரப்பி உடைகளை ஊற வைத்துவிட்டு இன்னொரு வாளியிலை வீட்டுத் தோட்டத்திற்கு நீர் பருக்கிறள் வேதா.

விரல்விட்டு எண்ணக் கூடியளவில் மிளகாய், கத்தரி, தக்காளிப் பயிர்கள் பசுமையாக வளர்ந்திருந்தன. ஆங்காங்கே சிவப்பு நிறங்களில் பழங்களும் எட்டிப் பார்த்தன. எறும்புகளின் அட்டகாசத்தால் ச்சாம்பல் பரவப்பட்டிருந்தது.

நீர்ப்பாசனப் படலம் முடிந்து சலவைப்படலம் ஆரம்பமானது. சவர்க்காரத்தால் புடவைகளை உரசி, குமிழ்களை உருவாக்கி, கும்மி, கைகளால் உரசி....

உடைகளைக் கொடியில் உலர்த்துவதற்காக தொங்க விட்டு நிமிர்ந்த போது வேதாவுக்கு உண்மையிலேயே நாரி நொந்தது. களைப்பை பெரிய மூச்சுகாளாக வெளியேற்றி வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது நெஞ்சு நோ ஆரம்பமானது.

வேதா கதவு நிலையுடன் சாய்ந்து நின்று தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள். நோ கொஞ்சம் கடுமையாகவே வருத்தவே அப்படியே படிகளில் இருந்து விட்டாள்.

திடீரென வெறுமை மனதில் பரவியது.

'சே என்ன வாழ்க்கை இது

ஒரு பிடிப்பும் இல்லாமல், ஆதரவும் இல்லாமல், சொந்தபந்தங்களின் நெருக்கமும் இல்லாமல்....

வாழ வேண்டுமென்பதற்காகவே வாழ்வது போல...

போல என்ன. அதேததான். வாழ வேண்டும். வாழ்ந்து காட்ட வேண்டும். எங்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் முன்னால் நிமிர்ந்து நிற்க வேண்டும்.

அவர்களை விட மேலே நிற்க வேண்டும்.'

வைராக்கியம் வேதாவின் நோவைக் கலைத்தது. ஒவ்வொரு முறையும் அவளை இதே வைராக்கியம்தான் தூண்டிக் கொண்டிருக்கிறது.

அவளுக்கு ஊட்டச்சத்தாக, உயிர்ச்சத்தாக, எல்லாமாக இருப்பதும் இந்த வைராக்கியம்தான்.

www.padippakam.com



வேதாவின் உறுதிக்கு இன்னும் பலம் சேர்த்தவள் பத்மா.இருவருமே தங்களுக்காகவும்,ஒருவருக்கொருவராகவும் தைரியம் சொல்லியும் ஆறுதல்படுத்தியும் வாழ்க்கையுடன் போராடிக் கொண்டிருந்தார்கள்.

முடியுமா என்று அவர்கள் எதையும் சிந்திப்பதில்லை. முடிய வேண்டும் என்ற முனைப்புடன்தான் செயற்பட்டார்கள்.

யாருடைய பரிதாபத்தையும் அவர்கள் ஏற்பதில்லை.பரிதாபங்களை, அனுதாபங்களை அவர்கள் அறவே வெறுத்தார்கள்.இது ஒருவரை கோழையாகவும்,உருப்படியில்லாதவராகவும் ஆக்கிவிடும் என்பது அவர்களுடைய பலமான நம்பிக்கை.

தெருவில் நாய்களுக்கிடையே மூண்ட கலவரத்தால் வேதாவின் கடந்தகாலம் கலைந்து சென்றது.

இனித்தான் அவள் கறிச் சாமான்கள் வாங்க வேண்டும்.பிந்தினால் முடிந்து விடும்.

வேதா அவசரமாகப் பையொன்றைத் தேடியெடுத்து வீட்டைப்பூட்டிக்கொண்டு கிளம்பினாள்.

விற்பனை ஒருபுறமாக நடக்க,ஊர் விவகாரங்கள் இன்னொரு புறமாக ஆராய்ச்சிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

"மலர் ஓடியிட்டுதாம்"

"கனகரும்,பெஞ்சாதியும் சண்டையாம்."

"குணம் பெட்டையை வீட்ட கொண்ணந்திட்டானாம்"

எல்லா விசயங்களும் மிகுந்த கரிசனையுடன் விவாதத்திற்குப் பொறுக்கப்பட்டிருந்தன.எல்லோரும் தங்கள் வீட்டுக் கதவுகளைப் பத்திரமாக மூடிவிட்டு அடுத்த வீடுகளின் திறப்புத் துவாரங்களினூடாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மரக்கறிகளை வாங்கிக் கொண்டு வருகையில் வேதாவையும் யாரோ பார்த்து விட்டார்கள்.

"என்ன அறக்கப் பறக்க ஓடுறாய்.கொஞ்சம் நில்லன்.கதைப்பம்"

"இல்லை.வீட்டில கனக்க வேலையள் கிடக்கு" வேதா நழுவப் பார்த்தாள்.

"நாங்களென்ன வேலையொன்றுமில்லாம சும்மா அலம்பிக்கொ

படிப்பகம்

www.padippakam.com



ண்டு நிக்கிறேமே?"

குரல்களில் கொஞ்சம் வித்தியாசம் தொனிக்க வேதா நின்று விட்டாள். யாரோக்களைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டு முடிந்து கடைசியாக வேதா பக்கமாகவே எல்லோரும் வந்து விட்டார்கள்.

"நேற்று ரவுனுக்க இந்திராவைக் கண்டனன். பெட்டை நல்ல சோக்கா இருக்கிறள்."

வேதாவுக்கு குப்பென்று வியர்த்தது. ஆத்திரம் பற்களில் வந்து கடிக்கப்பட்டது. "வீட்ட வேலையள் இருக்கு. நான் போறன்" என்று வேதா துண்டித்துக் கொண்டு புறப்பட்டாள்.

பின்னால் அவளுடைய பெயர் பலமாக அடிபட்டது.

## 6

"ஒருக்கா இங்க வாங்கோ" அடுப்படியிலிருந்து அசரீரி வந்தது.

கனகசுந்தரம் முன் விறாந்தையில் இருந்து சுவாரசியமாகவே 'பாதி உறவு' படித்துக் கொண்டிருந்தார். அசரீரி அவரை ஈர்க்கவில்லை.

"காது செவிடே. கூப்பிட்டது கேக்கலயே. ஒருக்கா இங்க வாங்கோ" இம்முறை கொஞ்சம் அதட்டலாகவே கேட்டது.

கனகசுந்தரம் சலிப்புடன் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு உள்ளுக்குப் போனார். 'சீ இந்த வீட்ட நிம்மதியா இருந்து ஒரு அலுவல் பாக்கேலாது. இருக்கிறதெல்லாம் பேய், பிசாசுகள்தான்' என்று . சொல்லிக் கொண்டது அவர் வாயல்ல. மனம்தான்.

சமையலறையில் நெருப்புக்கு முன்னால் நின்ற அன்னபூரணமும் சூடாகவே இருந்தாள்.

"என்னப்பா கத்துறீர்?" ஆத்திரமாகச் சொல்லப்பட வேண்டிய வார்த்தைகள் கனகசுந்தரத்தின் வாயிலிருந்து வரவேண்டியிருந்ததால் வெகு அவதானமாகவே வெளிவந்தன.

"ஆர் கத்துறது? அவசரத்துக்கு ஆளைக் கூப்பிட்டா வந்திடாதேங்கோ. ஒருசதத்துக்கும் பிரயோசனமில்லாத வேலையள் என்னத்தையேன்

படிப்பகம்

www.padippakam.com



பாத்துக்கொண்டு நான் முழுக்க கிடவுங்கோ" அருப்பிலே உலே கொதித்துக் கொண்டிருக்கக் கொஞ்சத் தூரம் தள்ளி அன்னபூரணம் நின்றிருந்தாள்.

நிலமை மோசமாகப் போவதை கனகசுந்தரம் புரிந்துகொண்டார். அதற்கு அவருடைய நீண்டகால அநுபவம் உதவியது.

"சரி சரி விசயத்தைச் சொல்லும். ஏன் கூப்பிட்டனீர்?" மிகவும் பௌவ்வியமாக அவரின் குரல் குழைந்தது.

"முருக்கங்காயெல்லலே புடுங்கித் தரச் சொன்னனான். தந்தனியனே. நான் இஞ்ச பாத்துக் கொண்டு வெக்கைக்க நிண்டு அவியிறன்" அன்னபூரணம் இன்னும் சாந்தமடையவில்லே.

"பொறும். இப்ப புடுங்கியாறன்" அங்கிருந்து வெளியேறினாலே போதும் என்ற நிலேயில் கனகசுந்தரம் அவசரமாக வெளியே வந்தார்.

வீட்டின் பின்னால் இரண்டு முருங்கை மரங்கள் சோடியாக நின்றன. பல கிளைகள் பிரசவிக்கப்பட்டிருந்ததால் ஏறுபவர்களுக்கு அதிக கஷ்டம் இருப்பதில்லே.

மரத்தை நெருங்கி வந்து அண்ணாந்தார் கனகசுந்தரம். காய்கள் இருக்கும் நிலேகளே அவர் கண்கள் குறித்துக் கொண்டன.

சாரத்தை மடித்துச் சண்டிக்கட்டுக் கட்டினர். ஐம்பது வயதிற்கு மேலிருந்த அவரின் உடலமைப்பு அந்தச் சாரக்கட்டுக்குப் பொருத்தமானதாக இருக்கவில்லே.

பொருத்தம் பார்க்கக் கூடிய சூழ்நிலேயா இது?

பொருத்தம் பார்க்காததால் அல்லவா இந்தச் சூழ்நிலேயே உருவானது.

கனகசுந்தரம் மரத்தில் படபடவென ஏறிவிட்டார். எல்லாம் அநுபவம்தான்.

பல காய்கள் வாழ்விழந்து தரைக்கு வந்தன. கொஞ்சம் தள்ளியிருந்த காய்க்காக ஆசைப்பட்டு அவர் பலமாக முயற்சிக்கையில் காயுடன் கொப்பும் சத்தத்துடன் முறிந்து கீழே விழுந்தது.

சத்தத்தைக் கேட்டுப் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஓடி வந்த நாய் அவரை மரத்தில் கண்டதும் வாலே ஆட்டியது.

"என்ன மரத்திலேயே படுத்திட்டியளே?" அன்னபூரணத்தின் குரல் அந்த வீட்டின் எந்தப் பகுதியில் நின்றாலும் கேட்டகக் கூடிய சிறப்

படிப்பகம்

www.padippakam.com



புத் தன்மை வாய்ந்தது.

யாருக்குமே கேட்டிருக்காத குரலில் "வாறேன்" என்றவர் மரத்திலிருந்தபடியே குனிந்து கீழே நின்ற நாயைப் பார்த்தார்.

ஒருகணம் நாயின் தலை மறைந்து அந்த இடத்தில் தன்னுடைய தலை இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டார்.

'சீ'

தானே உருவாக்கிய கற்பனையைத் தானாகவே அழித்துவிட்டு கீழே இறங்கி முருக்கங்காய்களைப் பொறுக்கிக் கொண்டு உள்ளே போய் பாரிய பொறுப்பை நிறைவேற்றிய திருப்தியுடன் மனைவியிடம் ஒப்படைத்து விட்டு மீண்டும் விறாந்தைக்கு வந்து 'பாதி உறவை'த் தொடர்ந்தார்.

'..... கனகேஸ்வரியைத் திருமணம் செய்து அதனால் வந்த வரவில் அடுத்த தங்கையின் திருமணத்தையும் சிறப்பாக நடாத்தி முடித் தார்' என்ற வரிகளை கனகசுந்தரம் முடிக்கையில் உள்ளேயிருந்து மறுபடி அவருக்கு அழைப்பு வந்தது.

"ஒருக்கா இந்தத் தேங்காயளை உரிச்சுத் தாங்கோ"

# 7

பிற்பகல் வெயில்.

பாடசாலையிலிருந்து புறப்பட்ட வெண்மைகள் பாதையில் பர வின. பாடப் புத்தகங்கள் மார்புடன் அணைக்கப்பட்டிருந்தன. வியர்வையால் உடைகள் உடலை நெருக்கமாக ஸ்பரிசித்தன. படித்த களைப்பு அனைவரின் முகங்களிலும் தெரிந்தது.

ரியூசன் வகுப்புகள் தொடர இருப்பதால் பலர் ஆயாசத்து டன் அவசரமாகப் போனார்கள்.

பாடசாலை முடிவடையும் சரியான நேரம் பார்த்து வந்திரு ந்த இளவட்டங்கள் சில மாணவிகளுக்காக அணிவகுப்பு நடாத்திக் கொண்டி ருந்தன.

சிலர் ரகசியமாகப் பிரிந்து போய் பிறகு சோடி சேர்ந் தார்கள்.

www.padippakam.com



உமா நிதானமாக நடந்து கொண்டிருந்தாள். கண்கள் யாரையோ தேடிக் கொண்டிருந்தன.

பாதையைப் பாவித்துக் கொண்டிருந்த கூட்டம் வர வர குறுகிக் கொண்டு வந்தது.

தூரத்தில் சைக்கிளுடன் நின்றிருந்த நிரஞ்சனை உமா அவதானித்து விட்டாள். அவனைக் கண்டதும் இனம் புரியாத உணர்வொன்று உடல் முழுவதும் பரவுவதை அவளால் உணரக் கூடியதாவிருந்தது.

இது ஏன் என்று அவளுக்கே புரியவில்லை.

தன்னுடைய மாற்றத்தை நினைத்துக் கொண்டவளுக்கு அதிசயமாகவே இருந்தது.

பள்ளிக்கூடம், வீடு என்றிருந்தவள் இப்போது எப்படி மாறிப் போய் விட்டேன்?

மாறவில்லை. நிரஞ்சன் மாற்றிவிட்டார்.

யார் அவர்?

யாரோ.

அப்படியென்றால் எப்படியிந்த மாற்றம் ஏற்படுகிறது?

உமாவுக்குப் புரியவில்லை. அதுதான் காதல் என்று நினைத்துக் கொண்டாள். காதல் என்று நினைத்துக் கொண்டதும் மறுபடியும் ஏதோ உணர்ச்சி உடலில் பரவியது.

எதையும் முற்று முழுதாக அவளால் தீர்மானிக்க முடியாமலிருந்தது. நிரஞ்சனைப் பாக்க வேண்டும் போலிருக்கிறது. அவருடன் கதைக்கவேண்டும் போலிருக்கிறது. அவருக்குப் பக்கத்தில் நடக்க வேண்டும்போலிருக்கிறது.

இப்படியான உணர்வுகளுக்குப் பேர்தான் காதலா என்று அவளுக்குத் தெரியவில்லை. அதனால் ஒரு பெயர் தேடுவதில் அவள் சிரமப் படவில்லை.

ஒரு நட்பு.

இது போதுமானதாக இருந்தது. இதற்கு என்ன பேரென்றாலும் அவள் அங்கீகரிப்பாள்.

"கனநேரமாவே நிக்கிறியள்?" உமா நிரஞ்சனை நெருங்கி

படிப்பகம்

www.padippakam.com



கேட்டாள். சொந்த ஊரிலிருந்து சில மைல்களுக்கப்பால் அந்நிய இடத்தில் வந்து படிப்பதால் யாரேனும் பார்த்து விடுவார்களோ என்ற பயம் இது வரை அவளுக்கு ஏற்படவில்லை.

"இப்பதான் வந்தனான்"

இருவரும் அருகருகாக நடந்தார்கள். நிரஞ்சன் சைக்கிளையுருட்டிக்கொண்டு வந்தான்.

"இண்டைக்கு ஸ்கூலில என்ன விசேசம்?" நிரஞ்சன் உமாவின் முகத்தைப் பார்த்தபடி கேட்டான்.

"ஒண்டுமில்லை. உங்கட பக்கம்?" உமா திருப்பிக் கேட்டாள்.

"ஏதாவது பாடம் பிறீயெண்டாத்தான் விசேசங்கள் நடக்கும். இண்டைக்கு எல்லா மாஸ்ரர்மாரும் வந்து துலைச்சிட்டினம்"

உமா சிரிப்பை உற்பத்தி செய்தாள்.

நிரஞ்சன் என்ன பகிடி சொன்னாலும் சிரிக்க வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. திடீரென இந்த நட்பை நீடிக்கையில் பயமும் வந்தது.

இந்த நட்பு நீடிக்குமா?

இந்த நட்பு சாத்தியமா?

இந்த நட்பை வீட்டில் அனுமதிப்பார்களா?

கேள்விகள்தான் சுலபமாக உற்பத்தியாகினவே தவிர பதில் எதுவும் கிடைக்கவில்லை. குழப்பம்தான் எஞ்சியது.

உமா குழம்பிக் கொண்டிருக்க விரும்பவில்லை. அதனால் கேள்விகளை ஒதுக்கி வைத்தாள்.

"நீரும் ரியூசனுக்கு வந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்?" நிரஞ்சன் ஏக்கத்தோடு கேட்டான்.

வசதியில்லை என்ற உண்மையைச் சொல்ல உமா பிரியப்படவில்லை. அதனால் "ஏன் ஒருக்கா சந்திச்சா காணாதே?" என்று சிரித்தபடி கேட்டாள்.

"காணாது. உம்ம பாக்காட்டி விசராயிருக்குது"

நிரஞ்சன் சொன்னதைக் கேட்டதும் சந்தோச அலைகள் பலமாக உமாவை மோதின. கூடவே பெருமிதமும் இணைந்து கொண்டது.

www.padippakam.com



'என்னில எவ்வளவு பிரியம் இவருக்கு'

அதன் பின் அவர்கள் சம்பந்தா சம்பந்தமில்லாமல் கதைத்துக் கொண்டு நடந்தார்கள்.

பாதையருகேயிருந்த வெளி ஒன்றில் மூன்று, நான்கு சிறுவர்கள் மாபிள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். உடைகளை முற்றாகத் துறந்திருந்த சிறுவன் ஒருவன் மரக் குற்றியொன்றில் பார்வையாளனைக் குந்தியிருந்தான்.

தேநீர்க் கடையொன்றின் முன் வாழைப் பழத் தோல்கள் அநாதையாகக் கிடந்தன. அருகே இருவர் வெற்றிலை, பாக்குப் போட்ட பின் சுண்ணாம்பை பக்கத்தில் நின்ற மரத்தில் பிரட்டிக் கொண்டிருந்தார்கள்.

பாதை சந்தியை அண்மிக்கையில் உமாவும், நிரஞ்சனும் ஜாக்கிரதையானார்கள். இருவருடைய நெருக்கத்தினதும் எல்லைகள் அத்துடன் முடிவடைகின்றன.

இனியும் அப்படியே தொடர்ந்து போனால் தெரிந்தவர்களின் கண்களில் அவர்கள் பட்டுவிடலாம். எனவேதான் இந்த எச்சரிக்கை.

"வேற என்ன? நாளைக்கி சந்திப்பம்"

"உம்"

உமா பிரிந்து போக நிரஞ்சன் சைக்கிளுடன் அப்படியே நின்றான். அவனுடைய கண்கள் உமாவின் பின்பக்கத்தைக் குறிப்பெடுத்துக்கொண்டிருந்தன.

"என்ன சரக்குப் போட்டுதே?"

திடீரெனக் கேட்ட குரல் நிரஞ்சனைப் : பிடிப்பிலிருந்து மீட்டது. பக்கத்தில் டேவிட் நின்றான்.

"நீ எங்க இந்தப் பக்கம்?" என்று நிரஞ்சன் கேட்டான். உமாவுக்கும் அவனுக்குமுள்ள 'நட்பை'ப் பற்றி அவனுடைய நண்பர்களுக்குத் தெரியுமாதலால் நிரஞ்சன் சங்கோசப்படவில்லை.

"பாட்டடிக்கக் குடுத்தனான். இண்டைக்கு எடுக்க வேணும். என்னைக் கொண்டு போய் றெக்கோடிங்பாறில இறக்கி விடுறியே?" என்று டேவிட் கேட்டான்.

"ஏறு"

டேவிட் கரக்குக் கம்பியில் உட்கார இருவரும் பயணித்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



"பெட்டை என்னவாம்?" டேவிட் ஒருகாலால் 'பெடல்' போட உதவிக் கொண்டு கேட்டான்.

"எங்களுக்குள்ள கனக்க இருக்கும். அதையெல்லாம் சொல்லே லுமே?" பெரிய மனுசத்தனமாக நிரஞ்சன் பதிலளித்தான்.

"அது சரி. பள்ளிக்கூடம் வந்தா ஒழுங்காய் படியுங்கோவன். அதைவிட்டிட்டு..." டேவிட் சொல்லிக் கொண்டிருந்ததை இடையில் நிறுத்தி விட, என்ன காரணம் என நிரஞ்சன் கவனித்தான்.

கொஞ்சத் தூரம் தள்ளி பாதையில் பெண்ணொருத்தி நடந்து வந்துகொண்டிருந்தாள்.

அழகான பெண்.

நிரஞ்சனின் கண்களும் அவள்மேல் பதிய சைக்கிள் பாதையிலிரு ந்து விலகியது.

## 8

விளக்குகளை அணைத்து, ஒவ்வொரு பலகைகளாகப் பொருத்தி கடையை மூடினார்கள். 'பானுமதி ரெக்ஸ்ரைல்' என்ற பெயர்ப் பலகைக்கு மட்டும் இரண்டு மின்சார விளக்குகள் ஒளி வழங்கிக் கொண்டிருந்தன.

வேலையாட்கள் கடமை முடிந்து ஒவ்வொருவராக விடைபெ ற்றுக்கொண்டு தங்கள் வழிகளில் போனார்கள்.

பத்மா பஸ் நிலையத்தை நோக்கி நடந்தாள். பின்னால் தவ பாலனும், ரகுராமனும் கதைத்துக் கொண்டு வந்தார்கள்.

சைக்கிள்களும், பாதசாரிகளும் போக்குவரத்தை அலட்சியம் செய்து பாதையைக் கடந்து கொண்டிருந்தார்கள்.

தேசிய லொத்தர் சபையின் இத்தனையாவது சீட்டிழுப்பென அதிஉ்டத்தை விற்றுக் கொண்டிருந்தவன் இன்னமும் அதே பெட்டிக்குள் இரு ந்தான்.

சண்டிக் கட்டுடன் இருவர் காரசாரமாக விவாதித்துக்கொண் டிருந்தார்கள். தகாத வார்த்தைகள் தணிக்கை செய்யப்படாமல் தாராள

www.padippakam.com



மாகச் சிந்தப்பட்டுக் கொண்டிருந்தன.

பஸ்நிலையத்தில் கூட்டம் அதிகமாக இல்லை. நின்றவர்களில் அதிகமானோர் வேலை முடிந்து வந்தவர்களே.

ஆட்கள் இல்லாத இடத்தில் பஸ்வண்டிகள் காத்திருந்தன. பிரயாணிகள் ஏறியிருந்த பஸ் ஒன்றில் சாரதியும், நடத்துனரும் காணாமல் போயிருந்தார்கள்.

பத்மா பஸ்நிலையத்தின் கம்பிகளுக்கிடையே போய் சாய்ந்து நின்றாள். களைப்பு உடம்பில் இருப்பதை முகம் அடையாளப்படுத்தியது.

ரகுராமனும், தவபாலனும் கதைத்தபடியே அவள் பக்கத்தில் வந்து நின்றார்கள்.

மூவருமே ஒரே இடத்தில் வேலை செய்தாலும், மூவரும் ஒன்றாகப், பகிரங்கமாகச் சிரித்துக் கதைக்கக் கூடாது. இது சமூகத்தின் கட்டளை. இதை மீறுபவர்களுக்கு அபராதமாக பல்வேறு கதைகள் கட்டப்படுவதுடன் வேறு பெயர்களும் உண்டாக்கப்படும்.

ஆண் ஆணோடுதான் கதைக்கலாம்.
பெண் பெண்ணோடுதான் கதைக்கலாம்.

மனசில் நிறைய அழுக்கிருந்தாலும் இந்த விதிகளின்படி நடப்பவர்கள்தான் சமூகத்தில் 'நல்ல பிள்ளைகள்'.

மனதில் எந்தக் களங்கமுமில்லாமல் 'பால்' மாறிக் கதைப்பவர்கள், பழகுபவர்கள் 'கெட்டுப் போனவர்களே'.

பத்மா இந்த விதிகளை அறவே வெறுத்தாலும் ஆண் நண்பர்கள் அவளுடன் சரளமாகப் பழக கூச்சப்பட்டதால் இந்த விஷயத்தில் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. மனதில் கள்ளமுள்ளவர்களால்தான் சகஜமாகப் பழக முடியாது என்று அவளுக்குத் தெரியும்.

பத்மாவுக்குத் தன்னுடன் வேலை செய்பவர்களில் தவபாலனைத்தான் மிகவும் பிடிக்கும். ஏனெனில் இவளைப் போலவே கலை, இலக்கியங்களில் அவனுக்கும் ஆர்வம் இருந்தது. சமுதாயக் கலைகளைப் பிடுங்கும் விருப்பம் இருந்தது.

கடையில் இருக்கையில் கொஞ்சம் சுதந்திரம் இருப்பதாக நினைத்ததால் ஓய்வு கிடைக்கையில் இருவரும் தாராளமாக உரையாடுவார்கள். அவர்களுடைய உரையாடல்கள் முழுக்க முழுக்க எழுத்துலகத்தைப் பற்றியே இருக்கும்.

www.padippakam.com



தான் வாசித்தவற்றைப் பற்றித் தவபாலன் விமர்சிப்பான். பத்மா தான் படித்தவற்றை விமர்சிப்பாள். இலக்கியங்கள் எந்தளவிற்கு மக்களுக்குப் பயன்படுகின்றன என்பது பற்றி இருவரும் விவாதிப்பார்கள்.

இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும்போது மற்றவர்கள் இவர்களை இடையூறு செய்வதில்லை. ஏனெனில் அதே நேரம் அவர்கள் புதிய உடைகளைப் பற்றியோ, புதிதாக வந்த சினிமாவைப் பற்றியோ ஆழமாக ஆராய்ந்து கொண்டிருப்பார்கள்.

தவபாலனை இன்னொரு காரணத்திலும் பத்மாவுக்குப் பிடிக்கும். அவன் அதிகம் விரும்புவது தற்போது பாரதி என்ற பெயரில் பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருக்கும் கவிஞனின் கவிதைகளைத்தான். பாரதியின் கவிதைகள் யாவுமே பெண்ணடிமைத்தனத்தைப் பற்றியதும் குறிப்பாக சீதனக்கொடுமை பற்றியதுமாகவுமே இருக்கும். ஓர் ஆண் இந்தக் கருத்துகளை வரவேற்று ஏற்றுக் கொள்வது பத்மாவுக்குத் திருப்தியாக இருக்கும்.

"அம்மா"

மூக்குச்சளி வழிந்து கொண்டிருக்கும் நிர்வாணக் குழந்தையை வசதிக் குறைவாகத் தூக்கி வைத்துக் கொண்டு சின்னப் பெண் ஒருத்தி கையை நீட்டியபடி வந்து கொண்டிருக்க, எல்லோரும் வேறெங்கோ பிராக்குப் பார்த்தார்கள்.

தவபாலன் ரகுராமனிடம் ஏதோ சொல்லிவிட்டு எங்கேயோ போனான்.

"எங்க போறார்?" என்று பத்மா ரகுராமனைக் கேட்டாள்.

"ஏதோ புத்தகம் வாங்கவாம்"

"என்ன ஒருமாதிரிச் சொல்லுறியள். புத்தகங்கள் எண்டால் உங்களுக்குப் பிடிக்காதே?"

"ஏன் பிடிக்காது? பொம்மை, பேசும்படம் எல்லாம் நல்லாய் வாசிப்பன்" ரகுராமன் சொல்லிவிட்டுச் சிரித்தான். அவனுடைய ரசனையை நினைத்துப் பத்மா சிரித்துக் கொண்டாள்.

இவர்கள் இருவரும் கதைத்துக் கொண்டிருப்பதை பஸ் நிலையத்தின் முன்னால் உள்ள கடையொன்றில் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்த பத்மலிங்கத்தின் கண்கள் கவனித்துக் கொண்டிருந்தன.

www.padippakam.com



# 9

பஸ்ஸிலிருந்து இறங்கியதுமே உமாவுக்குக் களைப்பு வந்து விட்டது. ஆயாசம் அவசரமாகத் தோன்றியது.

பழைய பாதை. பழகிப்போன மனிதர்கள். அதே வீடு. வீட்டில் அதே ஆட்கள். உமா சலித்துக் கொண்டவாறு பாதையைப் பாவித்து கொண்டிருந்தாள்.

சூரியன் வழக்கம் போல் மேற்கே போய் மர்மான முறையில் ஏதோ செய்துவிட ஆகாயம் முழுவதும் ரத்தம் பரவியது. பறவைகள் பயத்திலை அவசரப்பட்டு வீடு திரும்பின.

தோட்டங்களில் தம்மைப் பணயம் வைத்திருந்தவர்கள் பயிர்களுக்குப் போகும் மோட்டார் நீரில் குளித்துக் கொண்டிருந்தார்கள். வரப்புகளில் இரண்டொரு காகங்கள் உடம்பை நனைத்துச் சிலிர்த்துக் கொண்டிருந்தன, மாடுகள் எந்த அக்கறையுமில்லாமல் அசை போட்டுக் கொண்டிருந்தன.

வீட்டில் தேடுவார்கள் என்ற பயத்தை மறந்து புழுதி மண்ணில் சிறுவர்கள் உற்சாகமாக விளையாடி அழுக்காகிக் கொண்டிருந்தார்கள்.

உமா நெஞ்சில் நிறைந்த கனவுகளை ஆராய்ந்து கொண்டிருக்க, கால்கள் பழக்கப்பட்ட பாதையில் பத்திரமாக அவளை வீடுநோக்கி அழைத்துப் போய்க்கொண்டிருந்தன.

வீட்டின் கதவருகே சோமசுந்தரம் நிற்பது முன்படலையைத் திறக்கையில் அவள் கண்களில் பட்டது. மனதில் ஒரு ஆயாசம் ஏற்பட்டது. 'இனி இவருக்கு விளக்கம் சொல்ல வேணும்'.

உமா தன்னைத் தாண்டுகையில் சோமசுந்தரம் தனது வழக்கமான கேள்வியைக் கேட்டார். "ஏன் மோனை பிந்தினது?"

கேள்வியிலிருந்த பரிவு ஒருகணம் அவளை நெகிழ வைத்தாலும் வழக்கமான கேள்வியாததால் எரிச்சலும் வந்தது. "பஸ் பிந்திப் போச்சு"

"பொய்" நிரஞ்சன் மனதிலிருந்து சிரித்தான். அவனைக் கலைத்தபடி உமா தனதறைக்குப் போனாள்.

சோமசுந்தரம் இன்னும் அப்படியே நின்றார். இன்னும் இருவருக்காக அவர் நிற்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



மையொற்றித் தாளில் மை பரவுவது போல இருள் ஆகாயத்தை மூடிக் கொண்டு வந்தது. தெரு விளக்குள் இருளை நம்ப மறுத்துப் பேசாமலிருந்தன. சைக்கிள்காரர்கள் ஒளியைச் சிக்கனப்படுத்தி மணியடித்துக் கொண்டு போனார்கள்.

சீதாவும், கமலனும் படலையைத் திறப்பதை சோமசுந்தரம் அவதானித்துவிட்டார். முகத்தில் திடீர் சந்தோசம் வந்தது.

"அப்பா" ஓடிவந்த இருவரும் சோமசுந்தரத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டார்கள். உணர்ச்சியால் நெகிழ்ந்து போனவர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "ஓடிப் போய் முகம் கழுவிக் கொண்டு வாருங்கோ" என்று உத்தரவிட்டார். குரலில் கண்டிப்பு கொஞ்சமும் எட்டிப் பார்க்கவில்லை.

சீதாவும், கமலனும் உள்ளே ஓடினார்கள். கொப்பி, புத்தகங்களை வைத்துவிட்டு கிணற்றடிக்குப் போனார்கள். தொட்டிக்குள் நிரம்பியிருந்த நீரை பாவித்தார்கள்.

தொடர்ந்து கதவில் சாய்ந்திருந்தபடி தண்ணீர் எற்றி அவர்கள் கும்மாளமடிப்பதை சோமசுந்தரம் ரசித்துக் கொண்டிருந்தார்.

தலையில் வழுக்கை வந்தும் எஞ்சிய மயிர்கள் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டிருந்தன. தலையிலும், மீசையிலும் சில மயிர்கள் மட்டும் வெள்ளி பூசியிருந்தன. தொந்தி இல்லாமல் உடம்பு உறுதியாகவே இருந்தது. வெள்ளை அரைக் கைச்சட்டையும், வெள்ளை வேட்டியும் கட்டியிருந்தார். அதுதான் அவரின் தேசிய உடை.

"கழுவினது காணும். வாங்கோ" என்று இவர் இங்கிருந்து குரல் கொடுக்க, அது காற்றுடன் போய் சீதாவையும், கமலனையும் பணிக்க அவர்கள் வீட்டுக்குள் வந்தார்கள்.

தம்பியும், தங்கையும் உள்ளேவர அக்கா கிணற்றடிக்குப்போனாள்.

ஈரத்தைத் துடைத்து, விபூதி பூசிக்கொண்டு கமலனும், சீதாவும் அப்பாவிடம் வந்தார்கள்.

"இன்டைக்கு என்ன படிச்சனியள்?" பக்கத்தில் வந்து அமர்ந்தவர்களை ஆதரவாக அணைத்தபடி சோமசுந்தரம் கேட்டார்.

அவர்கள் தமது பிற்பகலை அப்பாவுக்கு ஆர்வமாக விபரித்தார்கள்.

www.padippakam.com



உமா செருப்பிலிருந்த மண்ணை உதறிவிட்டு ஈரம் பதிய உள்ளேவந்தாள்.

"பிள்ளை எல்லாருக்கும் தேத்தண்ணி போடுறியே?"

அப்பாவின் கேள்வி எரிச்சலையூட்ட உமா மனதிற்குள் சினந்தாள். 'நாள் முழுக்க பள்ளிக்கூடத்தில நின்டு காய்ஞ்சு போய் வாறன். வீட்ட இருந்து கொண்டு தேத்தண்ணி போட்டுத் தரட்டாம்'

"தலையிடிக்குதப்பா. இன்டைக்கு நீங்கள் வைக்கிறியளே?" கேள்விக்குப் பதிலாகக் கேள்வியைக் கேட்டுவிட்டு உள்ளே போய்விட்டாள்.

'பாவம் பிள்ளை. விடிய வெள்ளனப் போய் இப்பதானே வீட்டவாறாள். பஸ் பிரயாணத்திலயே அரைவாசித் தலையிடி வந்திடும்' மகளைப் பற்றிக் கவலைப்பட்டபடி சோமசுந்தரம் எழுந்து சமையலறைக்குப் போனார்.

சோமசுந்தரம் முன்னாள் தமிழ் வாத்தியார். மனைவி அகால மரணமாகி அவசரமாக அவர்களை விட்டுப் பிரிந்தபின் அவர் தன்னுடைய வேலைக்கு முழுக்குப் போட்டுவிட்டார். பிள்ளைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பு அவருடன் இரண்டறக் கலந்துவிட்டது.

தாய் வேடம் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம். அதையும் சிறப்பாகச் செய்து கொண்டிருந்தார். பிள்ளைகள் மறைந்துபோன அம்மாவைவிரைவில் மறந்துவிடும் அளவிற்கு அவர் அவர்களைத் திருப்திப்படுத்திக் கொண்டிருந்தார்.

பொருளாதார நிலமை மோசமாகப் பாதித்துக் கொண்டிருந்தாலும் சோமசுந்தரம் பிள்ளைகளின் அத்தியாவசியத் தேவைகளைத் தன்னாலானவரை நிவர்த்தி செய்து கொண்டு வந்தார். உமாவின் வயது குறிப்பிட்ட வயதிற்குப் பின் அதிகரித்துக் கொண்டு போகும்போதுதான் அவரைக் கவலை மெல்லத் தட்டியது. சேமிப்பு என்பதைப் பற்றி அவர் சிந்திக்க நேரமிருந்ததே தவிர செயலாக்க வசதியிருக்கவில்லை.

வீட்டில் யாருமில்லாமல் தனியே இருக்கையில் என்ன செய்யலாம் என்று கையைப் பிசைந்து கொண்டிருப்பார். சில சமயங்களில் கண்ணீர் கூட எட்டிப் பார்க்கும். பணம் தின்னும் பிராணிகளுக்கிடையில் ஒரு மனிதன் எங்காவது இருக்க மாட்டானா என்று தன்னைத்தானே ஆறுதல் படுத்திக் கொள்வார்.

கமலாம், சீதாவும் ஏதோ ஒரு விளையாட்டை ஆரம்பித்துச் சுவாரசியமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

www.padippakam.com



அறைக்குள் போன உமா வெளியில் வரவில்லை. தலை வாரிய படி நிரஞ்சனுடன் மனதால் கதைத்துக் கொண்டிருந்தாள்.

நுரை பொங்க ஆற்றிய தேநீர்க் குவளைகளை கமலன், சீதா வுக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு கையில் ஒரு குவளையுடன் உமா இருந்த அறைக்குள் சோமசுந்தரம் பிரவேசித்தார்.

"சுடச்சுடக் கொண்டு வந்திருக்கிறன். அப்பதான் தலையிடி போகும்" என்று பரிவுடன் சொன்னபடி குவளையை அவள் பக்கத்தில்வைத் தார்.

"உதில வையுங்கோப்பா. நான் குடிக்கிறன்" உமா தொடர்ந்து தலைவாரினாள்.

கதவு வரை போன சோமசுந்தரம் நின்று திரும்பிப் பார்த் தார். கண்ணாடியைப் பார்த்து உமா சிரித்துக் கொள்வது தெரிந்தது. தனக் குள் யோசனைகளைச் சேகரித்தவாறு அறையைவிட்டு வெளியே வந்தார்.

இரவுச் சமையலில் சோமசுந்தரம் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுதும் உமாவைப் பற்றிய யோசனைகளே அவரை உபத்திரவம் செய் தன. அநாவசியக் கவலைகள் எல்லாம் வந்தன.

சீதாவும், கமலனும் சாப்பிட்டுவிட்டு சீக்கிரமே தூங்கிப் போனார்கள். உமா ஏதோ படித்துக் கொண்டிருந்தாள். சோமசுந்தரம் முன் விறாந்தையில் உட்கார்ந்து நிலவைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மேகங்களின் இடையூறுகளைத் தாண்டி விரைந்து கொண்டிருந்த சந்திரன் இரவல் ஒளியைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

இராக்கால உயிரினங்கள் இடையிடைய சத்தமிட்டு தமது விழி ப்பை அறிவித்துக் கொண்டிருந்தன.

பக்கத்தில் நிழல் தெரிய உமா புத்தகத்திலிருந்து பார்வை யை விலத்தினாள். சோமசுந்தரம் அவள் பக்கத்தில் வந்து தரையில் உட்கா ந்தார்.

"என்னம்மா படிக்கிறாய்?"

"கதைப் புத்தகம்"

"வீட்டுப் பாடங்கள் ஒண்டும் இல்லையே?"

"எல்லாம் செய்து முடிச்சிட்டன்" உமா புத்தகத்தை மூடி வைத்தாள். அப்பா ஏதோ கதைக்கப் போகிறார் என்பதை அவளால் ஊகிக் க்க முடிந்தது.

www.padippakam.com



"எனக்கும் வயசு போகுது. எவ்வளவு நாளக்கி நான் இருப்ப னெண்டு எனக்கே தெரியாது. நீதான் மூத்த பிள்ளை. உன்னையும் தம்பி, தங் கச்சியையும் பாக்க வேண்டிய பொறுப்பு உன்னட்டதான் இருக்கு. உன்ரை பொறுப்பை நீ தெரிஞ்சு கொள்ள வேணும்" சோமசுந்தரம் சுவரில் மாட்டப்பட்டிருந்த நாட்காட்டியைப் பார்த்தபடி கதைத்துக் கொண்டிருந் தார்.

உமா அக்கறையில்லாமல் கேட்டுக் கொண்டிருந்தாள். அவ்வப் போது அப்பாவால் அவளுக்கு இப்படி பொறுப்பு நினைவூட்டல் நடைபெறு வதால் இப்போது கேட்கையில் அவளுக்கு அலுப்படித்தது.

"நானும் எவ்வளவோ முயற்சி செய்யிறன். ஒரு சதம்கூட என் னால சேமிக்கேலாம இருக்கு. அதாலதான் நான் கவலைப்படுறன். நீ படி ச்சு, முடிச்சு வேலைக்கு போக வேணும். உனக்கொரு கலியாணத்தைப் பண் ணிவைக்க வேணும்...."

அப்பா கல்யாணம் என்று உச்சரித்தவும் உமா ஒரு கணம் மின்சாரத்தைக் கடத்தினள். நிரஞ்சன் வந்துவிட்டான்.

"நாங்கள் கலியாணம் செய்ய ஒரு தடையும் வராதே?"

"வரவேணும். அப்பதான் லவ்வில ஒரு இன்ரஸ்டே வரும்"

"உங்களுக்குப் பகிடியா இருக்கு. என்ரை பயம் எனக்கல்லோ தெரியும்"

"யாமிருக்கப் பயமேன்"

"பெரிய முருகன் இவர்" உமாவுக்குச் சிரிப்பு வர திடுக்கி ட்டு அப்பாவைப் பார்த்தாள்.

சோமசுந்தரம் அங்கில்லை.

## 10

பத்மா மாவைக் குத்தி, புட்டு என்ற பெயரைக் கொடுக்கத் தயாராகிக் கொண்டிருந்தாள். வேதா குழம்பைக் கரண்டியால் எடுத்து கையில் ஊற்றி, நாக்கால் நக்கி ருசி பார்த்தாள். உப்பு பற்றாக்குறை தெ ரியவே கொஞ்ச உப்பெடுத்துக் கொட்டிக் கலக்கினள்.

படிப்பகம்

www.padippakam.com



இரவுச் சமையல் எப்போதும் அவர்கள் இருவரினதும் கூட்டுத் தயாரிப்பாகத்தான் இருக்கும். அந்த இணைவில் இருவருக்கும் ஒரு ஆனந்தம் இருக்கும்.

"இண்டைக்கு வேல செய்யிற இடத்தில என்ன விசேசம்?" அடுப்பிலிருந்து கொஞ்சம் விலகி வேதா விசாரித்தாள்.

"என்ன ஒவ்வொரு நாளையையும் போல படக் கதைதான்" பத்மா தேங்காய்ப் பூவைக் கலந்தாள்.

"ரவுணுக்குள்ள விசேசம் ஒண்டுமில்லையே?"

"எல்லாம் வழமைதான்" நீத்துப் பெட்டி நிரப்பப்பட்டது.

பத்மலிங்கத்தைப் பற்றிக் கேட்க நினைத்து பின் தனது நினைப்பை வேதா மாற்றிக் கொண்டாள்.

புட்டு அடுப்பில் ஏற்றப்பட்டது. அது தயாராகி வரும் வரை தாயும், மகளும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். சமையல் முடிந்ததும் ஒருவருக்கொருவர் பரிமாறியபடி ஒன்றாகச் சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடிந்ததும் முன் கூடத்திற்கு வந்து அமர்ந்தார்கள்.

வேதா சட்டையொன்றுக்குத் தெறி தைக்க ஆரம்பித்தாள். பத்மா ஒரு தாளில் என்னவோ எழுதிக் கொண்டிருந்தாள்.

"இந்தக் கிழமை துரையண்ணையை வரச் சொல்லலாமெண்டு நினைக்கிறன்" வேதா சொல்லிட்டு மகளைப் பார்த்தாள். பத்மா தொடர்ந்து கவனமாக எழுதிக் கொண்டிருந்தாள்.

"நடக்க வேண்டிய காரியங்கள் அந்தந்தக் காலத்தில நடக்க வேணும். அப்பதான் எல்லாருக்கும் சந்தோசமாயிருக்கும்"

"அம்மா, தயவு செய்து உந்தக் கலியாணக் கதையை மட்டும் கதையாதேங்கோ. எனக்கு ஆரையாவது கலியாணம் கட்ட வேணுமெண்டு விருப்பமிருந்தால் நானே உங்களிட்ட சொல்லுவன் என்டு எத்தினை தரம் சொல்லிப் போட்டன். இப்ப என்னைக் கரைச்சல் படுத்தாதேங்கோ" நிதானமாகச் சொல்லிவிட்டு பத்மா மறுபடி எழுதத் தொடங்கினாள்.

வேதா புரிப்புடன் மகளைப் பார்த்தாள். மகளின் இந்தவெளிப்படையான குணம்தான் வேதாவுக்கு மிகவும் பிடித்தது. ஆனாலும் மகளுக்கு வயது கூடிக்கொண்டு போகிறதே என்ற கவலையும் உருவானது. தனக்கும் ஏதாவது நடந்து விட்டால் இந்தப் பெண் யாருமில்லாமல் தனித்து விடுவாளே என்ற பயம் அவளை வதைத்தது.

படிப்பகம்

www.padippakam.com



தனியாக ஒரு பெண்ணால் இந் நாளில் வாழ முடியாதா?

ஏன் முடியாது?

வேதா தன்னையே உதாரணமாக்கிப் பார்த்தாள். என்னால் முடிந்தபோது என்னுடைய மகளால் முடியாதா? நிச்சயம் முடியும்.

துணையை நம்பி யாரும் பிறப்பதில்லை. துணையை நம்பி யாரும் வாழ்வதில்லை. வாழ்க்கை என்பது தனி ஒருவரைப் பொறுத்தது. அவரின் விருப்பத்தைப் பொறுத்து அமைக்கப்படுகிறது.

தனியாகத்தான் எல்லோரும் பிறக்கிறார்கள். தனியாகத்தான் எல்லோரும் இறக்கிறார்கள். இடையில் மட்டும் ஏன் துணை வேண்டும்?

வேதா ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவளால் நன்றாகச் சிந்திக்க முடியும். அப்படியில்லையென்றால் இன்று இந்த நிலையில் அவளால் இருந்திருக்க முடியாது.

பழைய காலங்கள் மெல்ல அவளை நெருங்கின. அவைகள் மறந்துபோக முடியாதபடி அடிக்கடி அவளுடன் தொடர்பு கொள்ளும்.

இளமை நேரம்.

வேதா பாடசாலை முடிந்து, தோழிகளுடன் அரட்டையடித்துக் கொண்டு, வீடு வர அவர்களைப் பிரிந்து, உள்ளே வந்தபோது அவளுக்காக ஒரு புதுமை காத்திருந்தது.

"கெதியிலை முகம் கழுவி உடுப்பு மாத்து. ஆக்கள் வரப்போகினம்" என்று அப்பா என்றுமில்லாதவாறு அவசரமாக இருந்தார்.

"ஆர் வருகினம்" வேதா அம்மாவைக் கேட்டாள்.

"மாப்பிள்ளை வீட்டுக்காறர்"

பதிலைக் கேட்டு வேதா சிலிர்த்துப் போய் நின்றாள். யாரும் அவளை ஒன்றும் கேட்கவில்லை. அந்த விசயத்தைப் பற்றி அவளுடன் கதைக்கவுமில்லை.

அவளைப் பொருட்படுத்தாமலே பெண் பார்க்கப்பட்டது. பேச்சுக்கால்கள் நடந்தன. நாள் குறிக்கப்பட்டது. அழைப்பிதழ்கள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன. வீட்டுக்கு வெள்ளையடிக்கப்பட்டது. வளவு துப்பரவாக்கப்பட்டது. கதியால்கள் புதிதாக முளைத்தன. இரவல் தளபாடங்கள், பாத்திரங்கள் வீட்டை நிறைத்தன. எந் நேரமும் ஆட்கள் ஆர்ப்பாட்டமாக இருந்தார்கள்.

www.padippakam.com



ஆனால் ஒருவர் கூட அவளிடம் எந்த அபிப்பிராயமும் கேட்கவில்லை.

பெரியோர்கள் நிச்சயித்த சுபமுகூர்த்தத்தில், முகத்தில் மறைப்புப் போட்டுக் கொண்டு வேதா தலை குனிந்திருக்க, மாப்பிள்ளை அவளுடைய கழுத்தில் தாலியைச் சுற்ற, பின்னால் நின்றவர்கள் சுரையைப் பூட்டி வளையமாக்க வேதாவுக்குத் திருமணம் நடந்து விட்டது.

பின்னர்.....?

வேண்டாம். அந்த நினைவுகள் இப்போது வேண்டாம். தற்போதைய என் மூச்சு மகள். அவளைப் பற்றி மட்டும்தான் நான் சிந்திக்க வேண்டும். அவளைவிட வேறெதையும் சிந்திக்கக் கூடாது.

வேதா மகளைப் பார்த்தாள். கடதாசியும், பேனவும் கீழே விழுந்திருக்க பத்மா சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

# 11

மாமரங்களுக்குக் கீழ் கதிரைகளைப் போட்டு கனகசுந்தரமும், வைத்தியநாதனும் உட்கார்ந்திருந்தார்கள்.

கீழே பசும் புல் பரவியிருந்தது. மரக் கொப்புகளினூடாக வெயில் அவர்களைத் தேடியது.

மணியத்தாற்றை நிலமையைப் பாத்தியளே?" என்று வைத்தியநாதன் அன்றைய அரட்டையை ஆரம்பித்தார்.

"ஓமோம். எல்லாம் சவூதிக் காசு செய்யிற வேலதான்" கனகசுந்தரம் பேச்சு சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

"உந்த ஏஜன்சிமாரை உதைச்சாத்தான் சனம் திருந்தும். புதிசுகு கூட மாத்தேலாம பிஞ்ச வேலியோட இருந்தவர் இப்ப மதில் கட்டிப் போட்டுக் கெப்பராய் திரியிறர்." வைத்தியநாதனிடமிருந்து புகைச்சல் கிளம்பியது.

பணம் பணத்துடன்தான் சேர வேண்டும். பணக்காரன் எப்போதுமே பணக்காரனுக இருக்க வேண்டும். ஏழை ஏழையாகவே இருக்க வேண்டும். இந்த விதிமுறைகள் எப்போதும் மாறமலிருக்க வேண்டும் என்று விரும்

படிப்பகம்

www.padippakam.com



பும் பணக்கார வர்க்கத்தின் ஒரு அங்கத்தவர்நான் வைத்திய நாதன். பார்த்தசாரதி, கல்கி போன்றவர்களின் கதைகளைப் படித்துவிட்டு ஜமீன்தார் காலத்தில் தான் இல்லாமல் போய் விட்டேனே என்று அடிக்கடி வருத்தப் பட்டுக் கொள்வார்.

வைத்தியநாதனுக்கு சொந்த வீடு, வளவுகள் இருந்தன. வீட்டிலிருக்கும் பெண்களின் உடம்புகளில் ஆபரணங்கள் காய்த்திருந்தன. ஏதோஒரு 'பிசினஸ்' செய்கிறார். கறுப்பாகவும், வெள்ளையாகவும் பணம் போதுமான அளவு நிரம்பியிருக்கிறது. ஒரே மகள். ஆ.ர இடத்தில் படித்துக் கொண்டிருந்தாள்.

கனகசுந்தரம் மத்தியதரக் குடும்பத்தில் கஷ்டப்பட்டு உயர்ந்தவர். சுழற்சி முறை சீதன ஒழுங்குகளால் வாங்கிக் கொடுத்த இந்தவீட்டில் 'சிறை' புகுந்தவர். வைத்தியநாதன் தனது பணக்காரத் திமிரைக் காட்டும் போதெல்லாம் கனகசுந்தரத்துக்குப் பற்றியெரியும். ஆனால் தன்மானம், ரோசம் என்பவற்றை அவர் வெகு காலத்துக்கு முன்பே தொலைத்திருந்தமையால் பேசாமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பார்.

"அற்பனுக்குப் பவிசு வந்தா அர்த்த ராத்திரியில குடை பிடிச்சுக்கொண்டு போறனாம். அது மாதிரித்தான் மணியத்தாற்ற கதையும். பெடியன் சவுதிக்குப் போய் உழைச்சு அனுப்பிறது தான் ஆரெண்டதை மறக்கிறதே?" வைத்தியநாதன் தொடர்ந்து புகைந்தார்.

"அதென்டா மெய்தான்." என்று சொல்லிவிட்டு தற்செயலாக தன்னுடைய குரலில் நக்கல் தெரிந்து விடுமோ என்று கனகசுந்தரம் பயந்து போனார்.

"இதெல்லாம் உங்களுக்குத்தான் விளங்கும். அது தானே நான் உங்களோட வந்து கதைக்கிறனான். ஆனா ஊர்ச்சனம் என்ன கதைக்குது தெரியுமே? நான் என்ரை மகளுக்கு உங்கட பெடியனை வளைக்கத்தான் இங்க அடிக்கடி வாறனாம். எல்லாம் எரிச்சல், பொறாமை." வைத்தியநாதன் சொல்லும்போது கோபத்தில் மெல்லச் சிவந்தார்.

கனகசுந்தரம் எதுவும் கதைக்கவில்லை. ஊருக்குள் இப்படி ஒரு கதை அடிபடுவதாக அவர் இதுவரை கேள்விப்படவில்லை. வைத்தியநாதனின் மகள் 'விசயத்தை'ப் பற்றியும் கொஞ்சம் அவருக்குத் தெரியும்.

"இல்லை ஒரு கதைக்குச் சொல்லுறன். அப்பிடி நான் சம்பந்தம் பேசினாலும் உனக்கு என்ன?" என்று வைத்தியநாதன் சொல்லிக்கொண்டிருக்கும் போது படலையைத் திறந்துகொண்டு அன்னபூரணம் வந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



வைத்தியநாதனைக் கண்டதும்தான் தாமதம் அவள் வாயெல்லாம் பல்லாகிவிட்டது.

"எப்ப வந்தனியள்? தண்ணி குடிச்சியளே?"

கனகசுந்தரத்துக்குப் பூரணத்தின் விசாரிப்புகள் எரிச்சலையூட்டின. இப்படி ஒருநாளாவது அவர் விசாரிக்கப்பட்டிருப்பாரா?

"இப்பதான் வந்தனான். ரண்டு பேரும் கதிரையைக் கொண்டு வந்து இங்க போட்டிட்டு இருக்கிறம். சரியான வெக்கை"

"அக்கா, மகள் எல்லாரும் சுகமே?"

"ஓ. அவைக்கென்ன. நல்லாயிருக்கினம்"

வைத்தியநாதனின் வீடு அந்த ஊரிலிருந்து ஒதுங்கியிருந்ததுபோலவே வீட்டிலிருந்தவர்களும் ஊரிலிருந்து ஒதுங்கியிருந்தார்கள். வைத்தியநாதன் மட்டும்தான் அடிக்கடி வெளியே வருவார். மனைவியையும், மகளையும் அநேகமாக கார்தான் சுமக்கும். ஊர்க்காரர்களும் அந்த வீட்டுக்குப் போவதில்லை.

"உவரோட கதையுங்கோ. நான் தண்ணி போட்டுக்கொண்டு வாறன்" அன்னபூரணம் அவசரமாக வீட்டுக்கு ஓடினாள்.

காசு மனிதரை எப்படியெல்லாம் ஆட்டுவிக்கிறது என்றெண்ணிக் கனகசுந்தரம் வியப்படைந்தார்.

ஊர் விவகாரங்களை அலசி ஆராய்ந்தபின் வைத்தியநாதன் உள்விவகாரத்துக்குள் வந்தார்.

"படிப்பு முடிஞ்ச உடன பெடியனை என்ன செய்யிறதா உத்தேசித்திருக்கிறியள்?"

"அவன்ரை படிப்பைப் பாத்துத்தான் முடிவு செய்ய வேணும் யூனிவேசிற்றிக்குப் போகச் சான்ஸ் கிடைச்சாப் போகலாந்தானே?"

"யூனிவேசிற்றியைத் தூக்கிக் குப்பையில போடுங்கோ. படிச்சுப்போட்டு என்ன கிழிக்கப் போகினம்? உத்தியோகந்தான் புருசலட்சணம். என்னைப் பாருங்கோவன். தடக்குப்பட்டு, தடக்குப்பட்டு எட்டாம் வகுப்பு மட்டும்தானே படிச்சனான். இப்ப நல்லாயில்லையே?" வைத்தியநாதன் உணர்ச்சியாகக் கேட்டார்.

'ஆளைப் பாக்கவே பள்ளிக்கூடம் போகாத ஆளென்டு நல்லாவே தெரியுது' என கனகசுந்தரம் மனதிற்குள் சொல்லிக்கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



அன்னபூரணம் ஆவி பறக்க இரண்டு கோப்பைகளைத் தட்டில் ஏந்திக்கொண்டு வந்தாள். விருந்தினர்கள் வந்திருக்கும்போது கனகசுந்தரத்துக்கு இம்மாதிரி அதிஉட்டம் அடிப்பதன்று.

"குடியுங்கோ. எனக்கு உள்ளுக்க கொஞ்ச அலுவல் இருக்கு" என்று அன்னபூரணம் பரிமாறிவிட்டுப் போகத் திரும்பியபோது வைத்தியநாதன் மறுபடி ஆரம்பித்தார்.

"உங்கட பெடியன்ரை படிப்பு முடிஞ்ச உடன எனக்குச் சொல்லுங்கோ. என்ரை கடையிலயே நான் வேல போட்டுக் குடுக்கிறன்"

காலடி வைத்த அன்னபூரணம் அப்படியே நின்றாள். தன் காதுகளில் ஏதாவது பழுதிருக்குமோ என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. வைத்தியநாதனின் வார்த்தைகளை அத்திவாரமாக வைத்து ஒரு கனவுலகமே அவள் முன் உருவாகியது.

அப்போது நிரஞ்சன் சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தான். கதிரையில் உட்கார்ந்திருந்தவாறே அவனைப் பார்த்த வைத்தியநாதன் திருப்திப்பட்டுக் கொண்டார்.

# 12

"அந்த பிறவுண் கலரை எடுக்கிறீங்களா?"

மேலேயிருந்த மண்ணிறச் சுருளை எடுத்து முன்னால் பரப்பினாள் பத்மா.

அவளுக்கு முன்பாக நின்ற இருவர் துணியை உரசிப் பார்த்துத் தமக்குள் அளவளாவிக் கொண்டார்கள். பத்மா அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அந்த லைற் புளுவை ஒருக்கா எடுக்கிறீங்களா?"

பத்மா மறுபடி மேலே எட்டி சுருளை எடுத்துப் பரப்பினாள். மறுபடியும் அந்த இருவரும் அளவளாவினார்கள்.

இதோடு பத்மா ஆறு சுருள்களை எடுத்து முன்னால் விரித்திருந்தாள். எல்லாம் தாறுமாறாகக் கலைந்திருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



அவளுக்கு முன்னால் நின்ற இருவரும் நீண்ட நேரம் பரிசீலித்த பின் "மற்றக் கடையளையும் பாத்திட்டு வாறம்" என்று நழுவினார்கள்.

பத்மாவுக்கு எரிச்சல் வந்தது. படபடவென எல்லாச் சுருள்களையும் மறுபடி சுற்றி, ஒழுங்காக்கிப் பழைய இடத்தில் அடுக்கினாள். மணிக்கூட்டைப் பார்த்தபோதுதான் அவளுக்குப் பசித்தது.

இப்போது சாப்பாட்டு நேரம். பத்மா சாப்பிடுவதற்காக அறைக்குப் போக, சாப்பிட்டு முடித்த மாலா அவளுடைய இடத்தில் வந்து நின்றாள்.

சாப்பாட்டு அறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த தவபாலன் பத்மாவைக் கண்டதும் மறைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தான். அவன் தனது வீட்டுக் கஷ்டத்தைச் சிரமப்பட்டு மறைப்பதைப் பார்த்து பத்மா தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"இண்டைக்கு நல்லா களைச்சுப் போனியள் போல" தவபாலன் சாப்பிட்டுக் கொண்டே விசாரித்தான்.

"இண்டைக்கு மட்டும் என்ன புதுசா களைக்கிறது. எப்பவுமிப்பிடித்தான். சனங்கள் வாறதும், எல்லாத்தையும் தலைகீழாய்ப் புரட்டிப்போட்டுப் போறதும். நான் நினைக்கிறன் நேரம் கனக்க இருக்கிறவைதான் இப்பிடி கடைக்கு வந்து தங்கட நேரத்தைப் போக்கினம்"

தவபாலன் சிரித்துக் கொண்டான். இருவரும் தொடர்ந்து சாப்பிட்டார்கள். "ஞாயிற்றுக் கிழமை வீரகேசரி பாத்தனியளே?" என்று தவபாலன் கேட்டான்.

"இல்லை. என்ன விசேசம்?"

"பாரதியின்ரை கவிதை வந்திருக்கு"

"ஓடி விளையாடு பாப்பாவோ?" என்று பத்மா கேட்டுவிட்டுச் சிரித்தாள்.

"உங்களுக்குப் பகிடிதான். நான் இப்ப புதுக் கவிதை எழுதுற பாரதியைச் சொல்லுறன்"

"நான் பாக்கேல. என்ன எழுதியிருக்கிறார்?"

"பெண்களே திருமணம் வேண்டாம்"

"எல்லாத்தையும் எழுதி முடிச்சு இப்ப புதுசா கண்டு பிடிக்கினமோ?"

படிப்பகம்

www.padippakam.com



"அப்படிச் சொல்லாதீங்கோ. அந்தக் கவிதையில சொல்லியிருக்கிற அவ்வளவும் எதார்த்தம். திருமணமே வியாபாரச் சந்தையாகியிருக்கையில் பெண்கள் தாங்களாகவே வலிந்து போய் தங்களுக்கு விலை குறிக்க வேண்டுமா என்டு ஒரு வசனம் வருகுது. அருமையான வசனம்" தவபாலன் சாப்பாட்டை நிறுத்திவிட்டுத் தன்னை மறந்து பாராட்டினான்.

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பத்மா சந்தோசித்துக் கொண்டிருந்தாள். அவளும் அந்தக் கவிதையைப் படித்திருந்தாள். பணத்துக்காக அலையும் ஆண்களைச் சாடி எழுதப்பட்ட அந்தக் கவிதையை ஒரு ஆணே ஏற்றுக்கொண்டு பாராட்டியது அவளுக்குத் திருப்தியாயிருந்தது. தவபாலன் அவளுடைய மதிப்பில் கொஞ்சமாக உயர்ந்தான்.

"ஆரும் பாட்டெழுதிப் போடலாம். பாட்டால சமூகத்தைத் திருத்தலாமே?" பத்மா அவனை ஆராய்வதற்காகக் கேட்டாள்.

"என்ன உப்பிடிக் கேட்டுப் போட்டியள். கவிதைகள் தேசத்தில் மண்டிக் கிடக்கும் வியாதிகளுக்கு மருந்துச் சீட்டே தவிர மருந்தில்லையெண்டு வைரமுத்து ஒரு புத்தகத்தில எழுதியிருக்கிறார். மருந்துச் சீட்டுகளைத்தின்டு கொண்டிருந்தால் வியாதி மாறாது. மருந்து வாங்க ஆக்கள் மறுக்கினம் என்டதுக்காக மருந்துச் சீட்டெழுதாம இருக்கிறதும் நியாயமில்லை"

பத்மா உண்மையிலேயே வியந்து போனாள். அவன் 'எவ்வளவு புத்தகங்களைப் படித்திருக்கிறான் என்று ஆச்சரியப்பட்டாள். அவனுடைய குடும்பத்தின் ஏழ்மை நிலையைப் பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். இந்த நிலையில் அவனால் எப்படி எல்லாப் புத்தகங்களையும் வாங்கிப் படிக்க முடிகிறது என்ற தன்னுடைய ஆச்சரியத்தை அவனிடம் கேட்டாள்.

"இருக்கவே இருக்கு லைப்ரறி. அள்ளிக் கொண்டு போனனெண்டால் வீட்டில அதை மூச்சுப் போட்டுத்தான் மற்ற வேலை. 'புத்தகங்களெண்டா எனக்கு உயிர்"

"உப்பிடி ஆர்வமா உந்தப் புத்தகங்களை படிக்கிற நீங்கள் பள்ளிக்கூடத்தில கவனமாய் படிச்சிருந்தா இப்ப நல்ல நிலையில இருந்திருக்கலாமே?" என்று கேட்டபின் தான் அதிகமாகக் கேட்டுவிட்டோமோ? என்று பத்மா நினைத்தாள்.

அவள் கேட்ட கேள்விக்குத் தவபாலன் உடனே பதில் சொல்லவில்லை. மௌனமாகக் கோப்பையை வழித்துச் சாப்பிட்டான். கோப்பையைக் கழுவ எழும்புகையில் "எனக்கு அட்வான்ஸ் லெவல் வன் ஏ திறீ பீ" என்று சொல்லிவிட்டுப் போனான்.

பத்மா எவ்வளவு நேரமும் தனக்கு முன்னால் இருந்தவன் கூடும்

www.padippakam.com



பத்தின் கஉந்ட நிலைமையால் படிப்பைத் தொடர முடியாத திறமையான மாணவன் எனத் தெரிந்து ஆச்சரியப்பட்டுப் போனாள்.

பத்மா அவனுடைய நிலைமையையும், தன்னுடைய நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். அநேகமாக சமனான நிலையே காணப்பட்டது.

பத்மா விஞ்ஞானப் பிரிவில் உயர்தரம்வரை படித்திருந்தாள். தவபாலனைப் போல அவள் சித்தியடையாவிட்டாலும் நல்ல பெறுபேறுகள் பெற்றிருந்தாள். படிப்பைத் தொடர வேண்டும் என்பதுதான் அம்மாவினுடைய ஆசையாகவும் இருந்தது.

இந்த வயதில்தான் பத்மா தங்களுடைய குடும்பக்கதையைப் பூரணமாகத் தெரிந்து கொண்டாள். அன்றிலிருந்து உலகத்தைப் படிப்பதில்தான் அவளுடைய முழுக் கவனமும் திரும்பியது. திரைமறைவிலிருக்கும் சமுதாயத்தின் சுயரூபங்களை அவள் படிப்படியாகப் புரிந்து கொண்டாள்.

படித்தவர்கள் எவருமே தங்கள் திறமைகளை தங்கள் சமூகத்துக்குப் பயன்படுத்தாமல் வெற்றிடங்களை வெற்றிடங்களாகவே பேணிப் பாதுகாத்து வந்ததை அறியும் போது தான் 'ஏட்டுச் சுரைக்காய்' அவளுக்குக் கசக்க ஆரம்பித்தது. அப்போதே அவள் தனக்கென்று வழியொன்றை நிர்மாணித்துக் கொண்டாள்.

எத்தனையோ நாட்களாக வாதாடிய பின்பே வேதா மகளின் முடிவை ஏற்றுக் கொண்டாள். தனது மகள் எப்படியாவது தன்னுடைய சொந்தக் காலிலேயே நிற்க வேண்டும் என்ற தன் விருப்பத்திற்கேற்ப அவளுடைய முடிவு அமைந்திருந்ததால் வேதாவும் சம்மதித்தாள். ஆனாலும் அடி மனதில் சிறிய வருத்தம் இருக்கத்தான் செய்தது.

"முதலாளி இப்ப வந்தால் சமைக்கிறியளோ என்றுதான்கேப்பார்" என்ற தவபாலனின் குரலினால் பத்மா தனது சிந்தனைகளைக் கலைத்துக் கொண்டாள். கை காய்ந்து போய்விட்டது.

அவசரமாக எழுந்து எல்லாவற்றையும் கழுவிக் கொண்டு மறுபடி தனது இடத்துக்கு வந்து வேலையில் இணைந்து கொண்டாள். கண்கள் அவ்வப்போது தவபாலனைப் பார்த்துக் கொண்டன. திடீரென அவன் மேல் தனக்கேன் இந்த ஆர்வம் எனப் பத்மாவுக்குப் புரியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# 13

"டார்லிங், டார்லிங் ஐ லவ் யூ" என்று தமிழ்ப் பாட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த பெட்டிகளுக்குள்ளால் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. பரவியிருந்த மங்கிய வெளிச்சம் ஒரு ரம்மியமான சூழலை உண்டாக்கியது.

அந்த இடத்தில் புழுக்கமில்லாவிட்டாலும் உமா வியர்த்துக்கொண்டிருந்தாள். அந்த இடத்துக்கு அவள் புதிது. அவளுக்கும் அது புதிது. புதிய அநுபவம் அவளுடைய வியர்வைச் சுரப்பிகளைத் தூண்டிக் கொண்டிருந்தது.

"என்ன பேசாமலிருக்கிறீர்?" நிரஞ்சன் சரளமான குரலில் கேட்டான். இந்த மாதிரியான அநுபவங்கள் அவனுக்குப் புதிதில்லையாததால் சாதாரணமாக இருந்தான்.

"பயமாயிருக்கு" உமா கிசுகிசுத்தாள்.

"உங்கட அப்பர் இங்க வரமாட்டார்" நிரஞ்சன் சொல்லிவிட்டுச் சிரித்தான். சிரிப்பில் கோபம் கொஞ்ச சதவீதம் கலந்திருந்தது.

உமா ஒன்றும் சொல்லாமல் பக்கத்திலிருந்த கண்ணாடியைப் பார்த்தாள். அதிலே பல நிரஞ்சன்களும், உமாக்களும் தெரிந்தார்கள். நிரஞ்சன்கள் உமாக்களைப் பார்த்துக் கண்ணடித்தார்கள். உமா தலையைத் திருப்பிக் கொண்டாள்.

மறுபடியும் பார்வையை சுற்றிவர ஓட்டித் தெரிந்தவர்கள் யாராவது தட்டுப்படுகிறார்களா என்று தேடினாள். மங்கிய வெளிச்சத்திலே தூர இருப்பவர்களின் முகம் தெரியவில்லை. இதனால் உமாவுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

'ஸ்ரெப் கட்டிங்' வெட்டி, மடிப்பு வைத்து இஸ்திரி பண்ணப்பட்ட உருப்பு போட்டிருந்த இளைஞன் ஒருவன் இரண்டு ஐஸ்கிறீம்களையும் தட்டொன்றில் கார வகைகளையும் கொண்டு வந்து அவர்கள் பக்கத்தில் வைத்துவிட்டு போகும்போது தனக்குள் சிரித்துக் கொண்டு போனான்.

"உம் சாப்பிடும். வெக்கப்படாதையும்" நிரஞ்சன் சொல்லிக் கொண்டு ஒரு ஐஸ்கிறீமை ருசிக்கத் தொடங்கினான்.

உமா மெல்ல மற்றையதை தன் பக்கம் நகர்த்தி சின்னச்சின்ன விள்ளல்களாகக் கிளறி வாய்க்குள் போட்டுக் கொண்டாள். அவளுக்கு ருசிக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



ஏதோ ஒரு தியேட்டரில் படம் முடிந்து வந்த ஒரு கும்பல் அந்தக் 'கிறீம் கவுசு'க்குள் புகுந்தது. உமா சட்டெனச் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, தலை குனிந்து ஓரக் கண்ணால் உள்ளே வருபவர்களைப் பார்த்தாள். தெரிந்தவர்கள் அகப்படவில்லை.

"என்ன நீர் சின்னப் பிள்ளை மாதிரிப் பயந்து கொண்டிருக்கிறீர்?" நிரஞ்சன் அவளைக் கோபித்துக் கொண்டான்.

"ஆரேன் கண்டா வீட்ட சொல்லிப் போடுவினம்" உமா மெதுவாகச் சொன்னாள்.

"உப்பிடிப் பயந்து சாகிறனீர் லவ் பண்ண வெளிக்கிட்டிருக்கக் கூடாது" நிரஞ்சன் எரிச்சலுடன் சொல்லிவிட்டு ஐஸ்கிறீமை தொடர்ந்து ருசித்தான்.

உண்மையாகவே அவன் தன்னைக் கோபித்துக் கொண்டு விட்டானோ என்று உமா பயந்து போனாள். தலையை உயர்த்தி அவனைப் பார்த்தாள். அவன் மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

உமாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தான் இங்கிருந்தது பற்றி வீட்டில் தெரிய வந்தால் என்ன நடக்கும் என்பதை இவர் ஏன் புரிந்து கொள்ளவில்லை என்று கவலைப்பட்டாள். திடீரெனத் தான் ஏன் பயப்பிட வேண்டும் எனத் தன்னையே கேட்டுக் கொண்டாள். இங்கே வந்ததைப் பற்றி தற்செலா ஆராவது அப்பாவுக்குச் சொன்னால் என்ன நடக்கும்?

"உன்னை வளத்துப் படிப்பிச்சதுக்கு நீ காட்டுற நன்றியே இது? உன்ரை தங்கச்சி, தம்பியைப் பாக்க வேண்டின பொறுப்பு உனக்குத் தானெண்டு எத்தினை ஆயிரம் தரம் சொல்லியிருப்பன். உனக்குப் பொறுப்பிருந்தா இப்பிடி நடந்திருப்பியே? எங்களுக்கு நஞ்சு வேண்டித் தந்திட்டு நீ பிறகு ஆரோடயெண்டாலும் உலாத்து" சோமசுந்தரம் கத்தினார்.

"இப்ப ஏன் கத்துறியள்? நான் என்ன தாலி கட்டுப்போட்டே வந்து நிக்கிறன். மனசுக்குப் பிடிச்சவரோட சிநேகிதமாய் பழகுறது பிழையே? நான் ஒன்டும் பொறுப்பை மறக்கேல. முதல்ல உங்களுக்கு மகளில நம்பிக்கை வேணும்" உமா நிதானமாகச் சொன்னதும் சோமசுந்தரம் வாயடைத்துப் போனார்.

இந்தக் கற்பனை உரையாடலினால் உமாவுக்குத் தைரியம் வந்துவிட்டது. நிமிர்ந்து உட்கார்ந்து ஐஸ்கிறீமை முழுமையாக ருசிக்கத்தொடங்கினாள். இப்போது இனித்தது.

www.padippakam.com



"என்ன பேசாமலிருக்கிறியள்? இப்பவே இப்பிடிக் கோபம் வருகுதெண்டா கலியானத்துக்குப் பிறகு எப்படிக் கோபப்படுவியள்?" உமா குழந்தைத்தனமாகக் கேட்க நிரஞ்சனின் கருமை விலகியது.

"என்ன ஒருந்தாப்போல ஞானோதயம் வந்து உசாராயிருக்கிறீர்?" நிரஞ்சன் ஆச்சரியமாகக் கேட்டான்.

"யாமிருக்கப் பயமேன் என்று ஒரு அசரீரி கேட்டுது"

இருவரும் மனம் விட்டு மெல்லமாகச் சிரித்துக் கொண்டார்கள். ஐஸ்கிறீம் கோப்பைகளிலிருந்து இருவரின் குடல்களுக்கும் இடம் மாறியதும் "இனி என்ன வேணும்?" என்று நிரஞ்சன் கேட்டான்.

"வீட்ட போக வேணும்" என்று உமா சிரித்தாள்.

நிரஞ்சன் காசை எண்ணி ஒரு ரூபாயை மேலதிகமாக எடுத்து தட்டில் வைத்த பின் இருவரும் வெளியே வந்தார்கள்.

இவர்கள் வெளியே வரும்போது சிகரெட் வாங்க உள்ளே வந்த கணேசன் அவர்களைப் பார்த்துவிட்டு "போறது சோமற்ற மகளே" என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டான்.

கிறீம் கவுஸின் குளிர்மையிலிருந்து வெளியே வந்த இருவரையும் வெயில் தாக்கியது. கண்கள் கூசின. நடைபாதை இல்லாததால் கடைகளின் ஓரமாக நடந்தார்கள்.

உமா அடிக்கடி கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள். நேரம் போகப் போக அவளுடைய தைரியம் கரைந்து கொண்டிருந்தது.

எந்தவிதமான அடையாளங்களோ, சமிக்ஞை விளக்குகளோ இல்லாத பாதைகளை தங்களுக்குள் உள்ள புரிந்துணர்வால் எல்லோரும் ஒரே நேரத்தில் பாவித்துக் கொண்டிருந்தார்கள்.

பாதையில் பொருட்களைப் பரப்பி உருவாக்கப்பட்டிருந்த திடீர்க் கடைகளை வாகனங்கள் மயிரிழையில் உரசிக் கொண்டு போயின. கையின் படமொன்றைப் பக்கத்தில் வைத்துக் கொண்டிருந்த ஒருவர் ஏமாளிகள் யாராவது அகப்பட மாட்டார்களா என்று காத்துக் கொண்டிருந்தார்.

"இதால வாரும்" நிரஞ்சன் பாதை காட்டினன்.

"பஸ் ஸ்ராண்ட் அங்க எல்லோ இருக்கு. உதால ஏன் போவான்?" என்று தெரியாமல் கேட்டாள் உமா.

www.padippakam.com



"உப்பிடியே இண்டைக்கு ஒரு படம் பாப்போம். இங்கிலீஷ் படம் எண்டபடியா ஒரு மணித்தியாலத்தில முடிஞ்சிரும்" நிரஞ்சனின் குரலிலே ஏக்கமும், ஆசையும் சமமானளவில் கலந்திருந்தன.

"உங்களுக்கென்ன விசரே? நான் இப்பவே பயந்து கொண்டிருக்கிறன். படம் பாக்கிறதோ? நீங்க போய்ப் பாருங்கோ" சொல்லிவிட்டு உமா விருவிருவென பஸ் நிலையத்தை நோக்கி நடந்தாள்.

நிரஞ்சன் ஏமாற்றத்துடன் அப்படியே நின்றான். சில நிமிடங்களில் ஆத்திரம் வந்து சேர்ந்தது. வேகமாக பட மாளிகையை நோக்கிப் போனான்.

படமாளிகை வாசலில் டேவிட் இவனுக்காக காத்துக் கொண்டிருந்தான். நிரஞ்சன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அவனிடம் போனான்.

"என்னடா மச்சான் தனிய வாறாய்? சரக்கு வெக்கப்பட்டுக் கொண்டு பின்னால வருகுதோ?" என்று கேட்டுக் கொண்டே பின்னால் ஆராய்ந்தான்.

"சரக்குமில்லை. ஒண்டுமில்லை" என்று நிரஞ்சன் எரிந்தான்.

"ஏன்டா, என்ன நடந்தது? கையைக் காலைப் பிடிச்சிட்டியே?" என்று டேவிட் ஆர்வமாகக் கேட்டான்.

"விசரைக் கிளப்பாதை. அவள் வரமாட்டெண்டிட்டாள்"

"உம். அவளுக்குக் குடுத்து வைச்சது அவ்வளவுதான். அதுக்கு நாங்களென்ன செய்யிறது? நீ வா நாங்கள் ரெண்டு பேரும் பாப்பம். அந்தமாதிரிக் கட்டங்கள் கனக்க இருக்கு மச்சான்"

நிரஞ்சன் பேசாமல் நின்றான். டேவிட் போய் நிரஞ்சனுக்கும் தனக்குமாக பிரவேசச் சீட்டுகள் வாங்கிக் கொண்டு வந்தான்.

"யோசிக்காம வாடா. அடிக்கு மேல அடியடிச்சா அம்மியும் நகரும். இன்னைக்கு ட்ரை பண்ணிறு போச்சு" என்று டேவிட் நிரஞ்சனை அழைத்துக் கொண்டு படமாளிகைக்குள் நுழைந்தான்.

'அம்மியை எப்படி நகர்த்தலாம்?' என்று நிரஞ்சன் யோசித்துக் கொண்டேயிருந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



# 14

வீடு, வளவு சுத்திகரிப்பை முடித்துக் கொண்டு வேதா தெருவுக்கு வந்தபோது மறுபடி நெஞ்சு வலித்தது. நடக்கச் சிரமமாயிருந்தது. ஆனாலும் பருப்பு வாங்க வேண்டுமே.

பத்மாவுக்குப் பருப்புக் கறியென்றால் நன்றாகப் பிடிக்கும். இன்னும் கொஞ்சம் போடுங்கோ என்று கேட்டுச் சாப்பிடுவாள். ஒரு கிழமையாக வீட்டில் பருப்பு இல்லை. இன்று எப்படியும் வாங்க வேண்டும் என வேதா தீர்மானித்திருந்தாள்.

பாதையோரமாக நின்று தொடர்ந்து நடப்பதா, வேண்டாமா என்று வேதா யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது சோமசுந்தரம் கையில் பையொன்றுடன் வந்து கொண்டிருந்தார்.

"என்ன பிள்ளை யோச்சுக் கொண்டிருக்கிறாய்?" என்று பக்கத்தில் வந்து கேட்டார். அவருக்கு வேதா குடும்பத்தில் அனுதாபமும், மதிப்பும் இருந்தது. அந்தக் குடும்பத்தைப் பற்றிய முழு விபரமும் அவருக்குத் தெரியும்.

"ஒன்றுமில்லை. நீங்கள் கடைக்கே வாத்தியார் போறியள்?" வேதா தயக்கத்தோடு கேட்டாள்.

"ஓம். என்ன வேணும் பிள்ளை? ஏதேன் வேண்டியாறதே?" சோமசுந்தரம் ஆதரவோடு கேட்டார்.

"பருப்பு முடிஞ்சுது. உங்களுக்குக் கஷ்டமில்லையெண்டா ஒரு கிலோ வாங்கியாறியளே?"

"உதுக்கேன் யோசிக்கிறாய். காசைத் தா பிள்ளை. வாங்கிக் கொண்டு வாறன்"

வேதா சோமசுந்தரத்திடம் காசைக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தாள். சோமசுந்தரம் அவ்வப்போது இந்த மாதிரி உதவிகள் செய்வதுண்டு.

வேதா வீட்டுக்குள் போகாமல் முன்படியில் உட்கார்ந்தாள். நெஞ்சை பிசைந்தது. யாருமேயில்லாமல் தான் மட்டும் அநாதரவாக நிற்பது போன்ற உணர்வு வந்தது. மறுகணமே அது அழிக்கப்பட்டு விட்டது.

"வயதுபோய் சுகமில்லாம இருக்கேக்கதான் ஆற்றையேன்

www.padippakam.com



உதவி தேவைப்படுமோ? அப்பதான் தனிமை பயங்கரமாயிருக்குமோ? '

'நான் எங்க தனிய இருக்கிறன். எனக்கு என்ரை மகள் இருக்கிறள். அது மகளுக்கு?' இந்தக் கேள்வி பிறந்ததும் வேதா திடுக்கிட்டாள்.

'எனக்கு ஏதாவதொன்டு நடந்து, பத்மா கருமையான சுகவீனமாயிருந்தால் அவளை ஆர் பாப்பினம்? டொக்டரிட்ட கூட்டிக்கொண்டு போறதார்? மருந்து குடுக்கிறது ஆர்?'

யாருமேயில்லாத ஒருவருக்கு ஆதரவை உண்டாக்கிக் கொள்ள திருமண பந்தத்தைத் தவிர வேறு வழியேயில்லையா? எந்த வித சுயநலங்களுமில்லாமல் மற்றவர்களுக்கு உதவ முன்வராத இந்தச் சமூகம் இருக்கும் வரை இதைவிட வேறு வழியில்லைத்தான். பத்மா துடிப்பான பெண். இப்படிச் சிந்திக்க அவளுக்கு சந்தர்ப்பம் இல்லை. அவள் எதையும் அலட்சியமாக நினைக்கலாம். நானும் அப்படி இருக்கலாமா? ஒரு தாய்க்குரிய கடமையை மறக்கலாமா? பத்மாவுடன் எப்படியும் இதைப் பற்றி தீர்க்கமாக கதைத்து முடிவு செய்ய வேண்டும்.

வேதா படியிலிருந்தபடியே யோசித்துக் கொண்டிருந்தாள். எதிர்காலப் பயமும், உயிரும்தான் மனிதர்களின் கொள்கைகளைப் பலவீனமாக்குகின்றன.

"என்ன பிள்ளை வாசல்லயே நித்திரை கொள்ளுறாய்?" கேட்டுக்கொண்டே வந்த சோமசுந்தரம் பருப்பை நீட்டினார்.

"மெத்தப் பெரிய உபகாரம் வாத்தியார்" என்று வேதா வாங்கிக் கொண்டாள். "களைப்பா இருந்தது. அதுதான் உப்பிடி ஆறுதலா இருந்தன்"

"வேலயளைச் செய்தா மட்டும் போதாது. உடம்பையும் கவனிக்க வேணும். இல்லாட்டி பிறகு பத்மாவுக்குத்தான் கரைச்சல்"

அவர் சொல்வதை சரியென ஏற்றுக் கொண்டது போல வேதா மௌனமாகத் தலையாட்டினள். "உள்ளுக்க வாங்கோ வாத்தியார் தண்ணி போட்டுக் கொண்டாறன்"

"ஒரு செம்பு நல்ல பச்சைத் தண்ணியா கொண்டு வா பிள்ளை" சோமசுந்தரம் உள்ளே வந்து கதிரையொன்றில் அமர்ந்து கொண்டார்.

வேதா மோர் கரைத்துக் கொண்டு வந்து கொடுத்தாள். "பிள்ளையள் எப்பிடியிருக்கினம்?" ஜன்னலோடு சாய்ந்து நின்றபடி வேதா கேட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



"எப்ப பாத்தாலும் விளையாட்டுத்தான். சின்னதுகளுக்கு விபரம் தெரியாது. நான் உமாவைத்தான் நம்பியிருக்கிறன். அவள் தானே மூத்தவள்."

"நீங்கள் யோசிக்காதையுங்கோ. உமா கெட்டிக்காரி. நல்லாய்ப் படிச்சு நல்ல வேலையில சேருவாள். வேணுமெண்டா இருந்து பாருங்கோ. பத்மா அடிக்கடி உமாவைப் பற்றித்தான் கதைப்பாள்"

"நீ குடுத்து வைச்சனி பிள்ளை. ஒரு பிள்ளைதானே. அவளுக்கு நல்ல இடத்தில கலியாணம் செய்து வைச்சா நிம்மதிதான். நான் மூண்டையெல்லே சமாளிக்க வேணும். மூத்தவளும் இன்னும் ரண்டு மூண்டு வருசத்தில கலியாண வயசுக்கு வந்திடுவாள். அதுக்குப் பிறகு மற்றதுகளைப் பாக்க வேணும். காலம் கெதியாப் போகுது"

வேதாவுக்குச் சோமசுந்தரத்தின் குடும்ப நிலமைகள் தெரியும். மூன்று பிள்ளைகளுக்கும் சமைத்துப் போடுவதிலிருந்து சுகயீனம் வந்தால் வைத்தியசாலைக்கும் வீட்டுக்குமாக அலைந்து திரிவதுவரை அவர் தனியாக அனுபவிக்கும் சிரமங்கள் பற்றி அவளுக்குத் தெரியும். ஊரில் ஆங்காங்கே கடன்களும் இருந்தன. இந்த நிலமையில் மகளுக்குத் திருமணத்தை நடாத்திப் பார்ப்பது அவரைப் பொறுத்த வரையில் சிரமமான காரியமே.

"பத்மலிங்கத்தின்ரை கதையைக் கனகாலமாக் காணேல. ஆள் இப்ப என்ன செய்யுது?" வேதாவின் குடும்பத்தைப் பற்றி உரிமையுடன் கேட்கும் தகுதி சோமசுந்தரத்துக்கு இருந்தது.

"ரவுணுக்க கல்பார் வைச்சிருக்கிறதா பத்மா சொன்னாள்" வேதா சுருக்கமாகப் பதிலளித்தாள்.

"உம். ஏதோ ஒருத்தற்ற வழியில ஒருத்தர் குறுக்கிடாம இருந்தா எல்லாரும் நிம்மதியா இருக்கலாம்" என்ற சோமசுந்தரத்தின் கூற்றை வேதா ஆமோதித்தாள்.

"நேரமாகுது. பிள்ளையள் பள்ளிக்கூடத்தால பசியோட வருங்கள். இனித்தான் உலை வைக்க வேணும்." சோமசுந்தரம் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு போனார்.

அவருடைய கேள்வியால் பழையவைகள் கிளறப்பட வேதா ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி வெளியே பார்த்தாள்.

'பத்மலிங்கம்'

வைத்தியசாலைக் கட்டில், இரத்தப் புட்டி, வெள்ளை உடை,

படிப்பகம்

www.padippakam.com



அறுவைச் சிகிச்சை, மயக்கம், இந்திரா என்று சம்பந்தமில்லாமல் படங்கள் வந்து போயின.

'இந்திரா'

'அவள் இப்போது எப்படியிருக்கிறாள்?'

'வேண்டாம். அந்த நினைவுகளே வேண்டாம். அவை நிச்சயம் உணர்ச்சிவசப்பட வைத்துவிடும். மனதைக் குழப்பிவிடும். நான் இப்போது போலவே எப்போதும் இருக்க வேண்டும். நான் பத்மா. பத்மா நான். வேறெதுவும் எங்களுக்கு வேண்டாம்.'

வேதா தன் மேல் சுதாகரித்துக் கொண்டு சமையலறைக்குள் வந்து சமையலை ஆரம்பித்தாள். பருப்புக் கறியை நன்றாக வைக்க வேண்டுமென்று தனது முழுக் கவனத்தையும் அதில் செலுத்த முனைந்தாள். முடியவில்லை.

வேதா குழம்பிப் போய் நிற்க, அடுப்பில் கறி எரிய ஆரம்பித்தது.

# 15

கர் புர்ரென்று வானொலியை ஆக்கினைப் படுத்திக் கொண்டிருந்தார் கனகசுந்தரம். தமிழ்ச் சேவை அலைபத்தில் பிடிபட மாட்டேன் என்றது. அவர் விடாமல் மிக விழிப்பாக ஒவ்வொரு வரிசையாகத் தமிழைத் தேடிக் கொண்டிருந்தார். திடீரென தமிழ்க் குரல் ஒலித்தது.

"ஒருக்கா உள்ளுக்க வாங்கோப்பா"

தமிழ்ச் சேவையைப் பிடித்துவிட்ட சந்தோசத்தில் கனகசுந்தரம் நிமிர்ந்து உட்கார்ந்தார். ஆனால் பிறகு எந்தச் சத்தத்தையும் காணவில்லை. சலிப்புடன் மறுபடி தேடுதலைத் தொடர்ந்தார்.

"கூப்பிட்டது காதில விழேலயே? உங்கயென்ன புருங்கிக் கொட்டிக் கொண்டிருக்கிறியள்?" இப்போது தமிழ்க் குரல் மிக அருகில் கேட்கவே கனகசுந்தரம் திரும்பினார்.

அன்னபூரணம் கடுகடுப்புடன் நின்று கொண்டிருந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



"என்னப்பா வேணும்?"

"சொதிக்கு மாங்காய் போட வேணும். நல்லா பிஞ்சாய்ப் பாத்து புடுங்கியாங்கோ"

'ஆக்கினை பிடிச்சவள்' மனதிற்குள் முணுமுணுத்தவாறே கொக்கைத்தடியை எடுத்துக் கொண்டு பின் வளவுக்கு வந்தார். கண்ணுக்கெட்டியதூரம் வரையில் எந்தக் காயுமே தென்படவில்லை. தூரத்தில் தொங்கிக்கொண்டிருந்த காய்களைப் பறிக்க தடியை நீட்டினார். உயரம் போதவில்லை.

"அடுப்பில கறியிருக்கு. நீங்க உங்க மாங்காய் ஆயுறியளோ, இல்லாட்டி செய்யிறியளோ?" அடுப்பங்கரையிலிருந்து அன்னபூரணத்தின் குரலைக் காற்று சுமந்து வந்து கனகசுந்தரத்திடம் சேர்ப்பிக்க, அவர் விருவிருவென மரத்தில் ஏறிவிட்டார். மாங்காயைத் தப்பறிந்தபடியே மேலே உயரத்துக்குப் போனார்.

படலையைத் திறந்து கொண்டு நிரஞ்சன் சைக்கிளுடன் வந்தான். அவன் பின்னால் டேவிட்.

"பம்ப் பண்ணிப்போட்டு வாறன்" டேவிட் சொல்லிவிட்டு பின் வளவுக்கு வந்து வேலியை நாடினான். அப்போது மாமரம் சரசரக்கவே திடுக்கிட்ட டேவிட் 'டேய் நிரஞ்சன் ஆரோ மரத்தில நிக்கினம்' என்று கத்தினான்.

அவனுடைய கத்தலைக் கேட்டு நிதானமாக நடந்து வந்த நிரஞ்சன் "சத்தம் போடாதை. அது எங்கட அப்பர்" என்று டேவிட்டுக்கு சொன்னான்.

அவன் சொன்னதை மரத்திலிருந்து கனகசுந்தரம் கேட்டுக்கொண்டிருந்தார். உடம்பெல்லாம் என்னவோ செய்தது. பல்லைக் கடித்தார் தற்போதைக்கு இவ்வளவுதான் அவரால் முடியும்.

தற்செயலாக அவரை மீறி எதிர்ப்பு வெளிப்பட்டு விட்டால் அவ்வளவுதான். தங்களிடம் வாங்கிய ரொக்கம், பாத்திரங்களின் எண்ணிக்கை நகைகளின் பெறுமதி எல்லாவற்றையும் பட்டியல் போட்டு அன்னபூரணம் ஊர் முழுவதும் விநியோகித்து விடுவாள். கை நீட்டி வாங்கிய ஒரே காரணத்திற்காகத்தான் அவர் மௌனமாக இருக்கிறார். 'இப்பிடியெல்லாம் நாய் படுற பாடுபடவேண்டியிருக்குமெண்டு தெரிஞ்சிருந்தால் கையை நீட்டாம இருந்திருக்கலாம்' என்று இப்போது யோசித்தார்.

அன்னபூரணமே இனி மரத்துக்கு வந்துவிடுவாள் என்று அபாயத்தை

www.padippakam.com



உணர்ந்து கனகசுந்தரம் வேகமாக மரத்தை விட்டிறங்கினர்.

இவர் வீட்டுக்குள் வரும்போது நிரஞ்சனும், டேவிட்டும் சைக்கிளில் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். டேவிட் கடைக் கண்ணால் அவரைப் பார்க்க கூசிப் போனர்.

வேகமாக சமையலறைக்குப் போய் மாங்காயை அன்னபூரணத்திடம் சமர்ப்பித்தார்.

"நானேயான் சமையலுக்கே கொண்டு வாறியள்?" என்றுகேட்டபடியே அவள் நறுக்கத் தொடங்கினள்.

"நிரஞ்சன் எங்கேயப்பா போறன்?"

"ரியூசனுக்காம்"

போகும்போது நிரஞ்சனிடம் கொப்பியோ, புத்தகமோ இருக்கவில்லையென்பதை கனகசுந்தரம் அவதானித்திருந்தார். தைப் பூரணத்திடம் சொன்னால் "உங்களுக்குக் கண் பழுதாய்ப் போச்சு. கண்ணாடி போடுங்கோ" என்றுதான் சொல்வாள். அதனல் பேசாமல் சமையலறையிலிருந்து வந்து மறுபடி வாளைவியில் கை வைத்தார்.

வீட்டிலிருந்து புறப்பட்ட நிரஞ்சனும், டேவிட்டும் கண்ணாடிக் கண்டுக்குள் நின்று கொண்டு போகும் பாப்பரசரைப் போல சைக்கிளில் ஊர்ந்து கொண்டு போனர்கள்.

"இனி எப்ப மச்சான் சரக்கை மடக்கப் போறய்?" டேவிட் ஆர்வமாகக் கேட்டான்.

"சில விசயங்களை இப்ப வெளியில விடேலாது"

"இப்ப சொல்லாத. பிறகு ஒன்றும் சரி வரேலயடாப்பா. என்ன செய்யிறதென்டு கேட்டுக் கொண்டு என்னட்ட வா. அப்ப கவனிக்கிறன்"

"கோவியாதை மச்சான். சும்மா பகிடிக்குச் சொன்னனன். உனக்குச் சொல்லாம வேற ஆருக்குச் சொல்லுறது"

சைக்கிள் ஒரு ஒதுக்குப்புறத்துக்கு வந்தது. அந்த இடம் முழுவதும் புற்களும், மரங்களும் நிரம்பியிருந்தன. மெல்லிய தடமாகப் பாதையொன்று ஊடுருவிப் போனது.

இருவரும் கவனமாக உட் பிரவேசித்தார்கள். அதுதான் அவர்களுடைய வசந்த மண்டபம். மந்திராலோசனைக் கூடமும் அதுதான்.

www.padippakam.com



சைக்கிளைத் தரையில் படுக்க வைத்துவிட்டு இருவரும் மரமொன்றுடன் சாய்ந்து உட்கார்ந்தார்கள். டேவிட் மறைத்து வைத்திருந்த சிகரெட் பெட்டியை எடுத்தான். இருவரும் இரண்டு சிகரெட்டுகளில் நெருப்பைமூட்டி சுதந்திரமாகப் புகைவிட்டார்கள்.

"சோதினையும் வருகுது. என்னடா செய்யிறது?" மூக்கால் புகை விட்டபடியே டேவிட் கவலைப்பட்டான்.

"சோதினை அப்பப்ப வரும். இதுக்கெல்லாம் யோசிக்கதொடங்கிற என்னண்டு சீவிக்கிறது?" நிரஞ்சனின் மூக்கிலிருந்தும் புகை வெளியேறியது.

"போனமுறை மாதிரி அதே கட்டிடம் எண்டா பாத்தேதேன் செய்யலாம்"

"எதுக்கும் ரண்டு, மூண்டு நாளைக்கு முதல் ஒழுங்கா கோயிலுக்குப் போறு ஏதேன் பலன் கிடைக்கும்"

"உங்கட சரஸ்வதியிட்ட எனக்கும் சேத்து அப்ளை பண்ணு"

இருவரும் சிரித்தபடி நிக்கொட்டினை உறிஞ்சி இளம் சுவாசப் பைகளைக் கறைப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

# 16

ஞாயிற்றுக் கிழமை சோம்பலாக விடிந்தது. பத்மா தூக்கம் கலையும் போது ஒன்பது மணி தாண்டியிருந்தது. அப்போதும் அவளுக்குப்படுக்கையை விட்டெழும்ப மனம் வரவில்லை. உடம்பு முழுவதும் அசதி பரவியிருந்தது. போர்வையால் இழுத்து மூடிக் கொண்டு முகட்டைப் பார்த்தபடி அப்படியே படுத்திருந்தாள்.

வெளியே வேதா வளவைக் கூட்டிக் கொண்டிருக்கும் சலசலப்புக் கேட்டது. அம்மா சிரமப்படும்போது தான் படுத்திருந்தால் அநியாயம் என்று பத்மா கட்டிலிலிருந்து எழுந்தாள். படுக்கையை தட்டி மடித்து வைத்தாள்.

முகம் கழுவக் கிணற்றடிக்கு வந்தபோது வெயில் சுளீரென்று முகத்தில் அடித்தது. பறவைகள் ஞாயிற்றுக் கிழமையை அலட்சியம் செய்து

படிப்பகம்

www.padippakam.com



சுறுசுறுப்பாக பறந்து கொண்டிருந்தன. புதிய பூக்கள் பூத்திருந்தன.

"ஏன் பத்மா அதுக்குள்ள எழும்பிவிட்டாய்?" வேதா கூட்டு வதை நிறுத்தி, அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு கேட்டாள்.

"இண்டைக்கு சமையல் என்ரை ஸ்பெஷல். அதுதான் நேரத் தோட எழும்பியிருக்கிறன்" பத்மா சொல்லிவிட்டு முகம் கழுவிக் கொண்டு வீட்டுக்குள் வந்தாள்.

இன்றைய மதியச் சாப்பாட்டைத் தான் பொறுப்பேற்பதென அவள் நேற்றே தீர்மானித்து விட்டாள். அம்மாவின் பங்களிப்புகள் எதுவும் இருக்கக் கூடாதென்பதற்காக விரைவாக வேலைகளை ஆரம்பித்தாள்.

தேநீருக்குத் தண்ணீரைக் கொதிக்க வைத்துவிட்டு அறைக்கு வந்து தலை சீவி, இரண்டாகப் பின்னிக் கொண்டாள். அலுமாரிக்குள் கலைந்திருந்த உடைகளை ஒழுங்குபடுத்தினாள்.

தண்ணீர் கொதித்ததும் தேநீர் தயாரித்து ஒன்றை அம்மாவிடம் கொண்டு வந்து கொடுத்தாள்.

"நல்லா களைச்சுப் போனியள். நீங்கள் செய்யாட்டி நான் செய்ய மாட்டேனே?" பத்மா அம்மாவின் வியர்வையைப் பார்த்துக் கவலைப்பட்டாள்.

"இந்த வேலயும் செய்யாமப் படுத்துக் கிடந்தா வருத்தம் தான்வரும்" என்ற வேதாவின் சிரிப்பில் களைப்பில்லை.

அம்மா தேநீர் குடித்து முடித்ததும் குவளையை வாங்கிக்கொண்டு சமையலறைக்கு வந்த பத்மா தனது சமையல் பாகத்தை ஆரம்பித்தாள்.

நேரம் நழுவிக் கொண்டிருந்தது. ஊர் கொஞ்சம் கொஞ்சமாக விழித்துக் கொண்டது. சிறுவர்கள் அன்றைய விளையாட்டுகளை ஆரம்பித்தார்கள். சிநேகிதர்கள், சிநேகிதிகள் சந்தித்தார்கள். பஸ்கள் பயணிகள் இல்லாமல் பிரயாணம் செய்தன.

வெளி வேலைகளை முடித்துக் கொண்டு சமையலறைக்கு வந்த வேதாவை, சமையல் முடியும்வரை பத்மா எதுவுமே செய்ய அனுமதிக்கவில்லை. வேதா பூரிப்புடன் மகளின் சமையலைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

சமையல் முடிந்ததும் இருவரும் ஒன்றாகக் குளித்தார்கள். ஒருவ

படிப்பகம்

www.padippakam.com



ருக்கொருவர் முதுகு தேய்த்து விட்டார்கள். தண்ணீரை எற்றி விளையாடினர்கள். அந்த நேரத்தில் அவர்கள் முழு மகிழ்ச்சியாக இருந்தார்கள். எந்தக் கவலையுமே அவர்களைத் தீண்டவில்லை.

குளித்து முடித்து, தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து ஒருவருக்கொருவர் பரிமாறியபடி சாப்பிட்டார்கள்.

"கறி நல்ல ரேஸ்றா இருக்கு. வரப் போறவன் குடுத்து வைச்சவன்தான்" என்று வேதா மெல்ல ஆரம்பித்தாள்.

"வாறவன் குடுத்து வைச்சாலும் சரி, குடுத்து வைக்காட்டிலும் சரி நான்தான் கட்டாயம் சமைச்சுப் படைக்க வேணுமெண்டில்லை. வாறவரும் அப்பப்ப பங்கெடுக்கத்தான் வேணும்" என்று பத்மா சிரித்தாள்.

"சாப்பாட்டுக் கடையில வேலை செய்யிறவையைக் கட்டினால் தான் உன்ரை ஆசை நிறைவேறும். வேறையெந்த ஆம்பிளையள் குசினிபக்க வருவினம்?"

"அதுவும் சரிதான். எதுக்கும் யோசிப்போம்"

"உன்னட்டை கேக்க வேணுமெண்டு யோசிச்சனான். ரவூணுக்க நீ ஆரையேனும் சந்திச்சனியே?"

"நீங்கள் ஆரைக் கேக்கிறியள்?"

"பத்மலிங்கத்தை"

பத்மா தாயை நிமிர்ந்து பார்த்தாள். வேதாவின் முகத்தில் எந்தச் சலனமுமில்லை. அவள் தொடர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தாள்.

"நானேன் சந்திக்க வேணும். ஒரு தொடர்பும் வேண்டாமெண்டுதானே எப்பவோ ஒதுங்கியிட்டோம். ஏன் இருந்தாப் போல கேட்டனியள்?"

"ரவூணுக்க கல்பார் வைச்சிருக்கிறார் என்டு கேள்விப்பட்டனான். உன்னைக் காணக்கூடிய சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. அதாலதான் கேட்டனான்"

"நான் எப்பவோ கவனிச்சிட்டன். திரும்ப வந்து ஒட்டினாலும் ஒட்டுவார் என்டுதான் ஒதுங்கி நிக்கிறனான்"

சாப்பாடு முடிந்ததும் வேதா தனது தையல் வேலையை ஆரம்பித்து விட்டாள். பத்மா புத்தகம் ஒன்றை எடுத்துக் கொண்டு வெளியே வந்து பலா மரத்தின் கீழ் போடப்பட்டிருந்த குற்றியொன்றில் அமர்ந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



மரத்தில் இரண்டு அணில்கள் ஏதோ கொறித்துக் கொண்டிருந்தன.கீழே நிலத்தில் எறும்புகள் பட்டாளம் வெள்ளைக் கொடியுடன் ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

"மாலை வணக்கம்"

குரலைக் கேட்டு பத்மா புத்தகத்திலிருந்து பார்வையை உயர்த்தினள்.உமா வந்து கொண்டிருந்தாள்.

"வாரும்.எங்க ஆளைக் காணேல எண்டு யோச்சுக் கொண்டிருந்தன்"

"யூனிபோம் எல்லாம் தோய்க்க வேண்டியிருந்தது.அந்த அலுவலை முடிச்சுப் போட்டு வாறன்" என்றபடி பத்மாவுக்குப் பக்கத்தில் அதே குற்றியில் உமாவும் அமர்ந்து கொண்டாள்.வீட்டு விசயங்களையே பரிமாறிக் கொள்ளுமளவிற்கு இருவரும் நட்பில் நெருக்கமாகியிருந்தனர்.

தனக்கு நேரம் கிடைக்கும் போது உமா பத்மாவின் வீட்டுக்கு வருவாள்.அதே போல் பத்மாவும் அடிக்கடி அவர்கள் வீட்டுக்குப் போய் வருவாள்.

"உதென்ன புத்தகம்?" என்று உமா கேட்டாள்.

"சொல்லாத சேதிகள் எண்டு பாட்டுப் புத்தகம். எங்கட பெண் கவிஞர்மாற்றை கவிதைகள்.நல்லாயிருக்குது.வாசிக்கப் போறீரே" பத்மா கேட்டாள்.

"கவிதையொண்டா எனக்கு கண்ணில காட்டேலாது. ஏதாவது நாவல் எண்டா கொஞ்சம் படிப்பன்" உமா தனது ரசனையைத் தெரிவித்துக் கொண்டாள்.

அதன் பிறகு இருவரும் வேறு விடயங்களைப் பற்றிக் கதைத்தார்கள்.இடையில் சினிமாவும் வந்தது.

"லவ் பண்ணுறதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள்?" எனத் திடீரென உமா கேட்டாள்.

"என்ன இருந்தாப் போல இப்பிடிக் கேக்கிறீர்.பேட்டி எடுக்கப் போறது மாதிரித் தெரியுது" என்று பத்மா சிரித்தாள்.

"சொல்லுங்கோவன்.ஒரு விசயமாத்தான் கேக்கிறன்"

"என்ன மாதிரியான காதல் எண்டதை வைச்சுத்தான் லவ் பண்ணுறதைப் பற்றிக் கதைக்கலாம்"

www.padippakam.com



"எனக்கு விளங்கேல"

"சிலபேர் உடம்பை லவ் பண்ணுவினம். சில பேர் காசைத்தா ன்லவ் பண்ணுவினம்" பத்மா கையிலிருந்த புத்தகத்தை மூடி வைத்தாள்.

உமாவுக்குத் திடீரென தன்னுடைய காதல் நினைவுக்கு வந்தது. தன்னை நிரஞ்சன் விரும்புவது எதற்காக என்ற சந்தேகம் இப்போது வந்தது. 'என்னட்டைக் காசில்லேயெண்டு அவருக்குத் தெரியும். அப்பிடியெண்டா உடம்பையே? சீ' உமாவுக்குக் குழப்பமாக இருந்தது.

"இந்தச் சினிமாப் படங்களாலதான் காதலைப் பற்றி எல்லாரும் குழம்பிப் போயிருக்கினம். படங்களில வாற சாத்தியமில்லாத விசயங்களைப் பாத்துத்தான் எல்லாரும் முறைகேடா நடக்கினம். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒருத்தற்றை மனசை ஒருத்தர் விரும்புறது தப்பில்லே. அதை ஆரும் குறை சொல்லவுமேலாது. ஆனா அப்படிக் காதலிக்கிறவை சரியான முறைவு. ஆணோ, பெண்ணோ தங்களைக் கவர்ந்த வடிவான ஆளை அல்லதுகாசுள்ள ஆளைத்தான் தேடியினம். இதில இருந்து என்ன தெரியுது? ஒருத்தற்றை உடம்பு அல்லது காசுதான் மற்றவருக்குத் தேவைப்படுகுது" என்று பத்மா சொல்லி நிறுத்தியதும் உமா இன்னும் அதிகமாகக் குழம்பிப் போனாள்.

உண்மையிலேயே அவளுக்குத் தன்னுடைய காதலைப் பற்றி சந்தேகம் வந்துவிட்டது. தன்னுடைய மனப்பாரத்தை பத்மாவுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினாள். ஆனால் வெட்கமாக இருந்தது.

"இப்ப என்னை ஒராள் லவ் பண்ணுறார் எண்டு வைச்சுக்கொள்ளுங்கோவன். அவர் எப்பிடிப்பட்ட ஆள்? எதை விரும்பிறார் எண்டு என்னெண்டு கண்டு பிடிக்கிறது?" உமா சுற்றி வளைத்துக் கேட்டாள்.

"அது கஷ்டம்தான். ஆனா எப்பிடியும் ஒராளின்ரை நடவடிக்கையளால குணத்தைப் பற்றித் தெரிய வந்திடும். காதலிக்கிற சில பேர் கலியாணக் கதையை எடுத்தா இழுத்தடிச்சுக் கொண்டிருப்பினம். அவையளுக்கு ஒரு உடம்பு தேவைப்படுதெண்டது நிச்சயம். சில பேர் தங்கட குடும்பக் கஷ்டத்தை இடைக்கிடை சொல்லி அழுது காசு விரண்டப் பாப்பினம். இவையின்ரை நோக்கம் காசுதானெண்டது இதால தெரிய வரும்" பத்மா விளக்கினாள்.

உமா அவள் சொல்வதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். பத்மாவை நினைக்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு புத்திசாலியான பெண் தன்னுடைய சிநேகிதியாக இருக்கிறாள் என்று தனக்குள் பெருமிதப்பட்டுக் கொண்டாள். தனக்குள்ளேயே பொத்தி வைத்திருக்கும் காதல் விசயத்தைப் பத்மாவுக்குத் தெரிவித்து விடுவது என்று தீர்மானித்துக் கொண்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



"நான் உங்களுக்கு ஒரு விசயம் சொல்லுவன். நீங்கள் ஆரிட்டயும் சொல்லப்படாது என்ன" உமா மெல்ல ஆரம்பித்தாள்.

என்னவாயிருக்கும் என்ற வியப்புடன் பத்மா உமாவையே பார்த்தாள்.

"நான் ஒருத்தரை லவ் பண்ணுறன்" சன்னமான குரலில் சொல்லிவிட்டு உமா தலையைக் குனிந்து கொண்டாள். முகம் அவசரமாகச் சிவந்தது.

"இதுக்கேன் வெட்கப்படறீர். நீர் லவ்வைப் பற்றிக் கேக்கேக்கயே எனக்கு ஐமிச்சமா இருந்தது. நீரா சொல்லுவீர் எண்டுதான் கேக்கேலை" பத்மா புன்முறுவலுடன் பதிலளிக்காள்.

உமாவால் பத்மாவைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தன்னைக் கேலி செய்வாள் அல்லது செய்யக் கூடாததைச் செய்தது மாதிரிப் பார்ப்பாள் என்று தான் நினைத்ததிற்கு மாறாக மிகவும் எளிமையாக அவள் விசயத்தை எடுத்துக் கொண்டது உமாவுக்கு வியப்பாக இருந்தது.

"எவ்வளவு காலமா லவ் பண்ணுறீங்கள்" பத்மாதான் கேட்டாள்.

"இப்ப கொஞ்சக் காலமாத்தான்" உமாவின் வெட்கம் கொஞ்சம் குறைந்தது.

"ஆள் ஆர் இந்த ஊர்தானோ?"

"இல்லை. ரவுணில இருக்கிறவர்"

"அவருக்கு எத்தினை வயசு"

"என்ரை வயசுதான். அவரும் படிக்கிறார்"

உமாவின் வயதை நினைத்துப் பார்த்த பத்மா பேசாமலிருந்தாள். இந்த வயதில் ஏற்படுவது அநேகமாக காதலாக இருக்காதென்றே அவளுக்குப் பட்டது.

இது வெறும் கவர்ச்சி. உடற் கவர்ச்சி. உடற்கூறில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப உண்டாகும் எதிர்பாற் கவர்ச்சி. இயற்கையாக அமைந்த சுரப்பிகள் வழக்கமாகச் சுரக்கும் சுரப்புகளின் தூண்டலினால் உண்டாகும் செய்கை. இந்த வயது மிகவும் ஆபத்தான வயது.

உமா தன்னையறியாமல் தவறு செய்கிறாளோ என்று பத்மாவுக்குக் கவலையாகவும் இருந்தது. கண் முன்னால் ஒருவர் பாதிக்கப்பட அனுமதிக்கக் கூடாது என்று மனம் சொல்லியது.

படிப்பகம்

www.padippakam.com



"உம்மை உரிமையோட சில விசயங்கள் கேக்கலாமே?" பத்மா உமாவைப் பார்த்தபடி கேட்டாள்.

"தாராளமா. உங்களுக்கு மட்டும்தானே நான் எல்லா விசயங்களையும் சொல்லியிருக்கிறன்"

"நீங்க ரெண்டு பேரும் எங்கயெங்க சந்திக்கிறனியள்?"

"பள்ளிக்கூடத்தில இருந்து பஸ்ஸ்ராண்டுக்கு வரும் மட்டும்தான்"

"வேற ஓரிடமும் போற இல்லையே?"

இல்லை என்று சொல்ல வாயெடுத்த உமாவுக்கு கிறீம்கவுஸ் ஞாபகத்துக்கு வந்தது. "ரண்டு மூண்டு நாள் கிறீம் கவுசுக்குப் போனனாங்கள்" என்றாள்.

பத்மா யோசனையில் ஆழ்ந்தாள். 'இதில விசயம் இருக்கு. பையன் காசுள்ள இடம் போல தெரியுது. உண்மையிலேயே இவையின்ரை காதல் உண்மையானதாக இருக்கலாம். பெடியனும் நல்லவனாய் இருக்கலாம். ஆனா பாதகங்களைப் பற்றியும் ஆராய வேணும். அதுதான் பாதுகாப்பானது. உமா சின்னப் பெண். பரந்தளவில் ஆராயும் அனுபவங்கள் அவளுக்கு இப்போது இருக்காது. அதனால் வெறும் மாயையில் சிக்கித் தன்னை இழந்து விடுவாள். ஆகவே இவளை எச்சரிக்க வேணும்'

"என்ன கனக்க யோசிக்கிறியள்?" உமா குழம்பியவளாகக் கேட்டாள்.

"ஒண்டுமில்லை. இதைப் பற்றி இன்னும் ஆறுதலா, வடிவாக் கதைக்க வேணும்." பத்மா யோசித்தபடியே சொன்னாள்.

வேதா அவர்கள் இருவருக்கும் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தாள். இருவரும் எடுத்துக் கொண்டார்கள்.

"தம்பி, தங்கச்சியவை என்ன செய்யினம்?" என்று வேதா உமாவை விசாரித்தாள்.

"அப்பாவோட விளையாடிக் கொண்டிருக்கினம்"

அவர்கள் குடித்து முடித்ததும் காலிப் பேணிகளை எடுத்துக் கொண்டு வேதா வீட்டுக்குள் வரும்போது நெஞ்சு வலி ஆரம்பமாகியது.

www.padippakam.com



# 17

பிற்பகல் நேரம். நகரின் ஆர்ப்பாட்டங்கள் மந்தமாக இருந்தன. கல்பார்களும், கிறீம் கவுஸுகளும் மட்டும் வழமையான சுறுசுறுப்பில் இருந்தன.

நடைபாதை வியாபாரிகள் கடைகளை அப்படியே விட்டு எதிரிலிருக்கும் தேநீர்க் கடைகளில் பாணும், வாழைப்பழமும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். தேநீர்க் கடைகளின் வானொலிப் பெட்டிகள் அவரவர் விருப்பத்திற்கேற்பப் பாடிக் கொண்டிருந்தன.

'பாறுமதி றெக்ஸ்ரையும்' தூங்கி வழிந்து கொண்டிருந்தது. ரகுராமன் கடைக்கு வெளியே முக்காலியைப் போட்டுவிட்டு பாதைக்காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்தான். மாலா புதிய மர்ம நாவலில் ஆழமாக மூழ்கிப் போயிருந்தாள்.

பத்மா வெள்ளைக் கடதாசி ஒன்றில் கூட்டிக் கழித்துக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தாள். தவபாலனைக் காணவில்லை.

பஸ் சீசன் ரிக்கற்றெக்கு என்று ஒரு தொகையைப் போட்ட பத்மா வரவும், செலவும் விரோதமாயிருப்பதை அவதானித்தாள். எந்தச் செலவைத் தவிர்க்கலாம் என்று தெரியவில்லை. கடைக் கணக்குகள் முக்கியம். அவற்றை தீர்க்காவிட்டால் அப்புறம் கடன் தர மாட்டார்கள். சமையற் பாத்திரங்கள் இரண்டு புதிதாக வாங்க வேண்டும். அவையும் முக்கியம். அப்படியானால் எதைத் தவிர்ப்பது?

மூளை நரம்புகள் குழப்பமடையவே பத்மா கடுதாசியைக் கசக்கிக் கூடைக்குள் போட்டாள். வேறு ஏதாவது அலுவலில் ஈடுபட விரும்பினாள். ஏதாவது மாற்றம்தான் களைப்பைப் போக்கும்.

மாலா இன்னும் கொலைகாரனைக் கண்டு பிடிக்கவில்லை. ரகுராமன் தொடர்ந்தும் வெளிவிவகாரத்திலேயே கவனமாக இருந்தான்.

தவபாலனின் இடம் காலியாக இருந்தது. ஆளை இன்னமும்காணவில்லை. அவன் இருக்கும் முக்காலிக்குப் பின்புறமாக இருந்த தட்டில் சில புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன.

பத்மா எழுந்து போய் அந்தப் புத்தகங்களை எடுத்துப்பார்த்தாள். அநேகமானவை நூல்நிலையப் புத்தகங்களே. இரண்டு புத்தகங்களை

படிப்பகம்

www.padippakam.com



தவபாலன் கடையில் சொந்தமாக வாங்கியிருக்க வேண்டும். அவற்றுள் ஒரு புத்தகத்தை எடுத்த பத்மா தனது இருக்கைக்கு வந்து படிக்க ஆரம்பித்தாள்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. அடுத்த காட்சிக்காகப் பலர் தியேட்டருக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். பலர் கிராமங்களிலிருந்து நகரத்தின் தேவைகளுக்காக வந்து கொண்டிருந்தார்கள்.

நீண்ட நேரத்தின் பின்பு இரண்டு இளைஞர்கள் வந்து டெனிம் விரும்ப, பத்மா வெட்டிக் கொடுத்தாள். அதற்குப் பிறகு யாரும் வரவில்லை.

பத்மா தொடர்ந்து வாசித்து இருபத்தொராம் பக்கத்துக்கு வந்தபோது அங்கு வைக்கப்பட்டிருந்த கடதாசித் துண்டொன்று இடைமறித்தது. தற்செயலாக அதைப் படித்தாள்.

என் மனதைக் கவர்ந்த பத்மாவுக்கு

என்று மட்டும் எழுதியிருந்தது. பத்மா பட்டென்று புத்தகத்தை மூடினாள். மார்பு படபடத்தது. உடலில் இலத்திரன்கள் குபீரென்று பாய்ந்தன.

தவபாலன் எதையோ எழுத விரும்பி எழுதாமல் விட்டிருந்தான். என்ன அது?

பத்மாவுக்குத் தன்னை நினைக்கையில் புரியாமல் இருந்தது. மெல்ல நிதானமானாள். ஏன் இந்தப் பரபரப்பு வருகிறது?

ஒரு ஆண் ஒரு பெண்ணை ஆசையாக விளித்திருக்கிறான். இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

தவபாலன் தவறு ஒன்றும் செய்யவில்லையே. விரும்புவது அவனது சுதந்திரம். அதை ஏற்றுக் கொள்வதும், நிராகரிப்பதும் என்னுடைய சுதந்திரம். அதற்கு ஏன் இந்தப் படபடப்பு? இது மகிழ்ச்சியா? அல்லது கோபமா?

கோபம் வரவில்லையென்று நிச்சயமாகத் தெரிகிறது. அப்படியானால்...?

பத்மா தன்னை நிதானித்துக் கொண்டாள். புத்தகத்தை எடுத்த இடத்தில் வைப்பதற்காக அவள் எழுந்தபோது தவபாலன் கடைக்குள் பிரவேசித்தான்.

உள்ளே வந்தவன் பத்மாவின் கையிலிருந்த புத்தகத்தையும் அவதானித்தான். அவனது முகத்தில் ஏதேதோ மாற்றங்கள் நிகழ்ந்தன.

www.padippakam.com



பத்மா அலட்டிக் கொள்ளாமல் புத்தகத்தை எடுத்த இடத்தில் வைத்துவிட்டு தனது இடத்துக்கு வந்தாள். கடைக்கு ஆட்கள் வரவே அவர்கள் இருவரும் கதைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

கடை பூட்டியபின் பத்மா பஸ் நிலையத்தை நோக்கிப் போகும்போது தவபாலனும் வந்தான்.

"என்ன பகல் முழுக்க ஆளைக் காணேல?" பத்மாதான் ஆரம்பித்தாள்.

"முதலாளி வீட்டில ஏதோ வேலை இருக்குதெண்டு சொன்னவர். அதுதான் செய்து போட்டு வாறன்"

இருவரும் பஸ் நிலையத்திற்குள் புகுந்து கொண்டார்கள். கூட்டம் அவ்வளவில்லை.

பத்மா தவபாலனை நேராகப் பார்த்தாள். அவனுடைய கண்களில் பல அர்த்தங்கள் தெரிந்தன. திடீரென எங்கிருந்தோ வெட்கம் வந்துவிட பத்மா தலையைக் குனிந்தாள்.

இவர்களிருவரையும் தூரத்தே நின்ற பத்மலிங்கத்தின் கண்கள் கவனித்துக் கொண்டிருந்தன.

## 18

இரண்டு வருடங்கள் போய்விட்டன. இந்த இரண்டு வருடங்களிலும் –

பத்மாவும், தவபாலனும் ஒருவரை ஒருவர் பகிரங்கப்படுத்தாமலேயே ஆழமாக நேசிக்க ஆரம்பித்தார்கள். அவர்களின் சந்திப்பு கடையிலும், பஸ் நிலையம் வரையுமே இருந்தது.

வேதாவுக்கு நெஞ்சு நோ அடிக்கடி வந்து வைத்தியரிடம் காட்டி மருந்தும் எடுத்துக் கொண்டாள். தையல் வேலைகளும் இதனால் பாதிக்கப்பட்டன.

உமாவும், நிரஞ்சனும் அடிக்கடி கிறீம் கவுசில் சந்தித்துக்கொண்டார்கள். ஒருநாள் பாடசாலைக்கு மட்டம் போட்டுவிட்டு உமா நிரஞ்சனுடன் படம் பார்த்தாள்.

www.padippakam.com



உயர்தரப் பரீட்சையில் உமா சித்தியடையாததால் அவளுடைய படிப்புக்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. மகளுக்கு நல்லதொரு வேலையை சோமசுந்தரம் தேடிக் கொண்டிருந்தார்.

நிரஞ்சனும் உயர்தரப் பரீட்சையில் சித்தியடையவில்லை. முதலிலேயே சொன்னபடி வைத்தியநாதன் தனது 'டிப்பார்ட்மென்டல் ஸ்ரோரில்' அவனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்திருந்தார்.

பாடசாலைக்குப் போய்வரும்போது சந்திக்கும் தமதுதொடர்பு அறுந்து போனதால் உமாவும், நிரஞ்சனும் கடிதத் தொடர்பை உண்டாக்கியிருந்தார்கள். நிரஞ்சனிடமிருந்து நிரஞ்சி என்று கையொப்பம், முகவரியிடப்பட்ட கடிதம் வரும்.

# 19

'ரேப் ரெக்கோடர்' புதிய தமிழ்ப்பாடலைப் பாட, நிரஞ்சன் உற்சாகமாகப் பொருட்களைப் பையில் போட்டு காசாளர் பகுதிக்கு அனுப்பிக் கொண்டிருந்தான்.

வைத்தியநாதனின் 'டிப்பாட்மென்டல் ஸ்ரோர்ஸில்' வேலைக்குச் சேர்ந்த சில நாட்களிலேயே அவனுக்கு இந்த வேலை பிடித்துப்போய்விட்டது. வேலை ஒன்றும் கடினமல்ல. தனது பகுதிக்கு வரும் பொருட்களை கணக்குப் பார்த்து, பற்றுச்சீட்டுப் போட்டு, பைகளில் பொருட்களை வைத்துக் காசாளர் பகுதிக்கு அனுப்புவதே அவனுடைய வேலை.

வேலை கடினமானதில்லை என்பது மட்டும்தான் அவனுடைய சந்தோசம் அல்ல. கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுடன் அதுவும் குறிப்பாக பெண் வாடிக்கையாளர்களுடன் சிரித்துக் கதைப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததே தனது பாக்கியம் எனக் கருதினான்.

பாடசாலை வாழ்க்கை முற்றுப் பெற்றதோடு உமாவை அவன் சுத்தமாக மறந்து போனான். அவ்வப்போது போட்டு வந்த கடிதங்களையும் அறவே நிறுத்தியிருந்தான். இப்போது கடையில் வேலை செய்யும் ஒரு பெண் ஊழியர் மீது அவன் கண் இருந்தது.

வைத்தியநாதன் போதுமான சம்பளம் கொடுத்தார். அன்னபூரணத்திற்கு முழுமையான திருப்தி. மகனின் சம்பளத்தில் வீட்டின் வெற்றிடங்களை பொருட்களினால் நிரப்பிக் கொண்டிருந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



மகனுக்கு நல்லதொரு வேலை கிடைத்ததில் கனகசுந்தரத்துக்கும் மகிழ்ச்சி என்றாலும் வைத்தியநாதன் தானாக இந்த வேலையைத் தந்ததின் பின்னால் ஏதோ ஒரு திட்டமிருப்பதாக உணர்ந்தார். அது எப்படியான பாதிப்பை ஏற்படுத்துமோ என்பதுதான் அவருடைய கவலையாக இருந்தது.

படிக்கும் காலத்திலேயே வீட்டில் அதிகம் நிற்காத நிரஞ்சன் வேலைக்குச் சேர்ந்தபின் வீட்டில் நிற்பதை இன்னும் குறைத்துக் கொண்டான். கையில் எப்போதும் காசிருந்ததால் எல்லாப் படங்களும் பார்க்கமுடிந்தது. கடைகளில் சாப்பிட முடிந்தது. 'வெற்றஸ்ற்' உடுப்புகள் வாங்க முடிந்தது.

நிரஞ்சன் இப்போது பகிரங்கமாகவே சிகரெட் புகைப்பான். அன்னபூரணம் முதலில் அதிர்ச்சியடைந்தாலும் மகனின் வருமானத்தை நினைத்துப் பின்னர் ஏற்றுக் கொண்டாள். கனகசுந்தரம் கோபமடைந்தாலும் அவரால் கண்டிக்க முடியாமலிருந்தது.

"அண்ணை உங்களை ஒருக்கா முதலாளி தன்ரை வீட்ட வரட்டாம்" அரைக் காற்சட்டை போட்டிருந்த எடுபிடிப் பெடியன் வந்து நிரஞ்சனிடம் தகவல் தெரிவித்துப் போட்டுப் போனான்.

நிரஞ்சனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இன்றுவரை அவன் வைத்தியநாதன் வீட்டுக்குப் போனதேயில்லை. அவரும் இதுவரை அவனை அழைத்ததில்லை.

ஊரிலுள்ளவர்களில் அநேகமாக எவருமே வைத்தியநாதனின்வீட்டுக்குள் போயிருக்க மாட்டார்கள். ஒன்று அவரின் மட்டத்தை விடக் குறைவாக இருப்பார்கள். இல்லையென்றால் அழைப்பு இருக்காது.

"ராமு பாத்துக் கொள்" என்று ராமுவை அழைத்து தன்னுடைய வெற்றிடத்தை நிரவிவிட்டு நிரஞ்சன் கடைக்கு வெளியே வந்தான்.

அவனுடைய 'சீ 90' விறைப்புடன் நின்றது. ' எப்படியும் வாற மாதம் வன்டைபை அவிட்டுப் போட வேணும்' நிரஞ்சன் தீர்மானித்துக் கொண்டான்.

மோட்டார் சைக்கிள் அவனை ஏற்று புகையைக் கக்கியபடி பாதையில் நழுவியது. நிரஞ்சனுக்கு வெட்டி, வெட்டி ஓடுவதில் நல்ல விருப்பம். பஸ், கார்களைத் திடீரெனக் கடந்து அவர்கள் வாய் விட்டுத் திட்ட சிரித்துக் கொண்டு போனான்.

வைத்தியநாதனின் வீட்டைத் தூரத்திலேயே அடையாளம்கண்டு கொண்டு விடலாம். அந்த வீடுதான் உயரமான மாடியுடன் கட்டப்பட்டிருந்த ஒரே வீடு. பக்கத்தில் குடிசை ஒன்று கொஞ்சமும் பொருத்தமில்லாமல்

www.padippakam.com



அமைந்திருந்தது. கல்வீடு வந்தபடியால்தான் இந்த வீடு இப்படியாயிற்று என்று ஊரில் பேசிக் கொண்டார்கள்.

கூரான வேல்கள் அடர்ந்திருந்த இரும்புப் படலை முதலில் வரவேற்றது. வீட்டை சுற்றி வளைத்திருந்த மதிலில் கண்ணாடித் துண்டுகள் பதிக்கப்பட்டிருந்தன.

நிரஞ்சன் மோட்டார் சைக்கிளை வெளியே நிறுத்திவிட்டு படலையைத் திறந்தான். கனமான இரும்பு சிரமமாகவே திறந்து கொண்டது. படலையிலிருந்து வீடு வரைக்குமான பாதை சீமெந்தினால் போடப்பட்டிருந்தது. இரு மருங்கிலும் அழகான பூச்செடிகள் அநியாயமாக அந்த வளவில் சிறைப்பட்டிருந்தன.

நிரஞ்சன் வீட்டு வாசலுக்கு வர, வைத்தியநாதன் உள்ளேயிருந்து வந்தார்.

"நிரஞ்சன் உள்ளுக்கு வாரும்" வைத்தியநாதன் நிரஞ்சனை 'நீர்' போட்டுத்தான் அழைப்பார். தனக்கு மட்டும் ஏன் இந்த வித்தியாசம் என்று அவனுக்குப் புரியவேயில்லை.

நிரஞ்சன் அவருடன் உள்ளே போனான். தரை கண்ணாடியாகப்பளிச்சிட்டது. கூடத்தை அலங்காரப் பொருட்கள் ஆடம்பரமாக நிரப்பியிருந்தன.

இருவரும் மெத்தை போட்ட ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள்.

"கடையில சனமோ?" வைத்தியநாதன் விசாரித்தார்.

"பறவாயில்லை" நிரஞ்சன் கண்களைச் சுழற்றி அங்கிருந்த பொருட்களைப் பார்த்து வியந்தபடி பதிலளித்தான். இப்படியான வீட்டையும், பொருட்களையும் அவன் திரைப்படங்களில் மட்டுமே பார்த்திருக்கிறான். அதை விடக் கனவாகவும் கண்டிருக்கிறான். உண்மையாகப் பார்ப்பது இதுவே முதல் தடவை.

வைத்தியநாதன் நிரஞ்சனின் முகபாவங்களையும், கண்களின்போக்கையும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தார்.

"ஏன் வரச் சொன்னனான் தெரியுமே?"

நிரஞ்சனின் தலை இல்லையென்றாட, கண்கள் சுழலுவதை நிறுத்த மறுத்தன.

"இண்டைக்குச் சம்பள நாள். அது என்னால வரேலாம இருக்கு.

www.padippakam.com



வேற அலுவலாய்ப் போக வேணும்.அததான் உம்மைக் கூப்பிட்டனான்"

சம்பள நர்குக்கும்,தனக்கும் என்ன சம்பந்தம் என்று நிரஞ்சனுக்கு விளங்கவில்லை.வைத்தியநாதனைக் கேள்வியுடன் பார்த்தான்.

"உம்மட்ட இப்ப காசைத் தாறன்.எல்லாற்றை பேரும் என் வலப்பில எழுதித் தனித்தனியா வச்சிருக்கு.கடைக்குக் கொண்டு போய் அவையவையிட்ட குடும்"

தான் காண்பது கனவா என்று நிரஞ்சன் குழம்பிப் போனான். எல்லோருடையதும் சம்பளம் என்றால் எத்தினையாயிரம் ரூபா?அதை என்னிடம் நம்பித் தருகிறரா?உண்மையாகவா?

நிரஞ்சன் முழித்தபடி அவரையே பார்த்தான்.வைத்தியநாதன் எழுந்து உள்ளே போனார்.

நிரஞ்சனுக்கு உண்மையில் எதுவும் புரியவில்லை.'உவ்வளவுதொகைக் காசை என்னட்டைத் தாறதுக்கு உந்தாளுக்கு எப் படி மனம் வந்தது?ஒருக்கால் என்னைச் சோதிச்சுப் பாக்கிறரோ?ஏன் சோதிக்க வேணும்?வேலையில பதவி உயர்வு கிடைக்கப் போகுதோ?அதுக்காண்டி உப்பிடியே கையில காசைத் தந்து சோதிக்கிறது?'

'வேலை முக்கியமோ?காசு முக்கியமோ?வேலையும் வேண்டாம் ஒண்டும் வேண்டாமெண்டு காசைச் சுருட்டிக் கொண்டு ஓடினால் என்ன செய்விினம்?சீ அவசரப் படக் கூடாது.இப்ப நிதானமா இருந்தா பின்னடிக்கு ஏதாவது லக்கடிக்கும்'

நிரஞ்சன் பலவிதங்களில் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது வைத்தியநாதன் கையில் கறுப்பு நிற தோற்பையுடன் வந்தார். "உம்மட மோட்டச் சைக்கிள் இங்கயே நிக்கட்டும்.நீர் காறில கடைக்குப் போகலாம்.சம்பளம் குடுத்து முடிஞ்சா காறிலயே இங்க வந்து மோட்டச்சைக்கிளை எடுத்துக் கொண்டு போகலாம்"என்றார்.

வைத்தியநாதன் தோற்பையை நீட்ட,நிரஞ்சன் தன்னையறியாமலே எழுந்து விட்டான்.

"இரும்.அவசரப் படாதையும்.முதல் முதல் வீட்டை வந்திருக்கிறீர்.தண்ணியேதேன் குடிச்சிட்டுப் போகலாம்"என்று வைத்திய நாதன் சொல்ல நிரஞ்சன் மறுபடி அமர்ந்தான்.சில நிமிடங்களில் அவரின் மனைவி தட்டில் தேநீர் கொண்டு வந்தாள்.

தேநீரை அவசரமாகக் குடித்துவிட்டு நிரஞ்சன் வெளியே வந்த போது வைத்தியநாதனின் கார் சாரதியுடன் தயாராக நின்றது.

படிப்பகம்

www.padippakam.com



கார் புறப்பட்டுப் போனதும் "எப்படி ஆள்?" என்று மனைவியிடம் கேட்டார் வைத்தியநாதன்.

"பாக்க நல்ல தோற்றமாத்தான் இருக்கு. ஆள் கடை அலுவலில எப்படி?"

"நல்ல சுறுசுறுப்பு. குடும்பத்தைப் பற்றி முதலே உனக்குத்தெரியுந்தானே. கனகசுந்தரம் அப்பிராணி. வாயே திறக்க மாட்டார். தாய்க்காறிக்குக் காசெண்டாக் காணும். ஆக எந்த வழியாலயும் எங்களுக்குப் பிரச்சினையில்லை. மெல்ல மெல்ல அலுவலைக் கவனிக்கத் தொடங்குவம்" வைத்தியநாதன் தனது வியாரத்தனத்தோடு பதிலளித்தார். அவருடைய கண்கள், மூளை ஆகிய உறுப்புகள் மிகவும் சுறுசுறுப்பானவை. எருத்தவுடன் எந்த பொருளையும் வைத்தியநாதன் வாங்க மாட்டார். பொருளை யார் தயாரித்தார்கள், என்ன முறையில் தயாரானது, மக்கள் மத்தியில் எப்படிப் பிரபல்யம் அடைந்துள்ளது போன்ற முழு விபரங்களையும் விசாரித்து அறிந்த பின்தான் வாங்குவார்.

அவருடைய தேர்வில் அவருடைய மனைவிக்கு நல்ல நம்பிக்கையுண்டு.

## 20

கடையில் எல்லோருக்கும் ஆச்சரியம். இப்போதுதான் முதன்முறையாக முதலாளி இல்லாமல் கடையில் வேலை செய்யும் ஒருவர் சம்பளம் தருவதைப் பார்க்கிறார்கள்.

பல வருடங்களாக அந்தக் கடையை தஞ்சமடைந்திருந்த பலரும் அண்மையில் வேலைக்கு வந்த ஒருவனுக்கு இப்படிச் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பற்றி தமக்குள் புகைந்து கொண்டார்கள்.

நிரஞ்சன் பெருமையுடன் ஒவ்வொருவருக்கும் சம்பளம் அடங்கிய உறையைக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

"டேய், முதலாளியின்ரை கண் உன்னில விழுந்திட்டுது. உப்பிடியே அவற்றை பெட்டையை வளைச்சியெண்டாலக்குத்தான்" ரவி உறையைப்பெற்றுக் கொண்டு நிரஞ்சனின் காதில் சொன்னான்.

"முதலாளிக்கு வளந்த மகள் இருக்குதே. ஊரில இருந்து

www.padippakam.com



கொண்டு இத தெரியாம இருந்திருக்கிறன்" நிரஞ்சன் ஆச்சரியப் பட்டான்.

"தெரிய நியாயமில்லை.பெட்டை கொழும்பில எல்லே படிக்குது.லீவுக்கு மட்டும்தான் வரும்.முதலாளி வெளியில விடமாட்டார். பிறகெப்படி ஆளைத் தெரியும்"ரவி சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

நிரஞ்சனுக்குத் திடீரென வைத்தியநாதனின் வீட்டுத் தோற்றம் கண்ணுக்குள் வந்தது.

பளிங்குத் தரையும், அலங்காரப் பொருட்களும் சினிமாவில்வருவது போல புகை மூட்டத்திற்குள் காட்சி தர, முகம் தெரியாத வைத்தியநாதனின் மகள் உத்தேசமாக ஒரு தென்னிந்திய நடிகையின் தோற்றத்துடன் கையில் மாலையுடன் வந்தாள்.

"கிடைச்சா லக்கெல்லோ" நிரஞ்சன் தன்னையறியாமல்வாய்விட்டுச் சொல்லிவிட்டான்.திருக்கிட்டு வெட்கத்துடன் பக்கத்தில் பார்த்த போதும் யாரும் அருகிலில்லை.

கணக்கு, வழக்கெல்லாம் முடித்துக் கொண்டு நிரஞ்சன் மறுபடி காரில் ஏறியபோது கடைக்குள்ளிருந்து பல கண்கள் எட்டிப் பார்த்தன. அவனுக்குப் பெருமையாக இருந்தது.

கடைகள், சந்திகளைத் தாண்டி கார் மிதந்து கொண்டிருந்தது. உள்ளேயிருந்த நிரஞ்சனும் கனவுகளில் மிதந்து கொண்டிருந்தான்.

பளிச்சென்ற விசாலமான பங்களா, அடக்கமான வேலையாட்கள்,சுழல் கதிரையில் இருந்து கையெழுத்துப் போடும் உத்தியோகம், செலவுக்கு மேலான பண இருப்பு.... இவையெல்லாம் நிரஞ்சனுடைய நெடுநாளையக் கனவுகள்.அவற்றில் குறைந்த பட்சமானவை இப்போது சாத்தியமாகும் அறிகுறிகளை அவன் தெரிந்து கொண்டான்.

வைத்தியநாதனின் வீட்டில் கார் நிற்க, நிரஞ்சன் இறங்கினன். வாசலிலிருந்த அழைப்பு மணியை அழுத்தியதும் வைத்தியநாதனே கதவைத் திறந்தார்.

"எல்லா அலுவலும் முடிஞ்சுதே?"

"ஓம்"

"உள்ளுக்கு வாருமேன்"

"இல்லை.நான் அவசரமா ஒரிடத்த போக வேணும்"

நிரஞ்சன் விடை பெற்றுக் கொண்டு தனது மோட்டார்சைக்கிளை உயிராக்கி விரைந்தான்.

www.padippakam.com



தன்னுடைய வீட்டுக்குப் போகாமல் நேராக டேவிட்டைச்சந்தித்தான். டேவிட் தனது படிப்பை முடித்துக் கொண்ட பின் வேலை எதுவும் இல்லாமல் தெருவில் சுற்றிக் கொண்டிருந்தான். நிரஞ்சன் எப்படியாவதுதனக்கொரு வேலை பெற்றுத் தருவான் என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது.

நிரஞ்சனும், டேவிட்டும் மோட்டார் சைக்கிளில் விளையாட்டு மைதானம் ஒன்றுக்கு வந்திருந்தார்கள். பரந்த வெளியை மரங்கள் கட்டுப் படுத்தியிருந்தன.

பல இளைஞர்கள் உற்சாகமாக பந்தைத் தேடித் தேடிஉதைத்துக் கொண்டிருந்தார்கள். அவ்வப்போது செந்தமிழும் சேர்ந்து விளையாடியது.

நிரஞ்சனும், டேவிட்டும் பார்வையாளர்கள் இல்லாத தனியிடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு புற்தரையில் அமர்ந்தார்கள்.

"மச்சான் நீ சொல்லுறதைப் பாத்தா முதலாளிக்கு உன்னில ஒரு கண் இருக்கும் போல தெரியுது. சான்சை விட்டிடாதை" டேவிட் உற்சாகமூட்டினன்.

"நான் என்னடா செய்யிறது? நேர முதலாளியிட்டப் போய் உங்கட மகளைக் கலியாணம் செய்யப் போறன் என்டு சொல்லுறதே?" நிரஞ்சன் தவிப்போடு கேட்டான்.

"பொறு, பொறு. ஒன்டுக்கும் அவசரப்படாதை. இது கயித்தில நடக்கிற மாதிரியான விசயம். நீயா போய் அவையிட்ட பல்லை இளிச்சுக் கொண்டு நின்டா விசயம் பிழைச்சுப் போம். அவையின்ரை நம்பிக்கைக்கேத்த மாதிரி நட. கொஞ்சம் கட ஓட்டப்பார். பிறகு பாத்துச் செய்யலாம்" டேவிட் தனது ஞானத்தைப் பாவித்தான். பாடசாலைக்குப் போனதிலும், சந்தியில் நின்றதிலும் அவனுக்கு அனுபவ ஞானம் ஏற்பட்டிருந்தது.

டேவிட் சொன்னதை நிரஞ்சன் சிந்தித்தான். "டேவிட் இன்னும் பெட்டையை நான் பாக்கவே இல்லை. எப்படி வடிவோ, வடிவில்லையோவென்டு ஒன்டுமே தெரியாது" என்று இழுத்தான்.

"செருப்பால அடிப்பன். காசு, கார் எல்லாம் வேணும். அதுக்க வடிவும் வேணுமோ? உப்பிடி நறுக்கம் பாத்தியெண்டா உருப்பட்ட மாதிரித்தான். உனக்கேன் ஆளைப் பற்றிக் கவலை" டேவிட் கோபப்பட்டான்.

"அதுவும் சரிதான்" நிரஞ்சன் ஏற்றுக் கொண்டான்.

இருவரும் கொஞ்ச நேரம் விளையாட்டைப் பார்த்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



முழங்காலில் உராய்வு வந்து இரத்தம் சாடையாகக் கசிய பலர் ஆரவாரத்துடன் உற்சாகமாக இருந்தார்கள். தனது பக்கத்துக்கு இப்போதைக்கு பந்து வராது என நன்கு தெரிந்து கொண்ட ஒரு பக்கக் காப்பாளன்பக்கத்தில் நின்ற நண்பனுடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தான். மத்தியஸ்தர்கள் என்று விசேடமாக யாரும் இல்லாமல் அவர்களே தங்களுக்குள் சமாளித்து உதைபந்தாடிக் கொண்டிருந்தார்கள்.

"அப்ப உன்ரை பழைய உமாவுக்கு என்ன கதி?" டேவிட் திடீரெனக் கேட்டான்.

"அது சும்மா பகிடிக்கெல்லோ. படம் பாக்கப் போனஅன்டைக்கே அவாவுக்கு குட் பை சொன்னுச்சு. பெட்டைக்கு ஏதேன் சொத்து பத்திருந்தாலும் பறவாயில்லே. சந்தோசமாய் கலியாணம் செய்யலாம். ஆள் கொஞ்சம் வடிவென்டாப்போல வெறும் பெட்டையைக் கட்டிப்போட்டு றோட்டிலயே நிக்கிறது?" நிரஞ்சன் பதட்டப்படாமல் சொன்னன்.

"கவனம் மச்சான். பெட்டையின்ரை அண்ணை, தம்பிமார் கத்தியன், வாளோட வரப் போறுங்கள்" டேவிட் எச்சரித்தான்.

"எல்லாம் முதலே விசாரிச்சுப் போட்டுத்தானே பழகினனன். பெட்டைக்கு அண்ணைமார் இல்லை. தம்பி அஞ்சாம் வகுப்பு படிக்கிறன். தகப்பன் ஒரு கிழட்டு வாத்தி. இதுக்க ஆர் வந்து என்னை விசாரிக்கப் போயினம்" நிரஞ்சனுக்குச் சொல்லும்போதே சிரிப்பு வந்தது.

"இப்ப உன்னைப் பாக்க படத்தில வாற வில்லன்கள் மாதிரியே இருக்கு. சிரிப்புத்தான் வாய்க்கேல" டேவிட்டும் சிரித்தான்.

ஆண்கள் என்ற வர்க்கத்திற்கு சமூகம் கொடுத்திருக்கும் விசேட பாதுகாப்பால் உண்டான ஆணவம் அவர்கள் சிரிப்பில் இருந்தது. ஒரு பெண்ணின் உள்ளத்தை, நட்பின் மதிப்பை, அன்பைப் புரிந்து கொள்ளாத அறிவீனம் இருந்தது. இதுதான் வழமை என்ற ஆண் வர்க்கத்தின் சாயம் இருந்தது.

# 21

"சும்மாவே ஒரு வேலையைத் தேடிக் கொள்ளுறது கஷ்டம். அதுவும் பொம்பிளைப் பிள்ளையளுக்கு ஒரு வேலை தேடிக் கொள்ளுறதென்டா லேசுப்பட்ட காரியமில்லை" சோமசுந்தரம் சோகமாகச் சொன்னார்.

படிப்பகம்

www.padippakam.com



"உண்மைதான். ஏதோ பத்மாவுக்கு அதிஷ்டம் இருந்தபடியா இந்த வேலை கிடைச்சுது. இல்லாட்டி கஷ்டம்தான்" கையில் தன்று வைத்துத் தைத்துக் கொண்டிருந்த வேதா அவருடைய கூற்றை ஆமோதித்தாள்.

சோமசுந்தரம் சீதாவுக்கு சட்டை தைக்கத் துணி கொண்டு வந்து கொடுத்திருந்தார். சீதாவுக்குப் பிறந்த நாள் வருகிறதென்பதைவிட அவளுக்கு ஒரு சட்டை அவசியம் தேவை என்பதே முக்கியமாக இருந்தது. தனது பிள்ளைகளுக்கு ஏதாவது உடைகள் தேவையென்றால் சோமசுந்தரம் வேதாவைத்தான் நாடுவார். அவரின் குடும்ப நிலையை நன்கு தெரிந்து கொண்ட வேதா தனது தையலுக்கு கூலி வாங்க மறுத்தாலும் உரிய தொகையைக் கொடுக்காமல் சோமசுந்தரம் பொருளில் தொட மாட்டார்.

உறவினர்கள், சொந்தங்கள் என்று யாருமில்லாத அந்த இருவருக்குமிடையில் தகப்பன்—மகள் பாசம் இருந்தது. பத்மா, உமாவின் நட்பால் அவர்களுடைய உறவு இன்னும் நெருக்கமடைந்தது.

சீதாவும், கமலனும் கூட அடிக்கடி "மாமி, மாமி" என்ற படி வேதாவைத் தேடி வருவார்கள். வேதாவும் அவர்களுடன் ஆர்வமாகபொழுதுபோக்குவாள்.

"எனக்கும் வர வர ஏலாமப் போகுது. பிள்ளையளை நினைச்சாத்தான் கவலையாக் கிடக்கு. எங்களிட்ட காசில்லையெண்ட உடனேயே சொந்தங்கள் எல்லலம் அறுத்துக் கொண்டுதுகள். தற்சேலா எனக்கும் ஏதேன் நடந்தா பிள்ளையளை ஆர் பாத்துக் கொள்ளுவினம் என்டதை நினைச்சா பயம்மாக் கிடக்கு" என்ற சோமசுந்தரத்தின் குரலில் ஈரமிருந்தது.

வேதாவுக்கும் அவரின் நிலமை வேதனையாக இருந்தது. தன்னுடைய நிலமையும் இதே போல் இருப்பதை நினைத்துக் கொண்ட அவளுக்கு அந்த வேதனையிலும் சிரிப்பு வந்தது.

"எங்கட சொல்லுப்படி நீ நடக்கிறதா இருந்தா சொல்லு. அப்பிடி இல்லாம நீ எங்கள மதிக்கேலயோ பிறகு எந்தச் சம்பந்தத்தையும் எங்களோட வைச்சுக் கொள்ளாத" என்று மூத்த அண்ணா உறுதியாகச் சொல்லிவிட்டார்.

"உன்ரை நடத்தையால பிறகு நாங்களும், பிள்ளையளும் ரோட்டில போகேலாம வரும். அபைடியா நாங்கள் தள்ளியிருக்கிறதுதான் நல்லம்" என்று அக்காவும் தீர்மானமாகச் சொல்லிவிட்டாள். இவர்களே உறவை அறுத்துக் கொண்ட பிறகு ஏனைய சொந்தங்கள் உறவை வைத்துக்கொள்ளுமா?

www.padippakam.com



அவர்கள் எல்லோரும் ஆத்திரப்படுமளவிற்கு வேதா தவறெதுவும் செய்யவில்லை. சமுதாயம் காலம்காலமாக அசட்டுத் தனமாகப்பின்பற்றிக் கொண்டிருக்கும் சில மூடச் சம்பிரதாயங்களை, பக்கச் சார்பான கட்டுப்பாடுகளை அவள் மீறியதுதான் அவர்களது ஆத்திரத்துக்குக் காரணம்.

வேதாவும் தன்மானமுள்ளவள்தான். இரத்த உறவுகள் தன்னைப் புரிந்து கொள்ளாதபோது தான் மட்டும் ஏன் அவர்களையே எதிர்பார்த்துக் கொண்டும், நம்பிக் கொண்டுமிருக்க வேண்டும் என்று பத்மாவையும் கூட்டிக் கொண்டு தனியாக வந்துவிட்டாள். அப்போது துண்டிக்கப்பட்ட உறவுகள் இன்றுவரை ஒட்டவேயில்லை.

"என்ன பிள்ளை கனக்க யோசிக்கிறாய்?" சோம்சுந்தரம் கேட்க வேதா வேதனையாகச் சிரித்தாள்.

"ஒன்றுமில்லை. இந்த உலகத்தில என்னென்ன மாதிரியெல்லாம் சனம் இருக்கென்டு யோசிச்சுப் பாக்கிறன்"

"உனக்குச் சொல்லுறன் பிள்ளை. துரையைப் பிடிச்சு உமாவுக்கு ரண்டு மூண்டு இடத்தில சம்பந்தம் பாப்பிச்சனென். சோமசுந்தரம் வாத்தியின்ரை பெட்டை என்டவுடனேயே சரி வராதென்டு சொல்லிப் போட்டாங்களாம். என்னட்டை சொத்துப் பத்தென்டு ஒன்டுமேயில்லையென்று ஊர் முழுக்கத் தெரியுந்தானே? கட்டப் போறவளைப் பாக்காமலே காசு, வீடு இல்லையென்டா சம்பந்தம் வேண்டாம் என்டு தூக்கியெறியிறவையை எப்பிடிப் பிள்ளை கூப்பிடுறது?" சொல்லிக் கொண்டிருக்கும்போது சோமசுந்தரத்தின் குரல் பிசிறடிக்க, வேதா அவரைக் கூர்ந்து பார்த்தாள். அவருடைய கண்களின் ஓரத்தில் கண்ணீர் துளிர்த்திருந்தது.

வேதாவுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அந்தப் பெரிய மனிதரை கலங்க வைக்கும் சமூகத்தை நினைக்கையில் அவளுக்கு ஆத்திரம் வந்தது. 'இந்த ஊரில இருக்கிற அந்தினை பேருமே இந்த வாத்தியாரிட்டத்தான் படிச்சவை. இந்த ஆசான் மூலமா தங்கட எதிர்காலத்தை அமைச்சுகொண்டு நீளக் காச்சட்டையோட உலாத்துற ஒன்டுக்குக் கூடி நன்றியுணர்ச்சி இல்லாமப் போச்சே' என்று தனக்குள் குமுறினாள்.

"வாத்தியார் நீங்க ஒன்டையும் யோசியாதையுங்கோ. உங்கட மகளுக்கு எல்லாம் நல்லபடியா நடக்கும்" வேதாவுக்கே தெரிந்தது தன்னுடைய ஆறுதல் வார்த்தைகள் அவரைச் சமாதானப்படுத்தாதென்று.

"மனசை ஆர் பிள்ளை பாக்கிறாங்கள். எல்லாரும் காசு, காணி வீடு, நகை, நட்டென்டுதான் அலைஞ்சு கொண்டிருக்கிறாங்கள். இதுகளை நினைக்கத்தான் பயம்மாக்கிடக்கு. இந்த நிலமையில ஆருமில்லாம என்ரை பிள்ளையள் எப்பிடிச் சீவிக்கும்?"

www.padippakam.com



வேதாவால் அதற்கு மேல் அவருடைய துக்கத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. "இனியும் இப்பிடி அழுயில்லையென்டு சொல்லாதைங்கோ. நாங்கள் இருக்கிறோம். உங்கட பிள்ளையள் எனக்கும் பிள்ளையள் தான். நீங்கள் ஒன்டுக்கும் கவலைப்படாதேங்கோ" வேதாவின் வார்த்தைகள் உறுதியாக வந்தன.

சோமசுந்தரம் அந்த வார்த்தைகளில் நிம்மதியடைந்தவராய் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். நகர்ந்து கொண்டிருந்த நேரம் உணர்ச்சி மயமானதாகவே இருந்தது.

வேதா பொருத்துகளை முடித்தாள். நீளமாக இருந்த நூல் மீதங்களைக் கத்தரித்தாள்.

"சட்டை முடிஞ்சிது. சீதாவை இஞ்ச அனுப்பி விடுங்கோ. போட்டுப் பாத்தாத்தான் அளவு சரியோ என்டு தெரியும்" வேதா சாமர்த்தியமாக கூலியைத் தவிர்த்துக் கொண்டாள்.

"பள்ளிக்கூடத்தால வந்த உடன அனுப்பி விடுறன். இனித்தான் போய்க் கறிச் சாமான்கள் வாங்க வேணும். நான் வாறன் பிள்ளை" சோமசுந்தரம் தளர்ந்த நடையுடன் வீட்டிலிருந்து வெளியே வந்தார்.

வெயில் சுட்டது. வேலியில் காகங்கள் இருந்து பரிதாபமாகக் கரைந்து கொண்டிருந்தன.

சோமசுந்தரம் மரக்கறியும், மீனும் வாங்கிக் கொண்டு திரும்புகையில் துரையர் எதிர்ப்பட்டார்.

"என்ன வாத்தியார் களைச்சுப் போய் வாறியள்?"

"துரையே? உன்னைத்தான் நினைச்சுக் கொண்டு வாறன். ஏதேனும் அலுவலாய்ப் போறியோ?"

"இல்லை வாத்தியார். ஏதேனும் விசேசமே?"

"அப்ப வாவன் கதைச்சுக் கதைச்சுப் போவோம்"

இருவரும் ஆறுதலாக நடந்தார்கள். மண்ணெண்ணெய் வண்டிலொன்றை நுரை தள்ளிய மாடு இழுத்துக் கொண்டு போனது. கையில் கம்பு வைத்து மாட்டை மிரட்டிக் கொண்டிருந்தவன் பீடி புகைத்துக் கொண்டிருந்தான். தோட்டத்தில் துலா மிதிக்கும் ஆரவாரங்கள் கேட்டன.

"துரையர், இனி மகளுக்கு வேற ஊரில தேடுறது நல்லது போலப் படுகுது" சொல்லிவிட்டு சோமசுந்தரம் துரையைப் பார்த்தார்.

படிப்பகம்

www.padippakam.com



"நானும் உதைத்தான் யோசிச்சனான்.இந்த ஊரில சரிவராது என்டு எனக்கு அப்பவே தெரியும்" என்று சொன்ன துரை நாக்கைக் கடித்துக் கொண்டார்.

சோமசுந்தரம் துரையை உற்றுப் பார்த்தார்.ஏதோ ஒரு விடயத்தை அவர் மறைப்பது போல் தெரிந்தது.

"துரை என்ன விசயமென்டாலும் என்னட்டை சொல்லு. எதையும் மறைக்கத் தேவையில்லை"

"அது வந்து... உங்களை இனியும் நான் ஏமாத்த விரும்பேல வாத்தியார்.உங்கட மகள் பள்ளிக் கூடத்தில படிக்கேக்க ஆரோ ரவுன் பெடியளோட தொடர்பிருந்ததெண்டு ஊர் முழுக்க கதை பரவியிருக்கு. அதுதான் ஊருக்க வேண்டாமெண்டனான்.இதொண்டும் பெரிய விசயமில்லை வாத்தியார்.நாங்கள் வேற ஊரில முயற்சிப்பம்.நான் வரட்டே. பிறகு வந்து சந்திக்கிறன்" என்று துரை போய்விட்டார்.

சோமசுந்தரம் சட்டென அப்படியே நின்றார்.தலை சுற்றியது.தரை மேலே போக,வானம் கீழே வந்து கொண்டிருந்தது.

## 22

காலையில் கடை திறந்தபோது பத்மாவும்,தவபாலனும் மட்டும்தான்.மாலா விருப்பெடுத்திருந்தாள்.முதலாளி ரகுராமனை தன்னுடன் கூட்டிக் கொண்டு போயிருந்தார்.

தவபாலன் மஞ்சள் தண்ணீர் தெளிக்க,பத்மா சுவாமிப் படங்களுக்கு ஊதுபத்தி கொளுத்தி வைத்தாள்.வியாபாரங்களுடன் சம்பந்தப்பட்டதாகையால் அநேகமாக எல்லா மதக் கடவுளர்களும் அங்கே வந்திருந்தனர்.

வந்தது முதலே தவபாலனின் முகம் சரியில்லாமல் இருப்பதை பத்மா அவதானித்திருந்தாள்.என்னவென்று விசாரிப்பதற்காக அவன் தன்னுடைய அலுவல்களை முடித்துக் கொண்டு வரும்வரை காத்திருந்தாள்.

"என்ன இண்டைக்கு ஒரு மாதிரி இருக்கிறியள்?" தவபாலன் முக்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்ததும் பத்மா கேட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



"வீட்டில சின்னப் பிரச்சினை" தவபாலன் தலையைக் குனிந்து கொண்டு சொன்னான்.

"சொல்லலாமெண்டா எனக்குச் சொல்லுங்கோ. முடிஞ்சா நானும் உதவி செய்யலாம்தானே?"

தவபாலன் இதற்கு உடனே பதிலளியாது மௌனமாக இருந்தான்.

"சொல்லேலாத பிரச்சினையெண்டா வேண்டாம்" பத்மா சொன்னாள்.

"அப்பிடியொன்றுமில்லை. தங்கச்சிக்கு ஒரிடத்தில கலியாணம் பேசினனுங்க. எல்லாம் சரி வந்திட்டுது. இப்ப காசு விசயத்திலதான்கொஞ்சம் சிக்கலா இருக்கு." தவபாலன் மெதுவாகச் சொன்னான்.

"எத்தினையாயிரம் வேணுமாம்?" என்று கேட்ட பத்மாவின் குரலில் கேலியிருந்தது.

"பேசினதில பத்துக் கூட வேணுமாம்"

"என்ன செய்யிறதா யோசிச்சிருக்கிறியள்? உப்பிடியே உந்தச் சம்பந்தத்தை நிப்பாட்டப் போறியளோ அல்லது மாறிக்கீறி செய்யப் போறியளோ?"

"இனி என்னண்டு நிப்பாட்டுறது? காசுதான் எங்கயாவது மாற வேணும்" தவபாலன் கவலையாகச் சொன்னான்.

"நானும் உங்களை ஒரு வித்தியாசமான ஆளா நினைச்சன். இப்பதான் விளங்குது" என்று பத்மா சொன்னதும் தவபாலன் சடாரெனத் தலையை உயர்த்தினான்.

"என்ன சொல்லுறியள்?"

"சீதனம் குடுக்கப்படாது, வாங்கப்படாது எண்டு கதைப்பியள். பெரிய பெரிய புத்தகமெல்லாம் படிப்பியள். என்னோடையெல்லாம் காரசாரமா விவாதிப்பியள். இப்ப என்னடாவெண்டா தங்கச்சிக்குச் சீதனம் குடுத்துத்தான் கலியாணம் செய்ய வேணுமெண்டு ஒற்றைக் காலில நிக்கிறியள். இவ்வளவு நாளும் கதைச்சதெல்லாம் சும்மா பகிடிக்குத்தானோ?" பத்மா நக்கலாகச் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

தவபாலனின் முகம் உடனே மாறியது. "உங்களுக்கென்ன வேசாய்ச் சொல்லிப் போட்டியள். ஒவ்வொருத்தற்றை கஷ்டமும் அவையவைக்குத்தான் தெரியும். தங்கச்சிக்கு பேசின எத்தினையோ சம்பந்தங்கள்

படிப்பகம்

www.padippakam.com



முதலேயே குழம்பிப் போச்சு. ஏனென்டா தங்கச்சிக்கு வாக்குக் கண்ணும். அதால வேண்டாமாம். இந்தச் சம்பந்தமொண்டுதான் ஓமெண்டிருக்கு. அதை விட எங்களுக்கு மனம் வருமே? எங்கட நிலேயில இருந்தாத்தான் உங்களுக்குப் புரியும்" தவபாலன் உணர்ச்சியாகச் சொன்னான்.

"ஆகா நல்ல விளக்கம். சுருக்கமாய் சொன்னால் உங்கட தங்கச்சியின்ரை கண்ணுக்காக நட்டக்காசு கொஞ்சம் குடுத்து ஆளைத் தள்ளி விடப் பாக்கிறியள்" பத்மாவும் உணர்ச்சியாகப் பதிலளித்தாள்.

இதைக் கேட்டதும் தவபாலன் சடாரென எழுந்தான். இதே நேரம் கடைக்கு ஆட்கள் வர ஆரம்பித்தார்கள்.

இதன்பின் மதிய போசனம் வரை கடைக்கு ஆட்கள் வந்து கொண்டேயிருந்தார்கள். அதனால் இருவருக்கும் தொடர்ந்து கதைக்க முடியாமல் போய்விட்டது. அவர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

பத்மா முதலில் சாப்பிடப் போக, தவபாலன் கடையைப்பார்த்துக் கொண்டான்.

பத்மா சாப்பிடும்போது தவபாலனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

'இவரைப் பற்றி நான் பிழையா மதிப்பிட்டுட்டேனே? கடைசியா இவரும் சாதாரண அதே ஆண் வர்க்கம்தானா? மற்ற ஆம்பிளையளைப் போல அதே பிற்போக்குச் சிந்தனையுள்ள இவரைத்தான் நான் விரும்பினனா? '

பத்மாவால் எந்தப் பதிலையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டுவிட்டு, முன்னுக்கு வந்து தவபாலனைச் சாப்பிட அனுப்பினாள்.

தவபாலனும் உணவருந்திவிட்டு வந்தபின் மறுபடி உரையாடுவதற்கு நேரம் கிடைத்தது.

"நான் அப்போது சொன்னதுக்கு நீங்கள் ஒரு மறுமொழியும் சொல்லேல" என்று பத்மாவே ஆரம்பித்தாள்.

"விளக்கமில்லாதவையோட என்னத்தைக் கதைக்கிறது? " தவபாலன் சுருக்கமாவே பதிலளித்தான்.

அந்தப் பதிலால் கடந்த இரண்டு வருடங்களாக பத்மாவின் மனதில் உருவாக்கிய மதிப்பிலிருந்து தவபாலன் வேகமாக கீழிறங்கினான்.

படிப்பகம்

www.padippakam.com



"ஏன் அப்பிடிச் சொல்லுறியள்?"

"விளங்காத்தனமாக் கதைச்சா என்ன சொல்லுறது? உங்களுக்குச் சகோதரங்களே இல்லை. அதாலதான் கஷ்டம் தெரியேல. நான் இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறது முழுக்க என்ரை சகோதரங்களுக்காகத்தான். என்ரை தங்கச்சிக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைச்சுக் குடுக்கத்தான் நான் பாப்பேனேயொழிய காசை இல்லை" தவபாலன் விறைப்பாகவே பதிலளித்தான்.

"தங்கச்சிக்கு வாழ்வு அமைச்சுக் குடுக்கிறது நல்லது தான். ஆனா நீங்க செய்யிறது அதில்லை. இல்லாட்டி இப்பிடி காசு புடுங்கிற குடும்பத்தில உங்கட தங்கச்சியைக் கட்டிக் குடுக்க ஓம்படுவியளே. உண்மையில உங்கட தங்கச்சியை நீங்க பாரமா நினைக்கிறியள். அவளுக்கிருக்கிற குறையால எங்க கலியாணமே நடக்காம வாழ்நாள் முழுக்க உங்களுக்குப்பாரமாவே இருந்திடுவாளோ எண்டு பயப்பிடுறியள். அதுதான் காசைக் குடுத்து மாப்பிள்ளையைச் சரிக்கட்டி தங்கச்சியை துரத்துறியள்" பத்மா நிதானமாகச் சொன்னாள்.

"நிப்பாட்டு. இனி இதைப் பற்றிக் கதையாதை." தவபாலன் திடீரென ஒருமைக்கு வந்தான். கண்கள் சிவந்து போயிருந்தன.

பத்மா ஒரு கணம் அவனை நன்றாகப் பார்த்தாள். இரண்டு போத்தில் சாராயத்தை உள்ளுக்கு விட்டபின் மதுவிலக்கை கொண்டு வரச் சொல்லிப் பேசுபவனைப் போல தவபாலனைப் பார்க்கும்போது அவளுக்குத் தெரிந்தது. தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

அதன்பின் இருவரும் கதைக்கவில்லை. பத்மா தன்னுடைய மனதிலிருந்து தவபாலனைச் சுத்தமாகத் துடைத்திருந்தாள்.

'நல்ல காலம். இந்தானைப் பற்றி இப்பவே தெரிஞ்சு கொண்டது. இல்லையெண்டா காசு தாறியே கலியாணம் செய்யிறன் எண்டு என்னட்டையும் கேட்டிருப்பார்.' எனப் பத்மா தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

வேலை முடிந்து கடையைப் பூட்டிவிட்டு பஸ் நிலையத்துக்குப் போகையிலும் இருவரும் ஒன்றும் கதைக்கவில்லை. தவபாலன் , எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான்.

"அப்போதை உங்களோட அப்பிடிக் கதைச்சதுக்கு மன்னிச்சு கொள்ளுங்கோ" என்று திடீரென பத்மாவிடம் சொல்லிவிட்டு தவபாலன் விடுவிடுவென நடந்து போனான்.

www.padippakam.com



# 23

உமா கண்ணீர் துளிக்க தூணைப் பிடித்துக் கொண்டு நின்றாள் தலை நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

சோமசுந்தரம் அவளுக்கு நேரே நின்று கொண்டிருந்தார் முகத்தில் பழைய சாந்தம் காணாமல் போய் புதிதாக இருள் வந்தி ந்தது. உடம்பு கூட தளர்ந்திருந்தது.

"ஒரு சொல்லுச் சொல்லியிருக்கலாந்தானே?" சோமசுந்த த்தின் குரலும் மாறியிருந்தது. பிரித்தறிய முடியாத உணர்ச்சிகள் குரலி கலந்திருந்தன.

உமா பதில் சொல்லவில்லை. உடம்பில் சாடையான நடுக்க இழையோடியது. இப்படியொரு சூழ்நிலை உருவாகும் என அவள் கொஞ் மும் எதிர்பார்த்திருக்கவில்லை. நிரஞ்சனிடமிருந்து நீண்ட காலமாகவே க தம் எதுவும் வராதது அவளைக் கவலைக்குள்ளாக்கியிருந்தது. இவள் கடித போடுவதற்காக டேவிட்டின் முகவரியை நிரஞ்சன் கொடுத்திருந்தான். இ ளும் மாதந்தோறும் கடிதம் போட்டுக் கொண்டிருந்தாள். பதில் எதுவு தான் வரவில்லை.

நிரஞ்சனுக்கு என்ன நடந்திருக்கும் என்று உமா சிந்தித்து கொண்டிருக்கும்போதுதான் சோமசுந்தரம் நிலைகுலைந்து கேள்விப்பட்ட செய்தியுடன் வீட்டுக்குள் வந்தார். ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் அவ உமாவை கேட்டுவிட்டார். உமா திடுக்கிட்டு விட்டாள். தங்களது விசய இவ்வளவு விரைவில் அப்பாவுக்குத் தெரிய வருமென அவள் நினைத்தேபா த்திருக்கவில்லை.

"என்னட்டை படிச்ச பெடியளுக்கு முன்னாலயே இண்டைக்குநா தலைகுனிஞ்சு நிக்கிறன். நீ எனக்கு எதையும் மறைக்காம சொல்லியிருந்த இண்டைக்கு இந்த நிலமை வந்திருக்காது. சொல்ல வெக்கமெண்டா ஒ துண்டிலையாவது எழுதித் தந்திருக்கலாந்தானே. நான் ஆரோ பிறத்திய ஆளே? உன்ரை தகப்பன் தானே? இப்பதான் எனக்குத் தெரியுது நீ அப்ப நினைக்கேலயெண்டு" சோமசுந்தரத்தின் குரல் அழுகிறதா? கோபப்படுகி றதா? என்பதை இனம் காணும் சாத்தியம் இன்னும் ஏற்படவில்லை.

"என்ரை கஷ்டங்களை நீ சரியா புரிஞ்சிருந்தா இப்ப நடந்திருக்க மாட்டாய். நான்தான் உன்னைச் சரியா வளக்கேல. வீட்டி

www.padippakam.com



வன்னையும், சமையக்காரனையும்தான் நான் இருந்திருக்கிறன். நல்ல தகப்பனை இருக்கேல என்டு இப்ப விளங்குது" அவர் சோகத்தில்தான் இருக்கிறாரென கண்கள் தெரிவித்தன.

அதற்கு மேல் உமாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஓடிப் போய் கட்டிலில் விழுந்து அழத் தொடங்கிவிட்டாள்.

சோமசுந்தரம் மௌனமாக அதே இடத்தில் நின்று கொண்டிருந்தார். அடுத்து என்ன செய்வது என்பது பற்றிச் சிந்தித்தார்.

'விசயம் உண்மைதான் என்டு தெரிஞ்சு போச்சு. இனி எந்த மட்டத்தில இவையின்ரை சிநேகிதம் இருக்கென்டு தெரிஞ்சு கொள்ள வேணும். பெடியன் ஆர் என்டறிய வேணும். ஊர் முழுக்கத் தெரிஞ்சு போச்சுது. ரண்டு பேருமே மனமொத்தா இனி கலியாண அலுவலுகளைப் பாக்க வேண்டியதுதான்'

சோமசுந்தரம் மெதுவாக உமா படுத்திருந்த அறைக்குப் போனார். உமா தலையணையில் முகம் புதைத்திருந்தாள். உடம்பு குலுங்கிக் கொண்டிருப்பதிலிருந்து அழுகை முற்றுப் பெறவில்லையென்று தெரிந்தது.

"இனியென்டாலும் முழு விசயங்களையும் சொல்லுவாய் என்டு நம்புறன்" சோமசுந்தரம் நிதானமாகச் சொன்னார்.

சில நிமிடத் தாமதத்தின் பின், தலையணையிலிருந்து முகத்தை எடுக்காமலே உமா சொல்லவாரம்பித்தாள். 'கிறீம் கவுஸ்', 'தியேட்டர்' தவிர்ந்த ஏனையவை தடக்கி, தடக்கிச் சொல்லி முடிக்கப்பட்டது.

அதன் பின் அங்கே சிறிது நேரம் அமைதி நிலவியது.

"அவன்ரை விலாசம் இருக்கா?" சோமசுந்தரம் அமைதியை கலைத்தார். உமாவின் தலை அசைந்தது.

"அதைத் தா. நான் நாளைக்கு காலமையே அங்க போய் இனிச் செய்ய வேண்டிய அலுவல்களைப் பற்றிக் கதைக்கிறன்" சொல்லிவிட்டு சோமசுந்தரம் அறையைவிட்டு வந்தார்.

பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்த கமலனும், சீதாவும் அழுதுகொண்டிருக்கும் அக்காவைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அக்காவுக்கு வருத்தம் என்று அவர்களுக்கு காரணம் சொல்லப்பட்டது.

சொன்னபடியே மறுநாள் காலை நகரத்துக்குப் போக சோமசுந்தரம் தயாராகிக் கொண்டிருந்தார். பெட்டியைத் திறந்து தோய்த்துலர்த்தி, மடித்து வைத்திருந்த வேட்டி, சட்டையை எடுத்து அணிந்து கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



"உமா, நான் போட்டு வாறன். தம்பி, தங்கச்சி பள்ளிக்கூடத்தால பசியோட வருங்கள். சாப்பிட ஏதாவது செய்து வை." என்று வாசலில் நின்று சொல்லிவிட்டு நாலடி வைத்த சோமசுந்தரம் மறுபடி வீட்டுக்குள் வந்து அறை வாசலில் நின்று "அப்பா கட்டாயம் என்ரை நன்மைக்கு ஏதாவது செய்வார் என்ட நம்பிக்கையோட வீட்ட விட்டு ஓட மாட்டாய் என்டு நம்புறன்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

பஸ் தரிப்புக்கு நடந்து போய்க் கொண்டிருக்கும்போது எப்படி போகும் இடத்தில் கதைக்க வேண்டும் என்று சிந்தித்தார். மனம் கனத்துக் கொண்டிருந்தது. எதிர் காலத்தைப் பற்றி அவர் அவ்வப்போது கவலைப் பட்டாலும் இன்றையைப் போல முற்றாக மனம் தளர்ந்ததில்லை. முற்றிலும் எதிர்பாராத அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளும்போது அவரால் சுலபமாகத் தாங்கிக் கொள்ளவில்லை.

"கையில காசில்லையென்ட உடன வாத்தி மாப்பிளை பிடிக்க பெட்டையையே அனுப்பிப் போட்டுது"

"வாத்தியின்ரை பெட்டைக்கு ரவுன் பெடியனோட தொடுப்பாம். எங்கேயோவெல்லாம் பெடியன் கூட்டிக் கொண்டு போறவனும். வாத்திக்கும் இது தெரியுமாம்"

இப்படியெல்லாம் கதைக்க ஊர் தயாராக இருக்கிறது என்பதை நினைத்தபோது சோமசுந்தரத்துக்கு அடி வயிறு எரிந்தது. யாரோ காறித் துப்பியது போல துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

இப்போதுதான் மனைவியின்மையை சோமசுந்தரம் உணர்ந்தார். என்னதான் அன்பாகவும், அக்கறையாகவும் பிள்ளைகளைக் கவனித்துக் கொண்டாலும் தாயின் இடத்தை நிரப்ப முடியாது என்று புரிந்து கொண்டார். இன்று தாயிருந்திருந்தால் உமா இந்த விசயங்களை மறைத்திருப்பாளா? அல்லது அவள் மறைப்பதை தாய்தான் கண்டுபிடிக்காமல் விடுவாளா?

பஸ் வந்து, ஏறிப் பயணிக்கும் போதும் சோமசுந்தரம் அமைதியடையவில்லை. எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டுமே என்ற கவலை மனதை தொந்தரவு செய்து கொண்டே இருந்தது.

நகரத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கிய போதுதான் கையிலிருக்கும் துண்டை வைத்துக் கொண்டு தெருவை எப்படிக் கண்டு பிடிப்பது என்றவர் திகைத்தார்.

வருடத்தில் சில தடவைகளே சோமசுந்தரம் நகரத்துக்கு வருவார். அதுவும் அநேகமாக பிள்ளைகளைப் பெரியாஸ்பத்திரிக்கு கூட்டி வருவதற்காகவே இருக்கும். பஸ் தரிப்பு நிலையத்தையும் அதன் சுற்றுப்

www.padippakam.com



புறத்தையும் விட கச்சேரிக்குப் போய்வரும் வழி மட்டுமே அவருக்கு நன்ருகத் தெரியும். இந்த நிலையில் நிரஞ்சனின் வீட்டைக் கண்டு பிடிப்பது அவருக்குச் சிரமமே.

அப்போதுதான் அவருக்கு பத்மாவின் நினைவு வந்தது. பத்மா வேலை செய்யும் பானுமதி ரெக்ஸ்ரைலில் அவர் துணி வாங்க வந்திருக்கிருர். பத்மாவிடம் போனுல் கடையில் வேலை செய்யும் யாரிடமாவது இடத்தைப் பற்றிக் கேட்கலாம் என்று நினைத்தார். உடனே பானுமதி ரெக்ஸ்ரைலை நோக்கி நடந்தார்.

## 24

பத்மா முக்காலியிலிருந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள். முன்னுல் நிழல் விழவே நிமிர்ந்தவள் ஆச்சரியமானுள்.

"மாஸ்ரர் நீங்களே?" என்றபடி எழுந்தாள். சோமசுந்தரத்தின் முன்னுள் மாணவிகளில் அவளும் ஒருவள்.

"ஒரு முக்கியமான அலுவலா வந்தனுன் பிள்ளை. எப்பன் நேரமிருக்குமே?" என்று கேட்டார்.

"கனக்க இருக்கு. இதில இருங்கோ மாஸ்ரர்" பத்மா தான் இருந்த நாற்காலியைத் தூக்கி அவருக்குப் பக்கத்தில் வைத்தாள்.

"இருக்க நேரமில்லை பிள்ளை. இந்த விலாசம் எங்க இருக்கெண்டு ஆரையேன் விசாரிச்சு சொல்லேலுமே?" சோமசுந்தரம் கையிலிருந்த துண்டை நீட்டினுர்.

அவருடைய குழம்பிய தோற்றத்தையும், அவசரத்தையும் பார்த்து எதுவும் புரிந்து கொள்ள முடியாத பத்மா அவர் நீட்டிய துண்டை வாங்கிப் படித்ததும் அதிர்ச்சியடைந்தாள். நிரஞ்சனின் முகவரியை ஏற்கெனவே உமா அவளுக்குச் சொல்லியிருந்தாள்.

'அப்பிடியெண்டா இவருக்கு உமாவின்ரை காதலைப் பற்றித் தெரிஞ்சிட்டுதா? எப்பிடித் தெரிய வந்திது? என்ன மாதிரி இவர் இதை ஏற்றுக் கொண்டிருக்கிருர்? இப்போ என் நிரஞ்சனிட்ட போருர்?'

பத்மா கேள்விகளால் குழம்பியபடியே சற்றுத் தள்ளியிருந்த

www.padippakam.com



தவபாலனிடம் போய் முகவரியைக் காட்டி விசாரித்தாள். தவபாலன் நகரத்தில்தான் இருக்கிறன். முகவரியை நன்ருகப் பார்த்த தவபாலன் இத்தினையாம் இலக்க பஸ்ஸில் போய், இத்தினையாவது தரிப்பில் இறங்கி இடப் பக்கமாகப் போகும்படி சொன்ஞன்.

அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு தான் பிறகு சந்திப்பதாகப் பத்மாவிடம் விடை பெற்றுக் கொண்டு சோமசுந்தரம் கடையிலிருந்து வெளியே வந்தார்.

வாகனங்களின், சனங்களின் இரைச்சல் எதுவும் அவருக்கு கேட்கவில்லை. பெட்டிக்குள்ளிருந்து தொண்டை கிழியக் கத்தி சுவீப் ரிக்கற் விற்றுக் கொண்டிருந்தவனின் குரலும் அவரை ஈர்க்கவில்லை.

அவருடைய சிந்தனை முழுவதையும் பிரச்சினையை எப்படிக் கையாள்வது என்ற கேள்வியே ஆக்கிரமித்திருந்தது. உடம்பு வியர்த்து தாகமுண்டாகியது. பைகளில் சில்லறைகள் பதுங்கியிருந்தாலும் கடைக்குப் போய் தாமதிக்க அவர் விரும்பவில்லை.

பஸ் நிலையத்தில் அவர் பயணிக்க வேண்டிய பஸ் தயாராக நின்றது. சோமசுந்தரம் ஏறிஞர். தவபாலன் குறிப்பிட்ட தரிப்பில் இறங்கிஞர். இடப் பக்கம் வந்தார். தெருவில் தெரிந்த இலக்கங்களைப் பார்த்துக்கொண்டு நடந்தார்.

குறிப்பிட்ட இலக்கம் வந்தது.

சோமசுந்தரம் தயக்கமாக படலையைத் திறந்து உட் சென்ருர். தோளில் போட்டிருந்த துண்டை எடுத்து அடிக்கடி துடைத்துக் கொண்டார்.

வாசல் கதவு திறந்திருந்தது. ஆஞல் யாருமில்லை.

"வீட்டுக்காறர்" என்று படியில் நின்று குரல் கொடுத்தார். சத்தம் கிணற்றுக்குள்ளிருந்து வருவது போலிருந்தது.

"ஆரது?" உள்ளேயிருந்து கனத்த பெண் குரல் கேட்டது.

"நான் சோமசுந்தரம்"

"பொறுங்கோ வாறன்"

சில நிமிடங்கள் எதுவும் நடக்கவில்லை. சோமசுந்தரத்தின் தோளிலிருந்த துண்டு மட்டும் பணியாற்றிக் கொண்டிருந்தது.

வாசலுக்கு வந்த அன்னபூரணம் வெளியே நின்ற புதிய மனித

படிப்பகம்

www.padippakam.com



ரைப் பார்த்ததும் தயங்கினாள்."ஆரைப் பாக்க வந்ததனியள்?"

"நிரஞ்சன்ரை வீடு இதுதானே?"

"ஓமோம்.உள்ளுக்க வாங்கோ" என்று அன்ன பூரணம் அவரை வரவேற்றாள்.

உள்ளே வந்த சோமசுந்தரம் கதிரையொன்றில் அமர்ந்து கொண்டார்.அன்ன பூரணம் எதிர்க் கதிரையில் உட்கார்ந்தாள்.

"நீங்கள் ஆரென்டு தெரியேல?" என்று அன்னபூரணம் ஆரம்பித்தாள்.

"என்ரை பேர் சோமசுந்தரம்.முந்திப் படிப்பிச்சனான்"என ஆரம்பித்து சோமசுந்தரம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

வந்திருப்பது யாரென்று இன்னும் சரியாகப் புரியாததால் அன்னபூரணம் தொடர்ந்தும் குழப்பமாக இருந்தாள்.

"அவர் இல்லையே?" சோமசுந்தரம் கேட்டார்.

"இல்லை.இப்பதான் கடைக்குப் போனார்.எப்ப வருவாரென்டு சொல்லேலலாது." 'ஒருவேளை அவருக்குத் தெரிஞ்சவரோ?'

"என்னை உங்களுக்குத் தெரியாது.உங்களையும் எனக்குத் தெரியாது.ஆனா இப்ப ஒருத்தரை ஒருத்தர் தெரிஞ்சு கொள்ள வேண்டிய அவசியம் வந்திட்டுது.உங்களுக்கு கதைக்க இப்ப நேரமிருக்குதே"சோமசுந்தரம் மெல்ல விசயத்துக்கு வந்தார்.

அவர் ஏதோ புது விசயம் சொல்லப் போகிறார் என்ற ஆவலில்,சமையலறையில் வெப்பமேறிக் கொண்டிருந்த கறியையும் மறந்து அன்னபூரணம் "ஓம் சொல்லுங்கோ"என்றாள்.

சோமசுந்தரம் தொண்டையைச் செருமிக் கொண்டு,துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்."என்ரை மகள் ரவுணிலதான் படிச்சவள்.பள்ளிக்கூடம் போய் வரேக்க உங்கட மகனைச் சந்திச்சு ரண்டு பேருக்கும் பழக்கமாய்ப் போச்சு"என்று ஆரம்பித்து உமா தன்னிடம் சொன்னவற்றை அப்படியே ஒப்பித்தார்.

அவர் சொல்லச் சொல்ல அன்ன பூரணத்தின் இரத்த அழுத்தம் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.முகத்தில் அவ்வப்போது குழம்பு கொதித்தது.முதலில் சோமசுந்தரத்தைச் சாதாரணமாகப் பார்த்தவள் இப்போது வேறு கோணத்தில் பார்த்தாள்.

வியர்வையால் கசங்கிப் போயிருந்த தோள் துண்டும், ஒட்டு

படிப்பகம்

www.padippakam.com



கள் போட்டிருந்த வேட்டி, சட்டையும் அவளுள் எரிச்சலைக் கிளப்பின.

தான் சொல்லி முடித்த பின்பும் அன்னபூரணம் மௌனமாயிருக்கவே சோமசுந்தரம் மறுபடியும் தானே ஆரம்பித்தார்.

"இப்ப காலம் மாறிப் போச்சுப் பாருங்கோ. தாய், தகப்பனை எதிர்பாக்காம இப்ப பிள்ளையளே தங்கட வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்ளுற காலம். இது சரியோ, பிழையோ எண்டு வாதாடிக் கொண்டிருக்காம எங்களைப் போல வயதானவை மாறிக் கொண்டு வாற காலத்தை ஏற்றுக் கொள்ளுறதுதான் புத்திசாலித்தனம். இல்லாட்டி வீண் குழப்பங்கள் வந்து தலைமுறையளுக்க இடைவெளிதான் வரும். தெரிஞ்சோ தெரியாமலோ என்ரை மகளும், உங்கட மகனும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பியிட்டினம். எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க அவையளுக்கு அநுபவம் இல்லாட்டியும் பெற்றோர் எண்ட ரீதியில எங்களுக்கு கடமையிருக்கு. அது தான் நான் முறையாக உங்களிட்ட வந்திருக்கிறன். எல்லாம் நல்லபடியாய் நடக்க நீங்களும் ஒத்துழைக்க வேணும்" சோமசுந்தரம் முடித்தபோது களைத்துப் போனார்.

அன்னபூரணமோ நூறு பாகை சூடிலிருந்தாள். தன் மகன் மீது அவளுக்கு வரையறுக்க முடியாத நம்பிக்கையிருக்கிறது. தன்னுடைய மகனுல் இப்படி ஒரு கிராமப் பெண்ணை விரும்பியிருக்க முடியாதென அவள் திடமாகக் கருதினாள். பெற்ற தாய்க்கு மகனின் நடவடிக்கைகள் என்ன போக்கானவை என்று தெரியாதா. எங்கோ ஒரு மூலையிலிருக்கும் காசில்லாத வாத்தியார் தன்னுடைய மகளுக்கு மாப்பிள்ளை தேடவே இப்படி ஒரு வலை விரித்திருப்பதாக அவளுடைய குறுகிய மூளை நினைத்துக் கொண்டது. அப்போதே வெட்டொன்று, துண்டிரண்டாக பேச வேண்டும் போலிருந்தாலும் சோமசுந்தரத்தின் பரிதாபமான தோற்றத்தைப் பார்த்து அடக்கிக் கொண்டாள்.

"ஒரு நிமிசம் பொறுங்கோ" என்று சொல்லிவிட்டு சமையலறைக்குப் போனவளுக்கு அப்போதுதான் அடுப்பில் கறியை வைத்துவிட்டுப் போனது ஞாபகம் வந்தது. அவசரமாக நெருங்கியபோது காலதாமதமாகி விட்டது என்று தெரிந்தது. சட்டியில் கரிக்கட்டிகள்தான் இருந்தன.

"இண்டைக்கு ஆற்றை முகத்தில முழிச்சனெண்டு தெரியேல. எல்லாம் நாசமாய்ப் போகுது."

சமையலறையிலிருந்து புறப்பட்ட அன்னபூரணத்தின் வார்த்தைகள் சில விநாடிகள் வித்தியாசத்தில் விறாந்தையில் அமர்ந்திருந்த சோமசுந்தரத்தை வந்தடைந்தன. அவர் கூசிக் குறுகிப் போனார்.

படிப்பகம்

www.padippakam.com



தொடர்ந்து சமையலறையில் பாத்திரங்கள் ஒன்றுடனொன்று மோதும் சத்தமும், "இந்தக் காலத்தில எப்பிடியெல்லாம் அநியாயம் நடக்குது. இப்பிடி மாப்பிளை பிடிக்க எத்தினை பேர் வெளிக்கிட்டிருக்கினமெண்டு தெரியேல" என்ற வசனங்களும் வெளிவந்து கொண்டிருந்தன.

அதற்கு மேல் தாங்கிக் கொள்ள முடியாதவராக சோமசுந்தரம் எழுந்து, போக ஆயத்தமானபோது அன்னபூரணம் உள்ளேயிருந்து வந்தாள்.

"நான் இப்ப ஒண்டும் சொல்லேலாது. அவர் வந்த உடன கதைச்சுத்தான் முடிவு செய்ய வேணும். இது அவசரப்பட்டுச் செய்யிற அலுவலில்லை. நாங்கள் பிறகு உங்களுக்கு விபரமா கடிதம் போடுறோம்" என்று அன்னபூரணம் பேச்சு வார்த்தையை முடித்து வைத்தாள்.

தன்னுடைய முகவரியை ஒரு துண்டில் எழுதிக் கொடுத்துவிட்டு சோமசுந்தரம் குனிந்த தலையுடன் வெளியே வந்தார்.

"நாங்கள் கடிதம் போடாம நீங்கள் உங்கடபாட்டில வெளிக்கிட்டு வராதையுங்கோ" என்ற அன்னபூரணத்தின் வார்த்தைகள் பின்னால் வந்தன.

சோமசுந்தரம் வெளிப் படலையைத் திறக்கும்போது கனகசுந்தரம் எதிர்ப்பட்டார். இவர்தான் நிரஞ்சனுடைய தகப்பனாக இருக்கலாம் என ஊகித்து அவர் கனகசுந்தரத்துடன் பேச முற்பட்டபோது வீட்டுக்குள்ளிருந்து அசரீரி ஒலித்தது.

"என்ன அங்க அலம்பிக் கொண்டிருக்கிறியள். கெதியில சாமானுகளைக் கொண்டு வாங்கோ"

கனகசுந்தரம் சோமசுந்தரத்தைப் பார்த்தவாறே ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குள் போனார்.

## 25

கடையைப் பூட்டுவதற்கு முப்பது நிமிடங்கள் இருந்தன. ஒரு விதமான சோம்பல் பரவியிருந்தது. வாடிக்கையாளர்கள் அவ்வப்போது வந்து போனார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



பத்மாவும், தவபாலனும் கலைந்திருந்த சுருள்களை ஒழுங்கு படுத்தி அடுக்கிக் கொண்டிருந்தார்கள். ரகுராமனும், மாலவும் மாயமாகியிருந்தார்கள். அவர்களுக்குள் 'அது' என்று கடைக்குத் தெரியும்.

"தங்கச்சியின்ரை கலியாணம் சரி வந்திட்டுதே?" தவபாலனைப் பார்க்காமல் வேலையில் கவனமாகக் கேட்டாள் பத்மா.

"இன்னும் இல்லை. பத்தை மாறிறதெண்டா சும்மாவே. கையை நீட்ட வேண்டின இடத்திலையெல்லாம் நீட்டி முடிஞ்சுது. இன்னும் ஒரு வழியைக் காணேல" தவபாலன் சொல்லிவிட்டு கவலையாக அவளைப் பார்த்தான். பத்மா அக்கறையோடுதான் தன்னை விசாரிக்கிறள் என அவன் நினைத்துவிட்டான்.

"கலியாணம் பேசி எவ்வளவு காலமாச்சு. இன்னும் விலை சரிவராம அநியாயமா உங்கட தங்கச்சி வீட்டிலய இருக்க வேண்டியிருக்கு. பேசாம மலிவா வேற ஒரிடம் பாருங்கோவன்" என்று பத்மா சொல்லி முடிப்பதற்குள் "வாயை மூடுறி" என்று தவபாலன் தன்னையறியாமல் கத்திவிட்டான்.

பத்மா திருக்கிட்டுப் போகவில்லை. மெல்லச் சிரித்தபடியே தன்னுடைய வேலையைக் கவனித்தாள்தவபாலனை நினைக்கும்போது அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

'சீ என்ன வர்க்கம் இது. முதுகெலும்பில்லாத வர்க்கம். சராசரி ஆம்பிளையளுக்கு தவபாலனே நல்ல உதாரணம். சீதனக் கொடுமைச் சாடி ஏதாவது கவிதையள் வந்தா நல்லா ரசிக்கிறன். கதை வந்தாலும் விழுந்தடிச்சு வாசிக்கிறன். படம் பாக்கிறன். இன்னும் கொஞ்ச நாள்போனா இவனே எழுத வெளிக்கிடலாம். ஆனா தன்ரை சொந்த வாழ்க்கையில..?

சீதனத்தைச் சாடினவையையெல்லாம் பாராட்டினவன் இப்ப தங்கச்சிக்கு குடுக்கிறதுக்கு காசைத் தேடி அலைஞ்சு கொண்டிருக்கிறன். இதென்ன அறியாமையா?இயலாமையா?

ஆம்பிளையள்தான் இப்பிடியெண்டா பொம்பிளையள் வேறகோணத்தில நிக்குதுகள். காசைக் குறைச்சா தாலி கட்ட மாட்டன் என்டு காசுக்காண்டி எச்சில் வழிய நிக்கிறவனை நான் கட்ட மாட்டன் என்டு தவபாலன்ரை தங்கச்சி சொல்லக் கூடாதோ?எப்பவாவது உண்மையான ஆம்பிளையள் ஆரையாவது சந்திக்கிறவரை நான் இப்பிடியே இருக்கிறன். எனக்காண்டி நீங்கள் கஸ்ரப்படாதைங்கோ என்டு தன்ரை அண்ணனுக்குச் சொல்லலாம்தானே?

ரன்டு கையையும் தட்டிக் கொண்டு சத்தம் ஏன் வருகுது என்டு

படிப்பகம்

www.padippakam.com



கேக்கிற மாதிரியெல்லேர் இந்த விசயமும் கிடக்கு. ரண்டு வர்க்கமும் ஒன்டுக்கொண்டு சளேக்காம மொத்தச் சுயநலமா இருக்கேக்க சீதன ஒழிப்பாவது? மண்ணாங்கட்டியாவது.'

பத்மா தனக்குள் சிந்தித்தபடியே வேலையை முடித்துக்கொண்டாள். கடை பூட்ட வேண்டிய நேரமாகிவிட்டது.

பத்மா தனது கைப்பையை எடுத்துக் கொண்டு "போட்டு வாறன்" என்று தவபாலனிடம் சொல்லிவிட்டு கடையை விட்டு வெளியே வந்தாள்.

பாதையில் பரவிக் கொண்டிருக்கும் சனங்களைப் பார்க்கையில் அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

'ஏன் எல்லாரும் இப்பிடி அலையினம்? ஏன் இப்பிடி ஓடி ஓடி உழைக்கினம்? வேர்வை சிந்தி வருசக்கணக்கா உழைச்சு, வருமானம் முழுதையும் பொட்டலமாக்கி ஆரோ ஒருத்தனுக்கு பெண்ணோட தானமாய் குடுக்கத்தானே எல்லாரும் இப்பிடி நாயாய் அலெஞ்சு கொண்டிருக்கினம். இப்படித்தான் மற்றவையும் கஉடீடப்பட்டு, தங்களை வருத்தித்தான் காசு சேத்திருப்பினம் என்டு தெரிஞ்சும் ஒராளுக்கு மேல மற்றுன் ஏறி நின்டு எல்லாத்தையும் பிடுங்கியினம்?

ஆக ஏதோ ஒரு வழியில இந்தச் சனங்களெல்லாம் கடன்காறர்தான். அத்தனை பேரும் காசைக் கறக்கிற பேராசைக்காறர்தான். ஒராளே இரண்டு விதமாய் சீவிக்கிற அதிசயம் தமிழ்ச் சமுதாயத்திலதான் நடந்து கொண்டிருக்கு. இதையும் கின்னஸில குறிச்சா என்ன?'

"ஒரு ருபாவை செலவு செய்து லட்சாதிபதியாகுங்கள். தேசியலொத்தர் சபையின் சீட்டிழுப்பை இழுத்துப் பாருங்கள். நீங்களும் அதிஉட்டசாலியாகலாம். நாளை நாளை என்று காத்திராமல் இன்றே வாங்கிப் பாருங்கள்" என்று அதிஉட்டத்தை விற்றுக் கொண்டிருந்தவன் குரலால் பத்மாவின் சிந்தனை கலைந்தது. குரல் உற்பத்தியான இடத்தைப் பார்த்தாள்.

அதே பழைய பலகை அறை. அதே பழைய ஆள். அதே பழையதொனி. தான் மட்டும் அப்படியே இருந்து கொண்டு பொது மக்களை இலட்சாதிபதியாக்குவதில் அவன் 'பொதுநலவாதி' யாகியிருந்தான்.

பத்மா அவனைக் கடந்து பஸ் நிலையத்துக்குள் பிரவேசித்து வழமையான இடத்தில் நின்று கொண்டாள். புதுப்படம் வந்து நேரம் தப்பி ஓடிக் கொண்டிருந்ததால் ஆட்கள் அதிகம் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



பத்மா கம்பியில் சாய்ந்து கொண்டு முன்னால் தெரிந்த புத்தகக் கடையைப் பார்த்தாள்.

தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த ஏராளமான வார, மாத இதழ்கள் பளபளப்பான அட்டையில் கவர்ச்சியாகத் தொங்கிக்கொண்டிருந்தன. அட்டைகளில் நடிகைகள் அல்லது வேறு பெண்கள் அநேகமான இடங்களை உருப்பைத் தூக்கிக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

பத்மாவுக்குள் மறுபடியும் ஆவேசம் உருவாகியது. 'இந்தச் சமுதாயத்தில பொறுப்புணர்ச்சியெண்டதே ஆருக்கும் இல்லையா? கண்ணுக்கு முன்னால எவ்வளவோ பிரச்சினையள் கிடக்கு. எத்தினையோ பேர் இதுக்குள்ள சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கேக்க இந்தப் பத்திரிகைக்காறரும், சஞ்சிகைக்காறரும் ஆரோ நடிகைக்குத் திருமணமாகயில்லையே எண்டு கவலைப்பட்டுக் கொண்டிருக்கினம். எழுத்தாளரெல்லாரும் கொலை செய்யிறது அவ்வளவு கஉஷ்டமில்லையெண்ட மாதிரி கொலைக் கதையளைப் பெருக்கிக் கொண்டு போயினம். இந்தக் கேவலங்களை வாசிக்கிறதுக்கும் ஆட்கள் நிறையப்பேர் துடிச்சுக் கொண்டிருக்கினம்'

"பத்மா" அருகில் கேட்ட அழைப்பால் பத்மா திடுக்கிட்டுத் திரும்பினாள்.

பக்கத்தில் மிக நெருக்கமாக நின்றது பத்மலிங்கம். ஆளைப் பார்த்ததும் பத்மாவின் முகம் மாறியது. கண்களில் கோபம் எரிந்தது.

"உன்னோடை முக்கியமான விசயமொண்டு கதைக்க வேணும். கடைக்கு வந்திட்டுப் போ"

"நான் கதைக்க விரும்பேல" பத்மா ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு தணிவான குரலில் சொன்னாள். இப்போது இந்த இடம் பஸ் நிலையமாக இல்லாமல் தங்களுடைய வீடாக இருந்திருந்தால் பத்மாவின் குரல் பத்மலிங்கத்தை அதிர வைத்திருக்கும்.

"பிடிவாதம் பிடிக்காதை. உன்னைப் பற்றின விசயம்தான். கடை பக்கத்திலதான் இருக்கு. ஒருக்கா வந்திட்டுப் போ" பத்மலிங்கத்தின் குரலில் மெல்லிய கெஞ்சல் இருந்தது.

"நான் வரமாட்டன். ஏதேன் கதைக்க வேணுமெண்டா நீங்க எங்கட வீட்ட வாங்கோ. தயவு செய்து இனிமேல் இப்பிடி தெருவில நிண்டு உபத்திரவப்படுத்தாதையுங்கோ" என்று பத்மா சொல்லிவிட்டு முகத்தைத் திருப்ப அவளுடைய பஸ் வந்தது. விரைந்து ஏறிக் கொண்டாள்.

பத்மலிங்கத்தின் கண்கள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



# 26

பஸ்ஸில் வீடு நோக்கி வந்து கொண்டிருக்கும்போதும் பத்மாவின் மனம் ஒரு நிலையில் இல்லை. தன்னிச்சையாக ஆத்திரம் வந்தது. கோபம் வந்தது. கண்ணில்படும் ஆண்களையெல்லாம் செருப்பைக் கழற்றி அடிக்க வேண்டும் போலிருந்தது.

'சே என்ன மனிசர். வேண்டாமென்டு விலத்தி விலத்திப்போனாலும் அட்டை மாதிரி ஒட்டுதுகள். அதுகளுக்குத்தான் ரோசம், மானம் ஒண்டுமில்லையெண்டா எங்களுக்குமில்லையெண்டு நினைச்சிடுறதே? இவ்வளவு நாளும் கண்ணில படாம இருந்திட்டு இப்ப என்னத்துக்கு வெளிக்கிடுவான்? இதை அம்மாவிட்ட சொல்ல வேணும்.

அம்மா.

பத்மாவின் உணர்ச்சி திடீரென தலைகீழாக மாறியது. உருக்கம் பிறந்தது.

அம்மாவை நினைச்சாலே இவ்வளவு சக்தியா?

ஆம்.

அம்மாதான் எனக்கு எல்லாமே. அம்மாவும் அவள்தான். அப்பாவும் அவள்தான். நல்ல சிநேகிதியும் அவள்தான்.

அவளுக்கு முன்னால இந்த மனிசர் எல்லாம் தூசு.

உணர்ச்சியில் ஆழமாகப் போயிருந்தாலும் இறங்க வேண்டிய தரிப்பில் பத்மா ஞாபகமாக இறங்கிக் கொண்டாள்.

நேராக வீட்டுக்குப் போக எண்ணியவள், பகல் சோமசுந்தரம் கடைக்கு வந்ததை நினைத்துக் கொண்டபின் உமா வீட்டை நோக்கிப் போனாள்.

நிரஞ்சனின் முகவரியை சோமசுந்தரம் விசாரித்ததில் உமாவினுடைய விசயம் அவருக்குத் தெரிய வந்திருக்கிறது. இது எந்த மாதிரியான சூழ்நிலையை அந்த வீட்டில் உருவாக்கியிருக்குமோ என்று அவளுக்குக் கவலையாக இருந்தது. யாராவது ஏதாவது விதத்தில் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களை ஆறுதல்படுத்த விரும்பினாள்.

www.padippakam.com



முன் படலையைத் திறக்கும்போதே சோமசுந்தரம் தெரிந்தார்.

"உமா நிக்கிறவே மாஸ்ரர்?" பத்மா அவரை நெருங்கிக் கேட்டுக் கொண்டே கவனித்தாள். சோமசுந்தரத்தின் கண்கள் நிரம்பியிருந்தன. முகத்தில் கவலை அரும்பியிருந்தது. பத்மாவைக் கண்டதும் புன்முறுவலை பலாத்காரமாகக் கொண்டு வந்து வீட்டுக்குள் கையைக் காட்டினர்.

பத்மா உள்ளே போனாள். அவள் அடிக்கடி வருவதால் தனது சொந்த வீடு போலவே பழகுவாள்.

அவள் உமாவின் அறைக்குப் போனபோது உமா கட்டிலில்படுத்திருந்து அழுது கொண்டிருந்தாள்.

பத்மா தனது கைப்பையை மேசையில் வைத்தபின், கதவைச் சாத்திவிட்டு உமாவின் அருகே கட்டிலில் வந்து அமர்ந்தாள். "உமா"என்று ஆதரவாகக் கூப்பிட்டாள். அவளின் தலையை வருடினாள். அவ்வளவுதான் உமா தலையைத் தூக்கி பத்மாவின் மடியில் புதைத்து அழ ஆரம்பித்து விட்டாள்.

பத்மாவுக்கு அவளைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அந்த வீட்டில் உமாவையும், அவளுடைய தங்கையையும் தவிர வேறு பெண்கள் இல்லை. உமாவால் தன்னுடைய மன அழுத்தத்தை சின்னத் தங்கையிடம் சொல்லி அழ முடியுமா?

என்ன இருந்தாலும் அவள் பெண்தானே? சில விடயங்களைபெண்களால் பெண்களிடம் மட்டுமே பகிர்ந்து கொள்ள முடியும். இதற்குச் சந்தர்ப்பமில்லாமல் தனது உணர்ச்சிகளை பொத்தி வைத்திருந்த உமா பத்மாவின் ஆதரவில் நெகிழ்ந்து தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அழத் தொடங்கி விட்டாள். ஒரு தாயின் மடியில் படுத்திருக்கும் குழந்தைபோல அவள் அழுது கொண்டிருந்தாள்.

பத்மா அவளுடைய தலையை வாஞ்சையுடன் வருடியபடிகொஞ்சநேரம் அழுவதற்கு அனுமதித்தாள். குமுறல்களை அடக்கி வைக்கக் கூடாது. அவை உடனுக்குடன் வெளியேற்றப்பட வேண்டும் என்று அவள் கருதினள்.

"உமா இனி எழும்பும். சின்னப் பிள்ளை மாதிரி நெடுக அழக் கூடாது"

உமாவின் அழுகை மெல்ல மெல்ல அடங்கிக் கொண்டு வந்தது.

"ரண்டு பேருக்கும் ரீ போட்டுக்கொண்டு வாறன். நீர்போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வாரும்ரண்டு பேரும் வடிவா ஆறுதலா இருந்து கதைப்பம்" பத்மா உமாவின் தோளில் பிடித்து அவளை நிறுத்தி விட்டு

www.padippakam.com



எழுந்து சமையலறைக்குப் போனாள்.

சமையலறையில் பாத்திரங்கள் தாறுமாறாகக் கிடந்தன. அடுப்பில் கரி மூட்டியிருந்தது.

பத்மா அவற்றை ஒழுங்கு செய்துவிட்டு கேத்தலில் தண்ணீர்நிரப்பி அடுப்பில் ஏற்றினாள். தீ மூட்டிவிட்டு அவள் திரும்பும்போது சோமசுந்தரம் வந்தார்.

"பின்னே, அவளோட கதைச்சனியே?" என்று கலங்கிய குரலில் கேட்டார்.

"இல்லே. இப்பதான் அழுது முடிச்சிருக்கிறா. இனித்தான் ஆறுதலா இருந்து கதைக்கப் போறம். நீங்க போன அலுவல் என்ன மாதிரி?" என்று கேட்டுக் கொண்டே பத்மா சீனிப் போத்தலைத் தேடினாள்.

சோமசுந்தரம் உடனே பதில் சொல்லாது எரிந்து கொண்டிருக்கிற அடுப்பைப் பார்த்தார்.

"நிரஞ்சன்ரை தாயோடதான் கதைச்சனான். அவைக்கு துண்டா விருப்பமில்லேயெண்டு உடனயே தெரிஞ்சு போச்சு. மாப்பிள்ளே எடுக்கேலாம மகளே நான் வேசியாட விட்ட மாதிரி அவை நினைக்கினம்" சோமசுந்தரம் சொல்லி முடிக்கு முன் அழுது விட்டார்.

பத்மா செய்வதறியாது நின்றாள். உமாவாக இருந்தால் தோளைத் தட்டி ஆறுதல் படுத்தலாம். எதிரில் நிற்பவரோ அவளுக்குக் கற்பித்த ஆசிரியர். வயது முதிர்ந்தவர். அனுபவஸ்தர். அவரே கலங்கினால் அவள் எப்படி ஆறுதல் படுத்துவாள்?

"அழாதையுங்கோ மாஸ்ரர். எல்லாம் நல்லபடியா நடக்கும்" என்று தயங்கியபடி சொன்னாள்.

அந்த இடத்தில் நின்று அந்தச் சின்னப் பெண்ணையும் சங்கடப் படுத்த விரும்பாமல் சோமசுந்தரம் கண்களைத் துடைத்துக் கொண்டு மறுபடி வாசலுக்குப் போய்விட்டார்.

பத்மா அடுப்பைப் பார்த்தாள். அங்கு எரிவது போலவே அவளுடைய நெஞ்சும் எரிந்தது.

'இந்த மாஸ்ரரும் அவற்றை மகளும் ஆருக்கு என்ன கொடுமை செய்தவை? ஆரையாவது கொலே செய்திச்சினமா? கடத்திச்சினமா? ஏமாற்றிச்சினமா? எந்தக் குற்றமும் செய்யாத இவர்களே அழ வைக்க வேண்டும்?

படிப்பகம்

www.padippakam.com



ஆர் அந்தத் தாய்?இந்த மனிசரைப் புண்ணாக்கி அனுப்பினவள் எப்படி ஒரு தாயாக இருக்க முடியும்?அவளுக்குப் பிள்ளைகள் இருந்தால் ஒரு தகப்பனின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடியாதா?

அவளுக்குப் பொம்பிளைப் பிள்ளையள் இல்லாமலிருக்க வேணும்.அதுதான் திமிராய் கதைச்சிருக்கிறாள்.பெண்ணைப் பெற்றால்தான் கவலைப்பட வேணுமா?அப்படியெண்டா தன்னைப் பெற்றவையின்ரை கஷ்டத்தை பற்றி அந்தத் தாய் புரிஞ்சு கொள்ளேலயா?

எல்லாம் போலி.கருணை, பாசம், அன்பு எல்லாம் அகராதியில மட்டும்தான்.இந்தச் சமுதாயத்தில எள்ளளவும் இல்லை.எந்த உணர்ச்சியுமில்லாத வெறும் கற்கள்தான் மனிசத் தோல் போத்துக் கொண்டு உலவுகின்றன.

கேத்தில் சத்தம் போட்டு அவளுடைய ஆவேசத்தைக் கலைத்தது.பத்மா தேநீர் தயாரித்து மூன்று பேணிகளில் நிறைத்தாள். ஒன்றை முதலில் எடுத்துக்கொண்டு போய் வாசலிலிருந்த சோமசுந்தரத்திடம் நீட்டினாள்.

அவளை ஒருகணம் நிமிர்ந்து பார்த்த சோமசுந்தரம் பேணியை வாங்கிப் பக்கத்தில்வைத்து விட்டு எங்கோ பார்த்தார்.

பத்மா மறுபடியும் சமையலறைக்கு வந்து மிகுதி இரண்டுபேணிகளையும் எடுத்துக் கொண்டு உமாவின் அறைக்கு வந்தாள்.

உமா ஏற்கெனவே முகம் கழுவித் தயாராக இருந்தாள்.கண்கள் சிவந்தே இருந்தன.முகத்திலும் பொலிவு இல்லை.தலைமுடியை இரண்டாகப் பின்னிக் கொண்டிருந்தாள்.

பத்மா ஒரு பேணியை அவளுக்குப் பக்கத்தில் வைத்துவிட்டுஇன்னொன்றுடன் கட்டிலில் வந்து அமர்ந்தாள்."சீனி காணுமோ எண்டு பாரும்" என்றாள்.

உமா மெல்லிதாகப் புன்னகைத்துக் குடித்துப் பார்த்துவிட்டு "நல்லாயிருக்கு" என்றாள்.

அவள் இனி சாதாரான நிலைக்கு வந்துவிடுவாள் எனத் தெரிந்துகொண்ட பத்மா மெல்ல ஆரம்பித்தாள்.

"ஒரு ஆம்பிளையும் ஒரு பொம்பிளையும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பிறது தப்பில்லை உமா.இந்த விருப்பத்தை மனசால மட்டும் பரிமாறிக் கொண்டிருந்தா இதில நடத்தை கெட்டதெண்டு எதுவுமே இல்லை.காதலிக்கிறதுக்காக ஆரும் வெக்கப்படவும் தேவையில்லை.பயப்பிடவும் தேவை

படிப்பகம்

www.padippakam.com



யில்லை"

உமா கண்ணாடியைப் பார்த்து தலையைப் பின்னியபடியே பத்மா சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"நாங்கள் செய்யிற விசயங்கள் எங்களுக்கோ, மற்றவைக்கோ எந்தத் தீமையும் செய்யாட்டி அதைச் செய்யிறதுக்கு மற்றவை என்ன சொல்லுவினமோ என்று பயப்பிடத் தேவையில்லை.

ஒரு பொருளைக் கண்ட உடன ஆசைப்படுறது மனிச இயல்பு. சின்னப்பிள்ளைக்குப் பொம்மையைக் கண்டா ஆசையாயிருக்கும். விளையாட்டில ஆர்வமாயிருக்கிறவனுக்குப் பந்தைக் கண்டா ஆசை வரும். இதைப்போல இளம் பெண்ணுக்கு இளைஞனில ஆசை அல்லது கவர்ச்சி ஏற்படுறது சாதாரணம். இதுக்கேத்த மாதிரித்தானே மனிசற்றை உடலமைப்பே இயங்கிக் கொண்டிருக்கு. அனபடியா நீர் காதலிச்சது பிழையில்லை. அதைப் பிழையெண்டு ஆரும் சொல்லவும் மாட்டினம்.

நீர் ஆரை விரும்பினனீர் எண்டதுதான் இப்ப இருக்கிற பிரச்சினை. சின்னப் பிள்ளையளுக்கு நல்ல பொம்மையாய் பாத்து அப்பா, அம்மாக்கள் வாங்கிக் குடுப்பினம். விளையாட்டுக்காறனுக்கும் பந்தைத் தெரிஞ்செடுக்க அனுபவம் இருக்கும். அல்லது தெரிஞ்சவை கேக்கலாம். ஆனா காதலிக்கிறதுக்கு மட்டும் வேற ஆரும் வந்து ஆக்களைத் தெரிவு செய்து தரமாட்டினம். இது மட்டும்தான் அவையவையின்ரை சொந்தத் தேர்வா இருக்குது.

நீர் விரும்பின ஆளைப் பற்றி உமக்குத்தான் நல்லாத் தெரியும். இப்பவும் பெரிசா ஒண்டும் நடக்கேல. உம்மட ஆளின்ரை அம்மாவைத்தான் அப்பா சந்திச்சுக் கதைச்சவர். அவதான் முரட்டுத்தனமாய் கதைச்சுத் திருப்பியனுப்பினவா. இதில பெரிய பாதிப்பில்லை.

ஆனா நிரஞ்சன் திடமானவராய் இருக்க வேணும். வீட்டில என்ன பிரச்சினை வந்தாலும் நான் உம்மைக் கைவிட மாட்டன் எண்டு லவ் பண்ணின புதிசில கட்டாயம் அவர் உமக்குச் சொல்லியிருப்பார். சொல்லுறதில மட்டும் நில்லாம செயலிலயும் செய்து காட்டுற ஆளா உம்மட ஆள் இருந்தால் நீர் கவலைப்படவே தேவையில்லை. மிச்ச அலுவல்கள் தன்ரை பாட்டில நடக்கும்"

உமா பின்னி முடிந்து தேநீர் குடிக்க ஆரம்பித்தாள். கவனம் மட்டும் பத்மா சொல்வதிலேயே இருந்தது.

"உங்கட அப்பா நல்லதொரு வேலை பாத்தவர். அவற்றை தொழில் புனிதமான ஆசிரியத் தொழில். அந்தத் தொழிலுக்குரிய மரியா

www.padippakam.com



தையோட அவர் நடந்தபடியால்தான் இந்த ஊரே அவரில மதிப்பு வைச்சிருக்கு.உம்மட விசயம் பழைய காலத்தாளான அவருக்கு கரும்புள்ளியா தெரியுது.என்டாலும் அவர் நிரஞ்சன்ரை வீட்டை தேடிப் போனதில இருந்து அவரால இதை ஏற்றுக் கொள்ள முடியும் என்டு தெரியுது.நிரஞ்சன்ரை வீட்ட அவர் எப்பவுமே சந்திக்காத அனுபவம் கிடைச்ச படியாத்தான் கலங்கிப் போனார்.அவருக்கு ஆறுதல் சொல்ல இந்த வீட்டில நீர் மட்டும் தான் இருக்கிறீர்.நீரே அழுது கொண்டிருந்தா அவரை ஆர் கவனிக்கிறது?"

பத்மா நிறுத்தி ஆறிப் போன தனது தேநீரை படபடவெனக் குடித்து முடித்தாள்.

"நாளைக்கே நீரும் நானும் நிரஞ்சன் வீட்ட போவம். நிரஞ்சனைச் சந்திச்சுக் கதைப்பம்.இந்தப் பிரச்சினையில அவற்றை நிலைதான் முக்கியம். அவற்றை உறுதியிலதான் எல்லாமே அடங்கியிருக்கு.இதுக்கெல்லாம் அப்பாவை அனுப்பத் தேவையில்லை.நாங்களே போய்ச் சந்திப்பம். நீர் என்ன சொல்லுறீர்?"என்று உமாவைக் கேட்டாள்.

உமா இப்போதுதான் கண்ணாடியைவிட்டு முழுமையாகத் திரும்பினாள்.முகத்திலிருந்த வாட்டத்தின் சதவீதம் குறைந்திருந்தது.கண்கள் கூட பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.

"அப்பா என்ன சொல்லுவரோ?"

"அப்பாவோட நான் கதைக்கிறன்.நீர் விரும்பினா இண்டைக்கு எங்கட வீட்ட வந்து படுமன்" பத்மா அழைப்பு விடுத்தாள்.

"ம்.அப்பாட்ட கேட்டிட்டு" என்று உமா சந்தோசமாகச் சம்மதித்தாள்.

பத்மா எழுந்து முன் வாசலுக்கு வந்தாள்.சோமசுந்தரம்இன்னும் அப்படியே இருந்தார்.பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த தேநீர் குடிக்கப்படாமல் ஆறியிருந்தது.

"உமாவை நான் இண்டைக்கு எங்கட வீட்ட படுக்கக் கூட்டிக் கொண்டு போறன்"

"அதுக்கென்ன பின்னை.கூட்டிக்கொண்டு போ.அம்மா இல்லாதபின்னை.உங்கட வீட்டிலயாவது மனம் விட்டுக் கதைக்கட்டும்."சோமசுந்தரத்தின் குரலிலிருந்த பாசத்தைக் கண்டு பத்மா நெகிழ்ந்து போனள்.

தனக்கு நடந்த அவமானத்தைப் பெரிதுபடுத்தி மகளுடன் தன்னிக் குதிக்காமல், மகளுக்குத் துணையாக யாருமில்லையே என்று கவலைப்ப

படிப்பகம்

www.padippakam.com



டும் அவருடைய மனதைப் புரிந்து கொண்ட பத்மா இப்படியொரு அப்பாகிடைக்க உமா அதிஷ்டம் செய்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

"அதோட நாளைக்கு நிரஞ்சனோட கதைக்கிறதுக்குநான் உமாவைக் கூட்டிக்கொண்டு போறன்"

சோமசுந்தரம் நிமிர்ந்து அவளைப் பார்த்தார். "நீ படிச்ச பிள்ளை. எல்லாத்தையும் யோச்சு என்ன செய்யிறதெண்டாலும் செய். உமாவை உன்ரை சகோதரியாவே நினைச்சுக் கொள்"

பத்மா அவரிடம் அனுமதி பெற்றுவிட்ட உற்சாகத்துடன் உமாவிடம் வந்தாள். இருவருமாக சோமசுந்தரத்திடம் விடை பெற்றுக்கொண்டு போனார்கள்.

அவர்கள் போவதை சோமசுந்தரம் பார்த்துக் கொண்டிருந்தார்.

## 27

இரவு வேதா மூவருக்குமாக இடியப்பம் அவித்தாள். மூன்று பேரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டார்கள். இரவு உணவின் பின் முன்கூடத்தில் வந்து அமர்ந்தபோது மறுபடியும் பழைய விசயம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

சோமசுந்தரம் மாஸ்ரர் நிரஞ்சன் வீட்டுக்குப் போனது உட்பட நடந்த விசயங்கள் அனைத்தையும் பத்மாவும், உமாவும் வேதாவுக்கு விபரித்தார்கள்.

"நாளைக்கு நானும், உமாவும் நிரஞ்சனைச் சந்திக்கப் போறோம்." என்று பத்மா தன்னுடைய திட்டத்தைச் சொன்னாள்.

"அதுதான் சரி. இந்த விசயத்தில தாய், தகப்பன்ரை சம்மதமும் முக்கியமெண்டாலும் அதைவிட முக்கியம் சம்பந்தப்பட்டவையின்ரை விருப்பந்தான். அனபடியா நீங்க நாளைக்கே போய் சந்தியுங்கோ" என்று வேதா அவர்களுடைய திட்டத்தை ஏற்றுக் கொண்டாள்.

"அப்பா அவற்றை வீட்ட போனது அவருக்குத் தெரியாதென்

படிப்பகம்

www.padippakam.com



டுதான் நான் நினைக்கிறன்.தெரிஞ்சிருந்தா கட்டாயம் ஏதாவது செய்திருப்பார்.எதுக்கும் அவரைச் சந்திக்கிறதுதான் நல்லம்"உமா நம்பிக்கையுடன் சொன்னாள்.

வேதா படுக்கை அறைக்குப் போய் படுத்துக் கொள்ள,உமாவும் ,பத்மாவும் மெத்தைகளை எடுத்து வந்து முன் கூடத்தில் போட்டு படுத்துக் கொண்டார்கள்.

"இப்ப உம்மட கவலையெல்லாம் மறைஞ்சிட்டுதுதானே?"போர்வையால் போர்த்திக் கொண்டு பத்மா கேட்டாள்.

"அரைவாசி" உமா சிரித்துக் கொண்டாள்.

"இன்னும் என்ன பிரச்சினை?"

"இல்லை.ஊர் முழுக்க என்ரை விசயம் தெரிஞ்சிருக்கு.தற்சேலா எதாவது பிரச்சினையா நடந்தா எல்லாரும் வாய்க்கு வந்தபடி கதைப்பினம்"

"உப்பிடிக் கதைச்சீரோ எனக்குக் கோவம் வரும்.ஊரைப்பற்றி நீரேன் கவலைப்படுறீர்?ஊரைக் கேட்டுக் கொண்டே நீர் லவ் பண்ணினீர்.அல்லது ஊர்தான் உமக்கு ஆள் பிடிச்சுத் தந்ததோ?எல்லா விசயத்துக்கும் ஊர் சொல்லும் ஊர் சொல்லும் எண்டு பயந்தா இந் நேரம் ஊருக்க முக்கால்வாசிப் பேரும் கழுத்தில கயிறு மாட்டிக்கொண்டு தொங்குவினம்.ஒவ்வொருத்தருக்கும் மற்ற வீட்டு ஜன்னலுகள்தான் முக்கியமே தவிர தங்கடயில்லை.ஆனபடியா ஊர்,ஊர் எண்டு இனியும் கதையாதையும்"படுக்கையிலும் பத்மா உணர்ச்சிவசப்பட்டாள்.

"எனக்கு அப்பாவை நினைக்கத்தான் கவலையாயிருக்கு.இந்த சனங்களால அவர் அழுகிறதைப் பாக்கத்தான் என்னால பொறுக்கேலாம இருக்கு"எனும்போது உமாவின் குரல் தளும்பியது.

"உம்மட வயசுக்கும்,உம்மட அப்பாவின்ரை வயசுக்கும் வித்தியாசம் இருக்கிறதைப் போலதான் அவர் தன்னுடைய காலத்தில வாழ்ந்த வாழ்க்கை முறைக்கும்,இப்ப நாங்கள் வாழுற வாழ்க்கை முறைக்கும் சரியான இடைவெளியிருக்கு.ஒரு முன்னள் ஆசிரியர் என்ட ரீதியில உம்மட அப்பாவால இதைப் புரிஞ்சு கொள்ள முடியுமெண்டு எனக்கு நம்பிக்கையிருக்கு. இல்லையெண்டா இந்த விசயத்தைக் கேள்விப்பட்ட உடனயே அவர்உம்மை அடிச்சு நொருக்கியிருப்பார்.தன்ரை மானத்தைக் கப்பலேத்திப் போட்டியேயெண்டு பட்டினி போட்டிருப்பார்.அவனுக்கும் உனக்கும் தொடர்பேயிருக்கப்படாதெண்டு சொல்லிப் போட்டு வேற மாப்பிள்ளையை அவசர அவசரமாய் தேடியிருப்பார்.இப்பிடி எதுவுமே செய்யாம அவர் நிதானமா

படிப்பகம்

www.padippakam.com



யாயமா நடக்கிறதைப் பாத்து எனக்கு அவரில நல்ல நம்பிக்கையிருக்கு. இப்படியான அப்பா கிடைக்கிறது அபூர்வம். எதையும் ஏற்றுக் கொள்ளாம பட்டான்த்தனமா முரண்டு பிடிக்கிற பெற்றோராலதான் கனபேர் தற்கொலையைத் தெரிவு செய்யினம்"

பத்மா சொல்லிக் கொண்டிருக்கும்போது உமாவுக்குத் திடீரென பழைய ஞாபகம் ஒன்று வந்தது. முன்பொரு முறை கிறீம் கவுசிலிருக்கும்போது அப்பா தன்னை ஏசுவது போலவும், அதற்காகத் தான் அவரை திருப்பி ஏசிவிட்டு வீட்டை விட்டு வெளியேறுவது போலவும் கற்பனை பண்ணியதை இப்போது நினைத்துப் பார்த்தாள்.

'கற்பனைக்கும் யதார்த்தத்துக்கும் எவ்வளவு இடைவெளி. கற்பனை செய்ததுக்கு எதிர்மாறுத்தான் அப்பா நடந்து கொள்றார். ஒருவேள கற்பனை செய்த மாதிரியே அவர் நடந்திருந்தா என்ன நடந்திருக்கும்? நானும் தாறுமாறாய் கத்தியிருப்பன். அப்பா மனமுடைஞ்சிருப்பார். அல்லது நான் வீட்டைவிட்டு வெளியே வந்திருப்பன். இப்படியான அவசரப் பிழையன் எதுவுமே நடக்காம அப்பான்ரை நிதானம் எல்லாரையும் காப்பாத்தியிட்டுது. பத்மா சொன்னது மாதிரி இப்பிடியான அப்பா கிடைக்க நான் அதிஉட்டம் செய்திருக்க வேணும்'

உமா பலவாறு யோசனை செய்தபடி படுக்கையில் படுத்திருந்தாள்.

"யாமிருக்கப் பயமேன்" என்று நிரஞ்சன் சிரித்தான்.

உறக்கம் வர மறுத்தது.

# 28

"என்ன சொல்லுறது கேக்குதே?" என்ற அன்னபூரணத்தின் சத்தம் இரவைக் கிழித்தது.

"ஓமோம். சொல்லும்" கனகசுந்தரம் அலுப்புடன் திரும்பிப் படுத்தார்.

"நானக்கி வைத்தியநாதனிட்ட போய் சாடையா கதையை விட்டுப் பாருங்கோ. அவையும் எப்பவோ தொடக்கம் பிரியப்பட்டுக்கொண்டிருக்கினம். உப்பிடியே ஆர் முந்திறதெண்டு ஆனை ஆள் பாத்துக் கொண்டி

படிப்பகம்

www.padippakam.com



ருந்தா இப்ப புதுசா கிளம்பியிருக்கிற பிரச்சினையால எல்லாம் நாசமா போகும். என்ன நான் சொல்லுறது விளங்குதே?"

அன்னபூரணத்தின் உருட்டலால் இன்னொரு 'உம்' சொல்லிவிட்டு மற்றப் பக்கம் திரும்பிப் படுத்தார் கனகசுந்தரம்.

"நான் பகலே நிரஞ்சனோடை கதைச்சுப் போட்டன். அவனுக்கு உந்த விசயம் ஒண்டும் தெரியாதாம். எப்பவோ ஒருநாள் பண்டாரவன்னியில அந்தப் பெட்டையின்ரை புத்தகங்கள் விழுந்து இவன் எடுத்துக் குடுத்தவனாம். அண்டையிலயிருந்து இவனைக் கண்டா அந்தப் பெட்டை சிரிக்கிறவளாம். இவனும் சிரிக்கிறவனாம். அதுக்காண்டி தன்னைக் கலியாணம் செய்யச் சொல்லிப் பெட்டை தகப்பனை அனுப்பினது தான் என்ன செய்யிறதெண்டு அவன் சிரிக்கிறான். நான் சொல்லுறது விளங்குதே?"

'உம்' என்றபடி கனகசுந்தரம் மறுபடியும் பழைய பக்கத்துக்குத் திரும்பினார்.

"காசுக்கு வழியில்லாததுகளெல்லாம் மாப்பிளை பிடிக்கஇப்ப புதுப் புது வழியளை கண்டுபிடிச்சிருக்குதுகள். அதுசரி. காலம் மாறேக்கஅதுகளும் மாற வேணும் தானே? பாத்தா ஏதோ படிச்ச மனுசன் மாதிரியிருக்கெண்டு உள்ளுக்க வந்து இருக்கச் சொன்னா கலியாணக் கதையே தொடங்கிவிட்டினம். உப்பிடி எத்தினை பேர் வெளிக்கிட்டிருக்கினமோ? நான் ஒருத்தி இந்த நடுச்சாமத்தில பேய் மாதிரிக் கத்திக் கொண்டிருக்கிறன். நீங்கள் ஒண்டிலயும் அக்கறையில்லாம கோயிலுக்கு நேத்தி வைச்ச மாதிரிஇஞ்சாலயும் அங்காலயுமா உருண்டு கொண்டிருங்கோ"

மறுபக்கம் திரும்பிப் படுக்க முயற்சித்த கனகசுந்தரம் அன்னபூரணம் சொன்னதைக் கேட்டதும் அதைக் கைவிட்டார். அவருடைய தூக்கம் பறந்துவிட்டது. வாய்விட்டுத் திட்ட முடியாத மனைவியை மனதுக்குள்நன்றாக வைதுகொண்டார்.

'என்ன மனுசி இவள். வீடு தேடி வந்த மனுசரை பழக்க வழக்கம் தெரியாதவள் மாதிரி கலைச்சுப் போட்டு நிக்கிறாள். வந்தவர் வைத்தியநாதனைப் போல காறில வந்திருக்க வேணும் உவள் உப்பிடியேசெய்திருப்பள். காசெண்டா உவளுக்கு காணும். மனிசரைத் தேவையில்லை.

இவன்தான் இப்பிடித் துள்ளிக் குதிக்கிறானெண்டால் நிரஞ்சன் ஏன் அப்பிடிச் சொன்னவன்?

சும்மா சிரிச்சதுக்காண்டி ஆரேன் ஒரு பெட்டை தன்ரை தகப்பனைக் கலியாணம் பேச அனுப்பி வைக்குமே? வீட்டுக்கு வந்திட்டுப்போன

படிப்பகம்

www.padippakam.com



மனிசரைப் பாத்தா சாதுவான ஆளாத்தான் தெரியுது. உவள்தான் எல்லாரையும் பேக்காட்டுறள் போல கிடக்கு. மகனைக்கூட தன்னை மாதிரியே வளத்துப் போட்டாள். நல்ல குடும்பத்துக்க வந்து மாட்டுப்பட்டன். உவளிட்டக் கைநீட்டி காசு மட்டும் வாங்கியிருக்காட்டி... 'கனகசுந்தரம் சத்தம் வராமல் பல்லைக் கடித்தார்.

அன்னபூரணம் இவரின் மனவோட்டங்களை கண்டுபிடிக்க முடியாதபடி குறட்டை விட ஆரம்பித்திருந்தாள். அவளைப் பார்க்கும்போதே கனகசுந்தரத்துக்கு எரிச்சல் பொங்கிக் கொண்டு வந்தது.

'என்ரை தலையெழுத்து. ஏலாக்கட்டமா கையை நீட்டிப் போட்டு இப்ப கிடந்து புழுங்கிறன். படிக்கிற காலத்தில பேச்சுப் போட்டிக்கு பரிசுகள் வாங்கிப் போட்டு இப்ப வாயையே மூடி வைச்சிருக்க வேண்டிக் கிடக்கு. என்ரை பெடியனுவது உண்மையான ஆண்மகனு காசை வாங்காம பொன்னை மட்டும் ஏற்றுக் கொள்ளுவானென்டு பாத்தா அவனும் இப்ப எங்கயோ மாட்டுப்படுவன் போல கிடக்கு. இவங்களுக்குப் புத்தி வாறதுக்கு இனி நான் சுயசரிதமெல்லோ எழுத வேணும்'

தன்னுடைய இயலாமையை எண்ணி மனம் நொந்தவராக உறக்கம் வராமல் கனகசுந்தரம் குழம்பிக் கொண்டிருந்தார்.

ஆண்களால்தான் முடியவில்லையென்றால் பெண்களால் கூட ஏன் பெண்களுக்கு ஆதரவளிக்க முடியாமலிருக்கிறது என்று அவருக்குப் புரியவே இல்லை.

## 29

கடையில் வியாபாரம் பரபரப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பத்மா உமாவையும் தன்னோடு கடைக்குக் கூட்டிக் கொண்டு வந்திருந்தாள். அரை நேர விடுப்பு எடுத்துக் கொண்டு அப்படியே நிரஞ்சனிடம் போவதென்று அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

வியாபாரத்துக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் உமா ஒரு மூலையில் முக்காலியை போட்டு உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

தவபாலனும், ரகுராமனும் அடிக்கடி அவளை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டார்கள். மாலா மட்டும் வாயால் விசாரித்துக் கொண்டாள்.

www.padippakam.com



பகல் பன்னிரண்டுடன் பத்மா விடுப்பு எடுத்துக் கொண்டுஉமா வுடன் கடையை விட்டு வெளியே வந்தாள்.

"கடையில போய் ஏதாவது சாப்பிட்டிட்டுப் போவம்" என பத்மா சொல்ல உமா ஏற்றுக் கொண்டாள்.

இருவரும் சைவக் கடையொன்றுக்குள் புகுந்தார்கள். உள்ளே அதிக கூட்டமில்லை.ஒரு மூலையாகப் போய் எதிரெதிரே உட்கார்ந்தார் கள்.

"என்ன சாப்பிடுறீர்?" பத்மா உமாவை விசாரித்தாள்.

"எனக்குப் பசிக்கேல.சும்மா லேசா ஏதாவது சாப்பிடு வம்"

"வடை சாப்பிடுவமே?"
"ஓம்"

உத்தரவை எதிர்பார்த்துக் காத்திருந்த சிறுவனிடம் பத்மா தங்களுடைய விருப்பத்தைத் தெரிவிக்க அவன் அதே இடத்தில் நின்றபடி "ரண்டு வடே, ரண்டு ரீ" என்று சத்தமிட்டான்.

"என்ன யோசிக்கிறீர் போல?" உமாவின் முகபாவத்தைப் பார்த்து பத்மா கேட்டாள்.

"வீட்டில நிரஞ்சன் நிண்டா ஒரு பிரச்சனையுமில்லை. அவர் இல்லாம தாய் மட்டும் நிண்டா என்ன செய்யிறதெண்டுதான் யோசிக்கிறன்" உமா கவலை இழையோடச் சொன்னாள்.

"இதுக்கேன் யோசிப்பான்.நிரஞ்சன் வருமட்டும் இங்கதான் இருப்பம் எண்டு தாயிட்ட சொல்லிப்போட்டு அப்பிடியே படியில இருப் பம்"பத்மா சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

"கிட்டத்தட்ட சத்தியாக்கிரகம்" என்று உமாவும் புன்முறு வினாள்.

உத்தரவு வாங்கிய சிறுவன் ஒரு கையில் இரண்டு தேநீரையும் மற்றக்கையில் இரண்டு தட்டுகளில் வடைகளும், சட்னியுமாகக் கொண்டுவந்து மேசையில் பரப்பினான்.

பத்மாவும், உமாவும் சாப்பிட ஆரம்பித்தார்கள்.

கடை முதலாளி இருந்த முன்பக்கத்தில் தமிழ்ச்சேவை கேட்டு க்கொண்டிருந்தது.சாப்பிட்டு முடித்தவர்களின் சிட்டைகளைக் கணக்கிட்டு முதலாளி காசு வாங்கிக் கொண்டிருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



"ஆளைக் கண்ட சந்தோசத்தில உணர்ச்சி வசப்பட்டிடாதை யும். வந்த அலுவலை முதல் கவனிக்க வேணும்." என்று பத்மா உமாவைப் பார்த்து உமா குறும்பாகச் சொல்ல அவள் வெட்கமாகச் சிரித்துக்கொண்டாள்.

வேகமாகச் சாப்பிட்டு, தேநீர் குடித்து முன் பகுதிக்கு வந்து கணக்கு முடித்துவிட்டு கடையிலிருந்து வெளிப்பட்டார்கள்.

தவபாலனை ஏற்கெனவே விசாரித்து வைத்திருந்தபடியால் பத்மாவுக்கு இடம் தெரிந்திருந்தது. பஸ் நிலையத்துக்கு வந்து சரியானபஸ் பிடித்து, சரியான இடத்தில் இறங்கிக் கொண்டார்கள்.

நிரஞ்சனின் வீட்டு வாசலுக்கு வந்ததும் இருவரினதும் வேகம் மட்டுப்பட்டது. ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். உமாவுக்கு வியர்வை துளிர்க்க ஆரம்பித்தது.

வெளிப் படலையைத் திறந்துகொண்டு உள்ளே போனார்கள். வீட்டின் முன்னால் இடது பக்கத்தில் ஒரு மனிதர் வியர்வையில் நனைந்தபடி விறகு கொத்திக் கொண்டிருந்தார்.

இருவரும் அவரை நெருங்கினார்கள். "நிரஞ்சன் நிற்கிறாரே?" என்று பத்மா அவரைக் கேட்டாள்.

குரல் கேட்டு நிமிர்ந்த கனகசுந்தரம் அவர்களைப் பார்த்து விட்டு சண்டிக்கட்டை மாற்றிக் கொண்டார். வியர்வையைத் துடைத்தார்.

"ஓ. உள்ளுக்க நிக்கிறான். நீங்கள் ஆரெண்டு தெரியேல" என விசாரித்தார்.

"இவ நிரஞ்சன்ரை சிநேகிதி. ஏதோ முக்கிய அலுவலா கதைக்க வேணுமாம்" என்று பத்மா உமாவைக் காட்டினாள். இருவருக்கும் தங்கள் முன்னால் நிற்பது நிரஞ்சனின் தந்தையென்று தெரியவில்லை.

"அப்பிடியே. பொறுங்கோ ஆளைக் கூப்பிடுறன்" என்றவர் வீட்டுப் பக்கமாகத் திரும்பி நிரஞ்சன் என்று குரல் கொடுத்தார்.

நீண்ட தாமதத்தின் பின் வெளியே வந்த நிரஞ்சன் அங்குநின்ற உமாவையும், பத்மாவையும் பார்த்து ஆச்சரியப்பட்டான். மறு நிமிடமே உசாரானான். 'இவையள் ஏதோ திட்டத்தோடதான் வந்திருக்கினம்'

"உன்ரை சிநேகிதிமாராம். ஆக்களை உள்ளுக்க கூட்டிக்கொண்டுபோய்க் கதை." என்று கனகசுந்தரம் மகனுக்குச் சொல்லிவிட்டு விறகு கொத்தலைத் தொடர்ந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



விறகு கொத்துபவர் நிரஞ்சனுக்கு உத்தரவிடுவதை நினைத்து பத்மாவும், உமாவும் ஆச்சரியப்பட்டார்கள்.

"உள்ளுக்கு வாங்கோ" என்று நிரஞ்சன் அவர்களை அழைத் தான்.

பத்மாவும், உமாவும் அவனைப் பின்தொடர்ந்து உள்ளே போ னார்கள். உமாவின் மனநிலை உயர் அழுத்தத்தில் இருந்தது. நிரஞ்சனைப்பா ர்த்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சி ஒருபுறம். அவன் தன்னைப் பார்த்தும் சந்தே சம் எதையும் வெளிக்காட்டாத திகைப்பு மறுபுறம். அவள் கொதிக்க ஆரம்பித்தாள்.

உள்கூடத்தில் மூவரும் அமர்ந்தார்கள். சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. யார் ஆரம்பிப்பது என்று அவர்கள் மூவருக்கும் தெரி யவில்லை.

இந்தச் சில நிமிடங்களிலேயே பத்மா நிரஞ்சனைக் கணித் க்கொண்டாள். உமாவைக் கண்டபின்பும் அவன் காட்டாத ஆர்வமும், அவர் ளுடன் கதைப்பதற்கு எந்தவித அக்கறையும் காட்டாத தன்மையும் முக த்தில் பரவியிருந்த திகைப்பும் அவனைப் பத்மாவுக்கு இனம் காட்டிவிட்டன அவனுடன் எப்படிக் கதைக்க வேண்டுமென அவள் தன்னைத் தயார்ப்படுத் கொண்டாள்.

உமாவோ முழுதாகக் குழம்பிக் கொண்டிருந்தாள். தன்னைக் கண்டதும் நிரஞ்சன் ஆச்சரியப்பட்டுப் போவான். கதைக்க வார்த்தைகள் வராமல் தடுமாறுவான். சந்தோசத்தில் கண்ணீர் வரச் சிரிப்பான். வீட்டி இருப்பவர்களுக்குத் தன்னை இன்னாரென அறிமுகப்படுத்துவான் என்றெல்லா அவள் கற்பனை செய்திருந்தவை சிலநொடிகளில் மறைந்து போயின.

மௌனத்தை விரும்பாத பத்மா ஆரம்பித்தாள். "நாங்களே இங்க வந்திருக்கிறம் எண்டு உங்களுக்குத் தெரியும். நேற்று உமாவின்ரை அப்பா இங்க வந்ததை கட்டாயம் நீங்க அறிஞ்சிருப்பீங்க. அந்த விசய மாத்தான் கதைக்க வந்திருக்கிறம்"

"அதில கதைக்க என்ன இருக்கு?" என்று நிரஞ்சன் கேட் போது உமா திடுக்கிட்டுப் போனாள்.

"உங்களுக்குக் கனக்க விளங்கப்படுத்தத் தேவையில்லையெண் டுநினைக்கிறன். நீங்க ரெண்டு பேரும் லவ் பண்ணின விசயம் உமாவின்ரை ஊர் முழுக்கத் தெரிஞ்சு போச்சு. அதால கெதியில உங்கள் ரண் பேருக்கும் கலியாணம் செய்து வைக்க உமாவின்ரை அப்பா நியாயமான முறையில ஆசைப்படுறார். அதைப் பற்றிக் கதைக்கத்தான் அவர் நேற்றை

www.padippakam.com



க்கு இங்க வந்தவர்.வீடு தேடி வந்தவரை உங்கட அம்மா முகத்தில அடிச்ச மாதிரிக் கதைச்சுத் திருப்பியனுப்பிப் போட்டா.இந்த விசயத்தைப் பொறுத்த வரையில உங்கட அம்மாவின்ரை விருப்பத்தைவிட உங்கட முடிவுதான் முக்கியம்.அதுதான் உங்களோட நேரடியா நாங்கள் கதைக்க வந்தனுங்கள்" பத்மா படபடவெனச் சொல்லி முடித்தாள்.

நிரஞ்சனின் முகத்தில் கோப ரேகைகள் படர்ந்தன."நீங்கள் ஆரெண்டு எனக்குத் தெரியாது.இவ்வளவு துணிச்சலா கதைக்கிறபடியாஉமாவின்ரை அக்காவா இருக்கலாமெண்டு நினைக்கிறன்.நீங்க சொன்ன முதல் விசயமே பிழை.நானும் உமாவும் லவ் பண்ணினனுங்க என்டு உங்கட ஊர் கதைச்சா அதுக்கு நான் என்ன செய்யிறது?தற்செலா உமாவும் நானும் ஒருநா பஸ் ஸ்ராண்டில சந்திச்சம்.அன்டையிலயிருந்து நல்ல பிரெண்ட்ஸா பழகிறம்.வேற மாதிரி பழகேல.விசயம் இப்பிடியிருக்க இருந்தாப்போல வந்து கலியாணம் செய் என்டா நாங்கள் என்ன செய்யிறது?" நிரஞ்சன் நிதானமாகச் சொன்னன்.

உமா அதிர்ந்து போனுள்.அவளால் தன்னையே நம்ப முடியவில்லை.கிறீம் கவுஸ் சம்பவங்கள்,தெருவோர சம்பாசனைகள் யாவும் நினைவுக்கு வந்தன.'அத்தனையும் பொய்யா?'

பத்மா வெப்பமடைய ஆரம்பித்தாள்."நீங்க சொல்லுறதுஎந்தளவுக்குச் சரியெண்டு உமாவையே கேளுங்கோ.உமா வாயைத் திறந்து கதையும்" என்று உமாவைத் தூண்டினுள்.

உமாவால் கதைக்க முடியவில்லை.தொண்டையை அடைத்தது. "என்ன நிரஞ்சன் இப்பிடிச் சொல்லுறியள்?உங்களுக்கு எல்லாம் மறந்து போச்சே?" என்று சொல்லி முடிப்பதற்குள் கண்ணீர் துளிர்த்து விட்டது.

அவளது கேள்வி நிரஞ்சனை எந்த விதத்திலும் அசைக்கவில்லை. "எனக்கு இப்பதான் விளங்குது.நீரும் பிழையான எண்ணத்திலதான் இருக்கிறீரெண்டு.இதை எப்பவோ என்னோட வடிவா கதைச்சிருந்தா நான் வடிவா விளங்கப்படுத்தியிருப்பன்.இப்ப இந்தப் பிரச்சினையே வந்திருக்காது.இப்பவும் சொல்லுறன்.நீங்க இப்ப கதைச்சதை எல்லாம் மறந்துபோட்டு நாங்கள் பிரெண்ட்ஸாவே இருப்பம்.ஒரு ஆம்பிளையும் பொம்பிளையும் சிநேகிதமாய் இருக்கிறதை காதலிக்கிறதெண்டு முடிவு கட்டிறது சுத்த பட்டிக்காட்டுத்தனம்.பழைய காலத்தாக்கள் வேணுமெண்டா அப்பிடி நடந்திருக்கலாம்.இந்தக் காலத்திலயும் நாங்க அப்பிடி நடக்க வேணுமெண்ட கட்டாயமே?" என்று நிரஞ்சன் சிரித்தான்.

இப்படியொரு சந்தர்ப்பம் ஏற்படலாம் என்ற சந்தேகத்தில் அவன் ஏற்கெனவே தயாரித்து வைத்திருந்தபடியால் இப்போது நிதானமாகக் கதைக்க முடிந்தது.

படிப்பகம்

உமாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அழுகை வர
பார்த்தது. கூடவே புதிதாக ஆத்திரமும் வர முயற்சித்தது. 'கடைசியாச்
சந்திச்ச தியேட்டர் சந்திப்புக்கூட வெறும் நட்பு அடிப்படையிலா அமை
சிருந்தது?' என்று அவனைக் கேட்கத் துடித்தாளாயினும் வார்த்தைகள் வ
மறுத்தன.

"உங்களைவிட எனக்கு உமாவில நம்பிக்கையிருக்கு. ஆனபடியா
அவ சொல்லுறதைத்தான் நான் நம்புவன். பள்ளிக்கூடம் விடும் வரைக்கும்
சைக்கிளோட வெளியில காத்துக்கொண்டு நிக்கிறதும், கிறீம் கவுசுக்கும்கூ
பாருக்கும் அடிக்கடி கூட்டிக்கொண்டு போறதும், படம் பாக்க வாவெண்
ஆக்கினைப்படுத்துறதும், கைவிட மாட்டன் என்டு சத்தியம் பண்ணுறதும்வெறு
நட்புத்தான் என்டு நீங்க சொல்லித்தான் எனக்குத் தெரியுது. சாதாரண
நட்பில இடைக்கிடை கலியாணக் கதையும் வருமெண்டு இப்பதான் புரியுது!
பத்மா குத்தலாகச் சொன்னாள்.

நிரஞ்சன் பொறுமையிழந்துவிட்டான். "உமாவோட ஏதோ
கொஞ்சம் சிநேகிதமெண்ட படியாத்தான் உங்கள் ரண்டு பேரையும் உள்
க்க கூப்பிட்டு கதைச்சுக் கொண்டிருக்கிறன். தாங்களா கனக்க கற்பனை
பண்ணிக்கொண்டு வாறவை எல்லாரையோடயும் கதைக்க வேணுமெண்ட
அவசியம் எனக்கில்லை." என்று விறைப்பாகச் சொன்னான்.

பத்மாவின் பொறுமையும் போய்விட்டது. எதிரேயிருந்த சா
ம்போன ஆளின் வக்கிரம் அவளுடைய குமுறலைத் தூண்டிவிட்டது.

"ஏன் சுத்தி வளைச்சுப் பேசி நேரத்தை வீணாக்குவான். நே
டியாவே சொல்லுங்கோ. உமாவைக் கலியாணம் செய்ய உங்களுக்கு விரு
பமோ? விருப்பமில்லையோ?" பத்மா கதிரை நுனிக்கு வந்து கேட்டாள்.

"நான்தான் வடிவா விளங்கப்படுத்திட்டேனே. திருப்பித் தி
ப்பிக் கேட்டா என்ன சொல்லுறது? நான் உமாவோட நல்ல சிநேகிதனா
தான் பழகினன். அவா வேற விதமா கற்பனை செய்ததுக்கு நான் பொ
றுப்பில்லை. சிநேகிதமா இருக்கிறவை எல்லாரையும் கட்டாயம் கலியாண
செய்ய வேணுமெண்டா நான் இப்ப எத்தினைபேரைக் கலியாணம் செய்
ருக்க வேணும்" கோபமாகச் சொல்லிச் சிரித்தான் நிரஞ்சன்.

பத்மா வேகமாக எழுந்தாள். "உமா வாரும் போவம். வே
ற எத்தினையோ பிரயோசனமான அலுவலுகள் இருக்கு"

உமா தயங்கியபடியே எழுந்தாள். வாசல்வரைக்கும் வந்
போது கூட "நான் சும்மா பகிடிக்குத்தான் உப்பிடிக் கதைச்சனான். என்
பயந்திட்டீரோ?" என்று நிரஞ்சன் சொல்ல மாட்டானா என்ற ஏக்கம்

www.padippakam.com



மனதின் ஒரு மூலையில் இருந்தது.

விறுவிறென்று நடந்து போகும் அவர்கள் இருவரையும் விறகு கொத்திக் கொண்டிருந்த கனகசுந்தரம் கவனித்தார். சீட்டுக் காசு சேகரித்துக் கொண்டு வீட்டுக்கு வந்த அன்னபூரணம் நிரஞ்சன் மூலம் விசயத்தை கேள்விப்பட்டு வந்தவர்கள் மேலிருந்த கோபத்தை கனகசுந்தரம் மீது திருப்பியபோது பத்மாவும், உமாவும் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தார்கள்.

# 30

பஸ்ஸில் உமா உணர்ச்சியின் உச்சத்திலிருந்தாள். நடந்து முடிந்தவைகளை அவளால் நம்ப முடியவில்லை. 'நிரஞ்சனா? அவரா இப்படி?'

'யாமிருக்கப் பயமேன் என்டெல்லாம் சொன்னார். உம்மைத்தான் கலியாணம் செய்வன் எண்டு அடித்துச் சொன்னார். எங்களை ஆராலும் பிரிக்கேலாது என்டெல்லாம் வசனங்கள் சொன்னார்.

அந்த நிரஞ்சன் இவர்தானா?

ஏன் இப்பிடிச் செய்தார்? வெறும் போலியாத்தான் பழகினாரா? சும்மா விளையாட்டுக்காகத்தான் உப்பிடியெல்லாம் கதைச்சாரா? கடைசியா படம் பாக்கத் தியேட்டருக்குக் கூட்டிக்கொண்டு போனதுகூட சும்மாதானா?'

அந்தச் சம்பவத்தை நினைத்ததும் உமா வெறுப்படைந்தாள். நிரஞ்சனின் 'அவர்' மதிப்பு 'அவனாக' இறங்கியது.

'பாவி என்ன மாதிரி பழகினான்? உரிமையா உடம்பில எல்லாம் தொட்டுப் பழகிப் போட்டு எல்லாம் சும்மா விளையாட்டாமோ? நாங்கள் பெட்டையள். எங்களால ஒண்டும் செய்யேலாதெண்ட துணிவுதானே அவனுக்கு? நாங்கள் பழகினதுக்கு சாட்சியள் இல்லையெண்ட தைரியம் அவனுக்கு.

என்னைப் பற்றிக் கொஞ்சமெண்டாலும் யோசிச்சானே? ஊர் முழுக்க என்னைப் பற்றிக் கதை பரவியிட்டுது. பிள்ளை உண்டாகி நான் கலைச்சுப் போட்டன் எண்டும் சனம் கதைக்கும். எல்லாரும் என்னைப் பாத்து நக்கலடிக்கப் போயினம். நான் என்னண்டு றோட்டில நடக்கிறது? இனி ஆர் என்னைக் கலியாணம் கட்டப் போயினம்?

படிப்பகம்

www.padippakam.com



அப்பா பாவம்.ஊரில மதிப்பா திரிஞ்ச அந்த மனுசரை என்ரை நடத்தையால அவமானப்படுத்திப் போட்டன்.அப்பா என்னண்டு இதைத் தாங்கிக் கொள்ளுவார்?அவரை நான் எப்படி சமாதானப்படுத்துறது?'

அப்பாவை நினைத்ததும் உமாவுக்குத் துக்கம் பொங்கி வந்தது.பல் ஆகையால் தனது அழுகையை அடக்கிக் கொண்டாள்.

பத்மாவோ எரிமலையாகியிருந்தாள்.மனக் காட்சியில் நிரஞ்சனைத் தாறுமாறாக உதைத்துத் தள்ளினாள்.

'தான் ஒரு ஆம்பிளை எண்டதை வடிவாக் காட்டிப் போட்டான்.பொறுக்கி.தாங்கள் விரும்பிற நேரம் பெட்டையளுக்குப் பின்னாலதிரியிறதும், பிறகு உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லையெண்டு கைகழுவுறதும்உவங்களுக்கு விளையாட்டாப் போச்சு.தங்களை ஆரும் ஒண்டும் செய்யேலாது எண்டு கொழுப்பு.

உவனை மாதிரி ஆம்பிளையள் உப்பிடி நடக்கிறதுக்கு உமாவைப்போல பொம்பிளையளும் ஒரு காரணம்தான்.ஆரேன் ஒருத்தன் சினிமா ஸ்ராரைப் போல ஸ்ரைலா வெளிக்கிட்டு பல்லை இளிச்சாக் காணும்.உடன இவை மயங்கிடுவினம்.இவையின்ரை அறிவு எங்க போறது?முன் பின் தெரியாத ஆக்களெண்டா முதல் அவையின்ரை குணத்தை,நடத்தையை தெரிஞ்சு கொள்ள முயற்சிக்க வேணும்.இதென்னண்டா பேரைச் சொன்னக் காணும்.அடுத்த வசனம் ஐ லவ் யூ தான்.எல்லாம் அவசரம்.அவசரமா லவ் பண்ணுறது.அவசரமா பழகுறது.ஏதேன் நெருக்கடி வந்தாப் பிறகு தான் தலையில கை வைக்கிறது.

இப்பிடிச் சிலபேர் செய்யிறதாலதான் காதலின்ரை புனிதத்தைப் பற்றி ஒருத்தருக்கும் தெரியேல.அவையவை தங்கட தங்கட அலுவல பாத்துக்கொண்டிருக்கு மட்டும் எங்கட சமுதாயம் இப்பிடியே சீரழியவேண்டியதுதான்.'

நடத்துனர்ப் பையன் தரிப்பின் பெயரை சத்தம் போட்டுச் சொல்லியிருக்காவிட்டால் பத்மாவும்,உமாவும் இறங்க வேண்டிய இடத்தில் இறங்கியிருக்க மாட்டார்கள்.பாதையில் நடந்து போகும்போது இருவரும் ஒருவருடனொருவர் கதைத்துக் கொள்ளவில்லை.

இனித்தான் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியே உமாவுக்கு யோசனையாக இருந்தது.'இந்தக் கலியாணம் நடக்கப் போறதில்லை.இனி வேற ஒரு கலியாணத்துக்கும் வழியில்லை.நான் இப்பிடியே அப்பாவுக்குப் பாரமா இருக்க வேண்டியதுதான்.நான் இருக்கும் வரைக்கும் ஊர் எங்களைப் பாத்துச் சிரிச்சுக் கொண்டுதான் இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



நான் செய்த பிழையளுக்கு ஒரே வழி நான் சாகிறதுதான். நான் செத்தாத்தான் என்னைப் பற்றின கதையும் நிக்கும். அப்பாவும் நிம் மதியா இருக்கலாம். நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாமலிருக்க வேணும். நான் ஏற்கெனவே தீமை செய்து போட்டன். இனி நான் செய்ய க்கூடிய ஒரே ஒரு நன்மை சாகிறதுதான்'

உமா தனக்குள் முடிவு செய்து கொண்டாள். இப்போது குழ ப்பம் குறைந்திருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

பத்மா உமாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். 'பாவம் உமா. நல்ல நம்பிக்கையோட இருந்தாள். என்னென்ன கற்பனை செய்து வைச்சிருந்தளோ? எல்லாம் அவளுல நாசமாய்ப் போச்சு

இந்த அதிர்ச்சியை இவள் எந்த மாதிரி ஏற்றுக் கொள்ளு வாள்? அவசரப்பட்டு இவனை நம்பின மாதிரித்தான் வேற முடிவும் எடுப் பாளோ? என்ன எல்லாரையும் போல தற்கொலை செய்யலாம் எண்டு தான் வலு சுகமா முடிவு செய்திருப்பா. எல்லாரும் நினைக்கிறது செத்து ப்போனா பிரச்சினையும் சேந்து செத்துப் போகுமெண்டு. இப்பிடி அவசரப் பட்டு மோட்டுத்தனமா முடிவெடுக்கிறபடியாத்தானே பிழை செய்யிறவை இன்னும் தைரியமா சீவிக்கினம்.

உமாவைத் தனிய விட்டா குழம்பிப் போய் கயிறு, கிணறு என் டுதான் தேடுவாள். ஆனைத் தனிய விடக் கூடாது. கொஞ்ச நாளைக்கு எங் கட வீட்டில தங்கப் பண்ண வேணும்'

இருவரும் தனித் தனியாகச் சிந்தித்து முடிவெடுத்தபின் ஒருவ ரையொருவர் அர்த்தமாகப் பார்த்தார்கள்.

"நீர் கொஞ்ச நாளைக்கு எங்கட வீட்டில வந்து நில்லும்" என்றுள் பத்மா உமாவைக் கூர்மையாகப் பார்த்தபடி.

"உங்களுக்கேன் வீண் கரைச்சல். நீங்கள் இவ்வளவு தூரம்என் னோட மினக்கிட்டதுக்கே நான் கடமைப்பட்டிருக்கிறன். இண்டையோட எல்லா விசயமும் முடிஞ்சு போச்சு. இனியும் ஏன் மற்றவைக்கு கரைச்சல் குடுப் பான். நான் எங்கட வீட்டயே போறன்" உமாவின் குரலில் விரக்தி பகிர ங்கப்பட்டது.

"இல்லை. நீர் இப்ப நேர எங்கட வீட்டதான் வாறீர். நான் உம்மோட கனவிசயம் கதைக்க வேணும். நான் உம்ம எங்கட வீட்டில விட்டிட்டு மாஸ்ரரிட்ட போய் கதைக்கிறன்"

"வேண்டாம் பத்மா. இனிக் கதைக்கிறதுக்கு என்ன இருக்கு?

www.padippakam.com



எல்லாம்தான் முடிஞ்சு போச்சே.எனக்கு வெளியில வெளிக்கிடவே விருப்பமில்லை.போய் வீட்டுக்க இருக்கப் போறன்"

"நீர் வெளியில வெளிக்கிட வேண்டாம்.எங்கட வீட்டிலயே இரும்.இவ்வளவு தூரம் உம்மட விசயமா நான் வந்தது உம்மில இருக்கிற அக்கறையாலதான் என்டு நீர் நம்பினு என்னோட இப்ப வீட்ட வாரும்"

இதற்குப் பதிலேதும் சொல்லாது உமா தலையைக் குனிந்தாள்.இருவரும் மௌனமாகப் பத்மாவின் வீட்டுக்கு வந்தார்கள்.

வேதா வீட்டு வாசலிலேயே அவர்களை எதிர்பார்த்து காத்திருந்தாள்.

"என்ன ரண்டு பேரும் களைச்சுப் போய் வாறியள்?சாப்பிடயில்லையோ?"என்று கேட்டாள்.

"ஓமம்மா.சரியாப் பசிக்குது.ரண்டு பேரும் இன்னும் சாப்பிடயில்லை" பத்மா உண்மையான பசியுடன் சொன்னள்.

"ரண்டு பேரும் இங்கதான் வருவியளென்டு நினைச்சு சமைச்சனான்.வடிவாச் சாப்பிடலாம்" வேதா சொல்லிவிட்டு சமையலறைக்குப் போனாள்.

பத்மாவும்,உமாவும் அவளைப் பின் தொடர்ந்தார்கள்.

# 31

காலையில் கடைக்கு வந்த போதே பத்மா அவதானித்திருந்தாள்.சிறிது காலமாக தவபாலனில் காணப்பட்ட வாட்டம் காணமல்போயிருந்தது.உற்சாகமாக இருந்தான்.

சகோதரியின் திருமணம் சரிவந்திருக்க வேண்டும் என பத்மா நினைத்துக் கொண்டாள்.அது பற்றித் தானாகவே கேட்க அவள் விரும்பவில்லை.சிறிது நாட்களாக அவர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த விரிசல் பத்மாவை தவபாலனிடம் கேட்க விடாமல் தடுத்தது.

கடந்த இரண்டு வருடங்களாக கடையில் ஆட்கள் இல்லாத போதும்,பாதையிலும்,பஸ் தரிப்பிலும் நெருக்கமாக கதைத்து வந்த அவ

படிப்பகம்

www.padippakam.com



ர்களுடைய நட்பு தவபாலன் தங்கைக்குச் சீதனம் கொடுப்பது பற்றிய பத்மாவின் கருத்துடன் மெல்ல மெல்ல முறியத் தொடங்கியது.

இந்த இரண்டு வருடங்களிலும் நான் உன்னைத் திருமணம் செய்கிறேன் என்ற பொருள்பட இருவரும் கதைத்துக் கொள்ளா விட்டாலும் ஏதோ ஒரு அடிப்படையில் தங்களுடைய மனங்கள் இணைந்ததை இருவருமே தெரிந்திருந்தார்கள்.

இருவரும் கதைக்கும்போதும் சினிமா பற்றியோ, ஆண், பெண் உறவு பற்றியோ அல்லது வேறு வீண் கதைகளையோ கதைத்துக் கொள்வதில்லை.எப்போதும் இலக்கியத்தைப் பற்றியதாகவும், சமுதாயத்தைப்பற்றியதாகவுமே அவர்களுடைய உரையாடல் அமைந்திருக்கும்.

சமுதாயச் சீர்கேடுகளை கருப் பொருளாக்கி அவற்றுக்கு மருந்தைத் தேடும் இலக்கிய வடிவங்களை பற்றி இருவரும் கருத்துப் பரிமாறிக் கொள்வார்கள்.அப்போது "என்னைப் போலவே இவற்றை வரவேற்கும் இவர் வாழ்க்கையிலும் துணையாக இணைந்து கொண்டால் சிறப்பாக இருக்கும்" என பரஸ்பரம் இருவரும் நினைத்துக் கொள்வார்கள். இந்தளவுடன் இவர்களுடைய காதல் மட்டுப்பட்டிருந்தது.

சமீப காலமாக பத்திரிகைகளில் தனது கவிதைகள் மூலம் புதிய முயற்சிகளை மேற்கொண்டிருந்த பாரதி என்ற புதுக் கவிஞனின் கவிதைகளைப் பற்றிய விமர்சனமே இருவரையும் நெருங்க வைத்தது.

"இப்ப பாரதிக்குத் தும்மிக் கொண்டிருக்கும்" என்று பத்மா சிரித்தபடி சொல்லுவாள்.

"வரப் போற விசேசத்துக்கு பாரதியையும் கூப்பிட்டாப் போச்சு" என்றான் தவபாலன் ஒருநாள். அவன் எதைக் குறிப்பிடுகிறான் என்பதைப் புரிந்து பத்மா வெட்கப்பட்டாள்.

பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற நிலையில்தான் இருவரும் இருந்தார்கள்.தமது நட்புக்கு யார் புது வடிவத்தைக் கொடுப்பது என்று இருவருக்குமே தெரியவில்லை.ஒருநாள் அவனைத் தன்னுடைய வீட்டுக்குக் கூட்டிச் சென்று அம்மாவுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று பத்மா நினைத்துக் கொண்டாள்.

இந்த நேரத்தில்தான் தவபாலனின் தங்கையின் திருமணம் குறுக்கிட்டது.இந்த இரண்டு வருடங்களிலும் தான் ஏற்றுக் கொண்ட, வாதித்த கருத்துகளுக்கு முற்றிலும் முரணாக சீதனத்தை தேடி தவபாலன் தடம் புரண்டுகொண்டிருந்தபோதுதான் பத்மா விழிப்படைந்தாள்.

www.padippakam.com



'இவர் இரட்டை வேசம் போடுறரா? தான் ஒரு புதுமை வாதி என்று காட்டுவதற்காக பேச்சில் மட்டுமே புரட்சியைக் காட்டும் கூட்டத்தைச் சேர்ந்தவர்தானு இவரும்?' என்று பத்மா யோசிக்க ஆரம்பித்தாள். இதன் பின் நடந்த சில சூடான உரையாடல்களைத் தொடர்ந்து தங்களது தனிப்பட்ட சந்திப்புகளைப் பத்மா தாஞகவே துண்டித்துக் கொண்டாள்.

தொடர்புகளைத் துண்டித்தாலும் மனதிலிருந்த தவபாலனை வெளியே அனுப்ப அவள் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. விளையாட்டுக்காக அவள் இந்த நட்பை ஏற்படுத்திக் கொள்ளவில்லையே?

பாடசாலையில் படிக்கும் காலத்திலிருந்தே பத்மா ஆண்களைப்பற்றிய ஒரு அபிப்பிராயம் வைத்திருந்தாள். ஆண்வர்க்கம் வெளியேபல வித தோல்களைப்போர்த்தியிருந்தாலும் அடிப்படையில் ஒரே குணம்சத்தைக் கொண்டிருப்பதாகவே அவள் கருதினுள். அவர்களுடைய குடும்பத்தில் நிகழ்ந்த சம்பவமும் அவளை அப்படி உறுதியாக நம்ப வைத்தது.

ஆண் வர்க்கம் பெண் வர்க்கத்தை தங்களுடைய விளையாட்டுப் பொருளாகத்தான் வைத்திருக்கிறது. இலக்கியங்களுக்கு உவமான, உவமேய மாகவும், வியாபாரங்களுக்கு விளம்பரமாகவும், வாழ்க்கையில் அடிமையாகவும்தான் வைத்திருக்கிறது என்பது பத்மாவின் ஆணித்தரமான கணிப்பு. இந்த கணிப்புகளினுலேயே ஆண்களுடன் மிகவும் எச்சரிக்கையாகவே பழகவேண்டுமென அவள் தன்னை வரையறுத்துக் கொண்டாள்.

வீட்டில் திருமணப் பேச்சை அம்மா எடுக்கும் போதெல்லாம் பத்மா இதனுலேயே தட்டிக் கழித்துக் கொண்டு வந்தாள். அவசரப்பட்டு ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டிவிட்டு பின்னர் அடக்குமுறையைக் கண்டு கண்ணீர் வடிப்பதில் அர்த்தமில்லை என்பதில் அவள் உறுதியாக இருந்தாள். அதனுல் தான் தானே தனது துணையைத் தெரிவு செய்வதாக வெளிப்படையாகவே தாயிடம் கூறிவிட்டாள்.

கடையில் வேலைக்குச் சேர்ந்தபோதும் சக ஆண் ஊழியர்களையும் பத்மா தனது கணிப்புக்குள்ளேயே அடக்கிக் கொண்டாள். ஆனல் தவபாலன் இலக்கியம், சமுதாயம் என்ற இலச்சினை பொருத்திய கொடியைத் தூக்கிக் கொண்டு வந்தபோது பத்மா ஆச்சரியப்பட்டுப் போனுள்.

ஆண்கள் பற்றிய அவளுடைய இறுக்கம் தளர்ந்து அங்கே சின்னஇடைவெளி வந்தது. தனது நாளாந்த நடவடிக்கைகள் மூலம் தவபாலன் மெல்ல மெல்ல அந்த இடத்தில் குடியமர்ந்து விட்டான்.

முதலில் அவனுடைய கருத்துகளை நேசித்த பத்மா பின்பு

www.padippakam.com



அவனையே நேசிக்க ஆரம்பித்து விட்டாள். கருத்தொற்றுமை கொண்டதுணைகள் என்ற இரு நேரான தண்டவாளங்களில்தான் வாழ்க்கை என்ற புகையிரதம் சீராக ஓட முடியும் என்ற தனது அபிப்பிராயத்திற்கேற்ப பத்மா தவபாலனை ஏற்றுக் கொண்டாள்.

இச் சந்தர்ப்பத்தில்தான் முரண்பாடுகள் ஆரம்பமாகின. சீதனத்தை ஆதரித்துத் தவபாலன் தனது சுயரூபத்தைக் காட்டியபோது பத்மா அதிர்ந்து போனாள்.

'தன்ரை தங்கச்சிக்காக தன்ரை கருத்திலயிருந்து முரண்பட்டு செய்றபடுற இவர் தன்ரை சொந்த வாழ்வில மட்டும் உறுதியா இருப்பார் என்டது என்ன நிச்சயம்?' என்ற கேள்வி எழுந்தபோதுதான் பத்மா சாக்கிரதையானாள். வந்தபின் கவலைப்படுவதைவிட வருமுன் காப்பது சிறந்ததென்பது பத்மாவின் நம்பிக்கை. அதனால் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டாள். சாதாரணமான பெண் மனத்தின் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடாமல் யதார்த்தத்தைச் சீர்தூக்கிப் பார்த்தாள். தவபாலனுக்கும் தனக்குமிடையேயான நட்பு சாத்தியமற்றது என்பதை அவள் புரிந்து கொண்டாலும் அதை ஏற்றுக் கொள்வது சிறிது சிரமமாகவே இருந்தது.

இந்தச் சிரமத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்காகவே அவள் தவபாலனிலிருந்து மெல்ல மெல்ல தன்னை விலக்கிக் கொண்டாள். தானாகவே அவன் தனது தங்கைக்குச் சீதனத்தைத் தேடிக் கொண்டிருப்பதைக் குத்தலாகப் பேசி வெறுப்பை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

தவபாலனுக்கும் பத்மா தன்னைவிட்டு விலக முயற்சிப்பதுதெரிந்தது. அவனால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பத்மாவை அவன் உண்மையாகவே நேசித்தான். இப்படி ஒரு சிக்கல் உருவாகலாம் எனஅவன் எதிர்பார்த்தே இருக்கவில்லை. தனது தங்கைக்காகத் தான் சிரமப்படுவதை அவள் கேலி செய்வதையும் அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நெருங்கவும் முடியாமல் விலகவும் முடியாமல் அவன் தத்தளித்துக் கொண்டிருந்தான். ஆத்திரத்தில் தாறுமாறாகவே பத்மா மேல் வார்த்தைகளைக் கொட்டினாலும் மனம் மறுபடி மறுபடி அவளையே நாடுவதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ரகுராமனும் தவபாலனும் ஏதோ அடிக்கடி கதைப்பதை தன் நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருந்த பத்மா அவதானித்தாள். தவபாலனின் உற்சாகத்துக்கும் இந்த உரையாடல்களுக்கும் ஏதோ தொடர்பிருக்க வேண்டுமென்பதை அவள் தெரிந்து கொண்டாள்.

மதிய போசன உணவின்போது பத்மா மட்டும் தனியே உணவ

படிப்பகம்

www.padippakam.com



வருந்தினன். வழக்கமாக அவனுடன் சேர்ந்து உணவருந்தும் தவபாலன் இன்று கலந்து கொள்ளவில்லை.

மதிய போசனம் முடிந்து பத்மா மறுபடி வேலையை ஆரம்பித்தபோது தவபாலன் கடையில் இல்லை. மாலா வானொலி கேட்க, ரகுராமன் வெளியே முக்காலி போட்டு பாதையை ரசித்துக் கொண்டிருந்தான்.

இந் நேரமே கடையின் அலுப்பான நேரம். நகர்வோர் ஒன்றிரண்டு பேரே வருவார்கள். உண்ட உணவும், பிற்பகல் காலநிலையும் சேர்ந்து தூக்கத்தைக் கட்டாயப்படுத்தும்.

பத்மா கண்ணாடி அலுமாரிகளை ஈரத் துணியால் துடைக்க ஆரம்பித்தாள். சும்மா இருக்க அவளுக்கு அலுப்பாக இருந்தது.

வானொலியில் சலவைத் தூளை விளம்பரப்படுத்த "பத்மாஉமக்கு விசயம் தெரியுமே?" என்று மாலா கேட்டாள்.

பத்மா துடைப்பதை நிறுத்திவிட்டு என்ன என்பது போல அவளைப் பார்த்தாள்.

"தவபாலன்ரை தங்கச்சிக்கு கலியாணம் சரி வந்திட்டுதாம். எப்பிடித் தெரியுமே? தவபாலனுக்கு எங்கயோ பேசி அங்க சீதனம் வாங்கி அதைத் தங்கச்சிக்குக் குடுத்துச் செய்யப் போயினமாம். நல்ல ஐடியா என்ன?" மாலா சொல்லிவிட்டு பத்மாவைப் பார்த்தாள். பத்மா தவபாலனின் நட்புப் பற்றி மாலாவுக்குக் கொஞ்சம் தெரியும். இந்தச் செய்தியால் பத்மாவில் என்ன மாறுதல் ஏற்படுகிறது என்பதை அறியவே மாலா முயற்சித்தாள்.

பத்மா எந்தச் சலனத்தையும் காட்டாது மறுபடி துணியால் துடைத்துக் கொண்டே "அதுதான் ஆள் இண்டைக்குச் சந்தோசமாயிருக்கிறார் போல" என்று மட்டும் சொன்னாள்.

"உமக்கு இதைப் பற்றி ஒண்டும் சொல்லேலயே?" மாலா மறுபடி அலசினாள்.

"இன்னும் சொல்லேல. ஒருக்கா சேப்பிறைஸா காட்டைக் குடுப்பம் எண்டு நினைச்சாரோ தெரியேல" பத்மாவும் வளைந்து கொடுக்காமல் பதிலளித்தாள்.

இவர்களது உரையாடலைக் கேட்டு ரகுராமன் உள்ளே வந்தான். "தவபாலன்ரை கலியான வீடு திறமாத்தான் நடக்கும். ஆளின்ரை வாசகர்மாரே எக்கச்சக்கமாய் குவியப் போயினம்" என்றான்.

படிப்பகம்

www.padippakam.com



"வாசகர்மாரோ?என் இவரேதேன் புத்தகமும் எழுதினவரே?" பத்மா துடைப்பதை நிறுத்திவிட்டு ஆச்சரியமாகக் கேட்டாள்.

"உங்களுக்கு இன்னும் விசயம் தெரியாதே?நான் நினைச்சன் உங்களுக்கு ஆள் சொல்லியிருக்குமெண்டு.எனக்கே இண்டைக்குத்தானே சொன்னவன்.பேப்பர்களில பாரதி எண்ட பெயரில எழுதித் தள்ளுறது ஆர் தெரியுமே?எங்கட தவபாலன்தான்" மற்றவர்களுக்குப் பகிரங்கப்படாத விசயம் தனக்கு மட்டும் தெரிந்த பெருமையில் ரகுராமன் சொல்லிக் கொண்டிருந்தான்.

பத்மாவால் நம்பவே முடியவில்லை.திறந்த வாய் மூடவில்லை. ஈரத் துணி கீழே விழுந்தது.

'தவபாலன்தான் அந்தப் பாரதியா? சமூகத்தைத் திருத்த இலக்கியமும் ஒரு ஆயுதம் என்று எழுதியது இந்தத் தவபாலன்தானா?அதால தான் அந்தக் கவிதையைப் புகழ்ந்து பாராட்டினரா?

ஆக தவபாலன் என்னை மட்டும் ஏமாற்ற இல்லை.பாரதியின் டபேரில இந்த நாட்டையே பேக்காட்டியிருக்கிறர்.திருமணம் எண்டது வியாபாரமாயிருக்கையில் பெண்களே உங்களை நீங்களே விலை குறிக்காதீர்கள் உண்மையான ஆண்மகனைச் சந்திக்கும்வரை உங்களுக்குத் திருமணமே வேண்டாமெண்டு மற்றவைக்கு அறிவுரை சொன்ன புரட்சிக் கவிஞர் இப்ப தன்ரை சொந்த வாழ்க்கையில தலைகுப்புற விழுந்து கிடக்கிறர்.யாருக்கோ தன்னைவித்து அந்தக் காசை தன்ரை தங்கச்சியை ஏற்றுக் கொள்ளுறதுக்காக இலஞ்சமாய் குடுக்கிறர் இந்தப் புரட்சிக் கவிஞர்.என்ன மாதிரி பேனையைப் பிடிச்சு ஆக்களைப் பேக்காட்டிக் கொண்டிருக்கிறர்.' பத்மா தனக்குள் வெந்து கொண்டிருந்தாள்.முன்பு எப்போதும் வந்திராத அளவுக்கு ஆத்திரம் தவபாலன் மீது பொத்துக் கொண்டு வந்தது.

புரட்சி வர்ணம் பூசிய பேச்சுக்களால் தன்னை ஏமாற்றிய அவனது சுயரூபம் தெரிந்தபோது கூட பத்மா இவ்வளவுக்குப் பொங்கவில்லை.ஏமாற்றி விட்டானே என்ற கோபம் வந்தாலும் திருமணம் என்றொன்று நடந்து அப்போதுதான் ஏமாறுமல் இப்போதே விழித்துக் கொள்ள உதவியிருக்கிறன் என்றளவில் அமைதியடைந்தாள்.

ஆனல் இலக்கியம் என்ற புனிதமான துறையை தனது நடத்தையின் மூலம் அவன் கேவலமாக்கியதை அவள் இப்போது அறிந்து கொண்டபோது அவளால் பொறுக்கவே முடியவில்லை.

"தவபாலன் கவிதையில மட்டுமில்லை.வாழ்க்கையிலயும் ஒரு புரட்சி செய்யிறன்.அவன் கலியாணம் கட்டப் போறது சுகமில்லாத பெட்டையொண்டையாம்" ரகுராமன் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான்.

www.padippakam.com



சின்னப் பிள்ளையொன்று பெற்றோருக்குக் கதை சொல்லும் ஆர்வம் அவளில் தெரிந்தது.

பத்மாவின் எரிந்த நெருப்பில் இது இன்னும் எண்ணெய் வார்த்தது. 'சுகமில்லாத பெட்டைக்கு வாழ்வு குடுக்கிற மாதிரி நாடகமாடுறான்? அந்தப் பொம்பிளையைக் கலியாணம் செய்யிறதுக்கு கை நீட்டி இலஞ்சம் வாங்கினதை எல்லாருக்கும் சொல்ல அவனுக்கு முதுகெலும்பிருக்கா? பொறுக்கி.'

ஆம்பிளையள் அவ்வளவு பேரும் பொறுக்கியள்தான். அவரைத் தன் உமாவோட கொஞ்சிப் பழகிப் போட்டு இப்ப கேட்டா சும்மா விளையாட்டெண்ணுறான். இவன் கவிஞன் எண்ட போர்வையில ஊரையும் உலகையும் பேக்காட்டிக் கொண்டிருக்கிறான். ரண்டு பேற்றை பாணியும் வேறயெண்டாலும் அடிப்படை ஒண்டுதான். முதுகெலும்பில்லாத வர்க்கம். அடுத்தவையின்ரை தோளில ஏறுட்டி இந்த வர்க்கத்தால சீவிக்க ஏலாதே? தங்களுடைய சந்தோசத்துக்கு, தங்கடை நன்மைக்கு, தங்கட திருப்திக்கு விளையாட, அரட்டையடிக்க, அடக்க, ஏறி மிதிக்க இந்த ஆம்பிளையளுக்கு பொம்பிளையள்தானே கிடைச்சிறம்?'

பத்மாவால் இதன் பின் நிம்மதியாக வேலை செய்ய முடியவில்லை. கடமைக்காக இயங்கிக் கொண்டிருந்தாள். மதிய போசனத்துடன் போன தவபாலன் பிறகு வரவில்லை. பத்மாவின் சிந்தனை முழுவதும் தவபாலனைப் பற்றியும்? ஆனந்தைப் பற்றியுமே சுற்றிச் சுற்றி வந்தது. கூடவே பெண் வர்க்கத்தைப் பற்றியும் நினைத்தாள்.

'ஆம்பிளையள் இப்படி அட்டகாசம் போட பொம்பிளையளும் காரணிதான். தவபாலன்ரை தங்கச்சியோ இல்லை அவனைக் கலியாணம் கட்டப் போற பொம்பிளையோ தங்கட இயற்கையான உடற் குறைக்காக கச்சமப்படுத்துறதுக்காயே சீதனம் போடப்பட்டு தாங்கள் இழிவாக்கப்படுறம் என்டு நினைச்சுக்கூடப் பாக்க இல்லையே? எப்படியாவது ஒருத்தனை கலியாணம் கட்டிப் போட வேணும். அவனோட பருத்தப் பிள்ளையள் பெற வேணும் என்டு பொம்பிளையள் தங்களைக் கட்டுப் படுத்தேலாம அலையேக்க ஆம்பிளையளுக்கு இவையளோ விளையாடுறதுக்கு உற்சாகம் வரத் தானே செய்யும். சாதாரணமா இருக்கிற ஆம்பிளையளையும் தூண்டத்தானே செய்யயும். சுருக்கமா ஆம்பிளையளும் பொம்பிளையளும் சேந்து பச்சையா விபச்சாரம் தான் செய்யிறம். அதுக்கு கலியாணம் என்ட பேர் வேற'

கடை பூட்டப்படும் வரைக்கும் பத்மாவின் கோபம் ஆறவேயில்லை. எப்போது வேலை முடியும் என்று காத்திருந்தவள் போல் விறுவிறுவென பஸ் நிலையத்துக்கு நடந்தாள்.

www.padippakam.com



வழக்கம் போல பஸ் உடனே வரவில்லை. பிரயாணிகள் காத்திருந்தனர். பத்மா மெல்ல மெல்ல தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பக்கத்தில் நிற்கும் உருவங்களையும், முன்னால் தெரிந்த கடைகளையும் பார்த்தாள்.

பஸ்கள் ஒழுங்கில்லாமல் வந்து நேரத்தைப் பொருட்படுத்தாமல் இளைப்பாறின. இதை மினிபஸ்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டிருந்தன.

வேலை முடிந்து வந்து கொண்டிருந்த பலர் வயிற்றைச் சமாதானப்படுத்த தேநீர் கடைகளுக்குள் புகுந்து சிறைப்பட்டிருந்த பலகாரங்களுக்கு விடுதலையளித்தார்கள். வீட்டில் இருப்பவர்களின் நினைவு வந்த பலர் ஆனந்த விகடன் அல்லது பேரிச்சம் பழம் வாங்கினார்கள்.

இவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பத்மா பத்மலிங்கம் தன்னை நோக்கி வருவதைக் கண்டு கொண்டாள். 'இருக்கிறகொதி போதாதெண்டு இவர் வேற' என எண்ணிக் கொண்டாள்.

"என்ன பத்மா இண்டைக்கெண்டாலும் வாறியே" என்று பத்மலிங்கம் பத்மா சுற்றிலும் பார்த்தாள். எதிர்ப்பக்கத்தில் பஸ் வந்துபோனதால் யாருமில்லை. "அவடத்துக்கு வாங்கோ" என்று பத்மா அந்த இடத்துக்கு நகர்ந்தாள்.

பத்மலிங்கம் கிட்ட வந்தபின் "என்ன விசயம் கெதியாசொல்லுங்கோ. பஸ் வரப் போகுது" என்றாள்.

"என்ன இருந்தாலும் நீ என்ரை மகள். உனக்கு கதைக்க விருப்பமில்லையெண்டாலும் எனக்கு உன்னில அக்கறை இருக்கு" என்று பத்மலிங்கம் கனிவான குரலில் ஆரம்பித்தார்.

"இதுக்கே வந்தனியள்?" பத்மாவின் குரலில் நாரசத வீத வெறுப்பிருந்தது.

"உன்ரை கோவம் எனக்கு விளங்குது. நான் பழசுகளை கிளாறேல. உன்ரை விசயமாத்தான் கதைக்க வந்தனான். கடைக்கு வந்தியெண்டா ஆறுதலா கதைக்கலாம். இது பொது இடம்"

"பறவாயில்லை. இங்கயே கதைப்பம். கடைக்கு வர நான் விரும்பேல"

"உன்ரை பிடிவாதத்துக்கு நான் ஒண்டும் செய்யேலாது. தவபாலன் எண்ட பெடியனோட நீ சிநேகிதமெண்டு நான் அறிஞ்சன். வேற ஒருத்தரையும் விசாரிக்க இல்லை. நான் ஒவ்வொருநாளும் உன்னைப் பாத்

படிப்பகம்

www.padippakam.com



துக்கொண்டுதான் இருக்கிறன். ரண்டு மூண்டு கிழமைக்கு முந்தி அந்தப் பெடியனோட நேர கதைச்சனன். அவனுக்குக் கொஞ்சம் காசுப் பிரச்சினைபோல. உன்னைத்தான் விரும்புறதா சொன்னன். உனக்கும் விருப்பமென்று சொன்னன். அவன்ரை காசுப் பிரச்சினையை என்னால தீக்க ஏலும். உன்ரை அம்மாவை இதுக்குச் சம்மதிக்கப் பண்ணுறது உன்ரை பொறுப்பு" பத்மலிங்கம் சொல்லிவிட்டு பத்மாவைப் பார்த்தார்.

பத்மா அக்கினியாகியிருந்தாள். முகத்தில் சுவாலை தெரிந்தது. "எனக்கு கலியாணம் செய்து வைக்க நீங்க ஆர்? உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லையென்று எப்பவோ ஆகிப் போச்சு. எனக்கு அம்மா இருக்கிற. எனக்கென்ன செய்ய வேணுமென்று அவவுக்குத் தெரியாதாம். இதில பிறத்தியார் தலையிடத் தேவையில்லை. இனியும் நீங்க இப்பிடி பன்ரான்டில வந்து கரைச்சல் குடுக்கிறதா இருந்தா நான் வேற கோன்ற்றுக்கு நடந்து போய் பஸ் எடுக்கிறன். தயவு செய்து மனிசரை நிம்மதியாய் இருக்க விடுங்கோ" பத்மா கொஞ்சம் சத்தமாக சொல்லிவிட்டு வேகமாகத் தனது பழைய இடத்துக்கு வந்தாள்.

பத்மலிங்கம் அப்படியே நின்றார்.

## 32

இரவு உணவை முடித்த பின் பத்மாவும், உமாவும் வீட்டின் முன்னால் வந்து மரத்தின் கீழ் போடப்பட்டிருந்த குற்றியில் அமர்ந்து கொண்டார்கள்.

நிலவு மேலேயிருந்து பால் ஊற்றிக் கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் அவ்வப்போது நிறம் மாற்றிக் கொண்டன. பகல் முழுவதும் ஆவியுயிர்புச் செய்து களைப்படைந்திருந்த மரங்கள் நிதானமாக சுவாசிக்க காற்று இதமாகப் பரவியது.

"பகல் முழுதும் என்ன செய்தனீர்? அலுப்படிச்சதே?" பத்மா அன்புடன் விசாரித்தாள்.

"அம்மாவோட கதைச்சுக் கொண்டிருந்ததில நேரம் போனதே தெரியேல. அ... " என்று உமா இழுத்தாள்.

"சொல்லும். என்னண்டாலும் தாராளமா நீர் என்னட்டைச்

www.padippakam.com



சொல்லலாம்" பத்மா அவளுக்கு ஆதரவளித்தாள்.

"பகல் அப்பா இங்க வந்தவர்.ஊரே என்னைப் பற்றித்தானும் கதைச்சுக் கொண்டிருக்கு.நான் ரவுன் பெடியளோட கோட்டைக்கெல்லாம் போய் படுத்தனாம்.வயித்தில பிள்ள வந்து அதை அழிக்கத்தான் உங்கட வீட்டில வந்து ஒளிச்சிருக்கிறனாம்.அப்பா சொல்லி அழுது போட்டு போறார்."என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது உமா அழுது விடுவாள் போலிருந்தது.கண்கள் நிரம்பிக் கொண்டு வந்தன.

இப்படியான கதைகள் உருவாக்கப்படும் என்று பத்மா ஏற்கனவே எதிர்பார்த்திருந்த படியால் அதிர்ச்சியடையவில்லை.ஆனால் அந்தப் பெண்ணின் உள்ளம் உடைந்து போயிருப்பதுதான் அவளுக்குத் துக்கமாயிருந்தது.

"நான் உமக்கு அடிக்கடி சொல்லுறனான்.ஊர் சனத்தைப் பற்றிக் கவலைப்படாதேயும்.புதிசா ஊரில ஏதாவது நடக்கு மட்டும் அவை இதைப் பற்றித்தான் கதைச்சுக் கொண்டிருப்பினம்.இதுகளைப் பாத்துப் பயப்பிடாம நீர் தைரியமா இருக்க வேணும்.நீரும் அழுது கொண்டிருந்தா ஊருக்கு அவல் கிடைச்ச மாதிரி.சனத்துக்கு இன்னும் புழுகமாயிருக்கும்."பத்மா உமாவின் தோளை அணைத்து ஆறுதல் படுத்தினாள்.

உமா விதித்த கட்டுப்பாட்டை மீறி கண்ணீர் வழிய ஆரம்பித்துவிட்டது.பத்மாவின் தோளில் தலையைச் சாய்த்து சத்தமில்லாமல்அழுதாள்."எனக்குப் பயம்மாயிருக்கு" என்று மெல்லமாகச் சொன்னாள்.

பத்மா அவளின் தோளில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்தாள்.உமாவின் கலக்கம் அவளுக்குப் புரிந்தது.'பாவம் உமா. இன்னும் இந்த உலகத்தைப் பற்றிப் பக்குவப்படயில்லை.அதுதான் பயப்பிடுறாள். இவளின்ரை பயத்தைப் போக்காட்டி தற்கொலையைப் பற்றித்தான் நினைப்பாள்.இவளுக்கு தைரியத்தை உண்டாக்க வேணும்'

"நான் இப்ப உமக்கொரு கதை சொல்லுறன். வடிவாக் கேளும்.அதுக்குப் பிறகு உம்மட பயம் எப்படிப் பறக்குதெண்டு பாரும்" என்று பத்மா ஆரம்பித்தாள்.உமா தொடர்ந்து தோளில் சாய்ந்தவாறு கண்ணீர் உகுத்துக்கொண்டிருந்தாள்.

"எங்கட குடும்பத்தைப் பற்றி நிச்சயம் நீர் கேள்விப்பட்டிருப்பீர்.ஊருக்கே நல்லா இது தெரியும்.இதைப் பற்றி நீர் வேறவிதமாத்தான் கேள்விப்பட்டிருப்பீர்.இப்ப நானே அதைப் பற்றிச் சொல்லுறன்.

தன்ரை புருசனை அம்மா கலைச்சுப் போட்டா என்டதை

படிப்பகம்

www.padippakam.com



மட்டும் தான் அவர் கதைக்குது. இது என் நடந்ததென்று எல்லாருக்கும் வடிவாத்தான் தெரிஞ்சாலும் அதைப் பற்றி அவைக்கு அக்கறையில்லே. இந்த மாதிரி இருக்க எங்கட தமிழ் ஆக்கள் பழகியிட்டடினம்.

அந்தநான் கலியாணங்களைப் பற்றி உமக்குத் தெரியுந்தானே? என்ன நடக்குதென்று மகளுக்கு விபரம் தெரியாமலே அப்பா, அம்மாமார் கலியாணத்தைச் செய்து வைச்சிருவினம். பிள்ளையளின்ரை விருப்பம் கன பெற்றோருக்கு முக்கியமில்லே. இப்பிடித்தான் எங்கட அம்மாவுக்கும் கலியாணம்நடந்தது. ஆரும் அவவை ஒண்டும் கேக்கவே இல்லே. தங்கட விருப்பப்படி கலியாணத்தை முடிச்சிட்டினம். தனக்குத் தாலி கட்டினப் பிறகுதான் பத்மலிங்கத்தைப் பற்றி அம்மாவுக்குத் தெரியும்.

எனக்குப் பத்து வயசாயிருக்கேக்க அம்மாவுக்கு நிமோனியா மாதிரி குளிர் காய்ச்சல் வந்தது. கன் ரண்டும் மங்கத் தொடங்கியிட்டுது. உடன ஒப்பிரேசன் செய்தாத்தான் சுகமாக்கலாம் என்று டொக்டர் மார் சொல்லிப் போட்டினம். அம்மாவைக் கொஸ்பிற்றலில அற்மிற் பண்ணியாச்சு. நான் வீட்டில தனிய எண்டபடியா எங்கட வீட்டுக்குப் பக்கத்திலிருக்கிற இந்திரா என்ட சிநேகிதியை அம்மா உதவி செய்யச் சொல்லிக் கேட்டா. அவ எங்கட வீட்டுக்கு வந்து எனக்கும் அப்பாவுக்கும் சமைச்சு தருவா. அம்மாவுக்கு கொண்டு போய் குடுக்க சாப்பாடு செய்து தருவா. தற்சேலா அப்பா எங்கயெண்டாலும் வெளியில போறதாயிருந்தா என்ரை வீட்டில வந்து படுப்பா. அப்பா இனிப்பு, பிஸ்கற் அதுகளை வாங்கி கொண்டுபோய் பின்னல் செய்யிறவர். அதால அடிக்கடி தூர இடத்துக்குப் போறவர். அப்ப இந்திரா அக்காதான் எனக்குத் துணை.

அம்மா ஆஸ்பத்திரிக்குப் போய் கனநாளா வராத அவவின்ரை அண்ணை, தங்கச்சிமார் எல்லாம் ஒருநாள் வீட்ட வந்தினம். என்னையும் கூட்டிக் கொண்டு அம்மாவைப் பாக்க ஆஸ்பத்திரிக்குப் போச்சினம். அப்ப அம்மாவுக்குப் பக்கத்தில அப்பாவும், இந்திரா அக்காவும் நிண்டிச்சினம்.

அம்மாவின்ரை சொந்தக்காறர் எல்லாரும் என்னைக் காட்டி அம்மாவை ஏதோ சொல்லிப் பேசிக் கொண்டிருந்தினம். அம்மா ஏதோ சொல்லிச் சொல்லி அழுது கொண்டிருந்தா. பிறகு அப்பாவும் அவையும் பேச்சுப்பட்டினம். கடைசியா அப்பா ஆஸ்பத்திரியை விட்டுப் போட்டார். அவருக்குப் பின்னால இந்திரா அக்காவும் போட்டா.

பிறகு அம்மா ஆஸ்பத்திரியால வரும்வரைக்கும் நான் சொந்தக்காறர் வீட்டதான் இருந்தன். பிறகு எங்கட வீட்ட அம்மாட்ட கொண்டந்து விட்டினம்.

அம்மா ஆஸ்பத்திரியால வந்த கொஞ்ச நாளைக்குப் பிறகு

படிப்பகம்

www.padippakam.com



ஒருநாள் அப்பா இந்திரா அக்காவோட வீட்ட வந்தார். அம்மா ஏதோ பேசிக் கலேச்சுப் போட்டா. பிறகு கன காலத்துக்குப் பிறகு ரண்டு, மூன்டுதரம் தனிய வந்தார். ஒவ்வொரு முறையும் அம்மாவோட பேச்சுப்பட்டுக் கொண்டு திரும்பிப் போட்டார். எனக்கு அப்ப ஒன்டுமே விளங்கயில்லே.

நான் கொஞ்சம் வளந்தாப் பிறகுதான் அம்மா எனக்கு முழுக்கதையும் சொன்னு. நான் ஆஸ்பத்திரியல இருக்கேக்க அப்பா இந்திரஅக்காவோட முறைகேடா நடந்திட்டாராம். இந்திரா அக்காவையாவது அவர் சந்தோசமா வைச்சிருக்கட்டும் என்டுதான் அம்மா அவரை திருப்பியும் எங்களோடசேத்துக் கொள்ளாம திருப்பி அனுப்பிப் போட்டா. அவை ரண்டு பேரும் இப்ப கலியானம் முடிச்சு ரவுணில இருக்கினம். அதுக்குப் பிறகு அவர் இஞ்ச வரவே இல்லே.

அம்மாவும், நானும் எந்த ஆம்பிளேத் துணேயுமில்லாமத் தான் இண்டைவரைக்கும் சீவிச்சுக் கொண்டிருக்கிறம். அப்பாவை அம்மா கலேக்கேக்க இந்த ஊர் எங்களேப் பாத்துச் சிரிச்சுக் கொண்டிருந்திது. ஆருக்கும் நாங்கள் பயப்பிடேல, கலங்கிப் போய் அழேல. எங்கட உறுதியைப் பாத்து அவையாவே கதைக்கிறதை நிப்பாட்டிப் போட்டினம்.

எங்கட அம்மா தனியாத்தான் என்னே வளத்தா. படிப்பிச்சா. வேலேக்குச் சேத்தா. ஆரும் அவவுக்கு உதவி செய்யேல. இப்ப நானும் அம்மாவுக்காண்டிதான் வாழ்ந்து கொண்டிருக்கிறன். வேற ஆறையும் நான் எதிர்பாக்கேல.

இப்ப சொல்லும். எந்தப் பிரச்சினையெண்டாலும் உறுதியாய் நிக்கலாமோ? ஏலாதோ? நான் உமக்கு எந்தக் காவியத்தையும், புராணத்தையும் உதாரணமாய் காட்டேலு. என்னேயும், அம்மாவையும்தான் பாக்கச் சொல்லுறன்." நிதானமாகச் சொல்லி முடித்தாள் பத்மா.

உமா அவளுடைய தோளிலிருந்து தலேயை எடுத்து விட்டாள். கண்ணீரை கைகள் அவசரமாகத் துடைத்துக் கொண்டன. பத்மாவைப் பார்த்த பார்வையில் இனம் புரியாத மதிப்பு இருந்தது.

'தங்கட குடும்பக் கதையை என்னட்ட சொல்லுறள அளவுக்கு பத்மா என்னில எவ்வளவு அன்பு வைச்சிருக்க வேணும். இவ்வளவு பெரிய கஉஷ்டத்தைச் சந்திச்ச இந்த ரண்டு பொம்பிளேயலாலயும் தைரியமாய் சீவிக்க முடிஞ்சா நான் மட்டும் ஏன் பயப்பிட வேணும்?

தவறு செய்தவைதான் பயப்பிட வேணும். நானென்ன செய்தனன்? ஒருதனே நம்பி காதலிச்சன். இது வேணுமெண்டே செய்தது? விஞ்ஞா

www.padippakam.com



ளத்தில என்ன படிச்சனுன்?இயற்கையாவே ஆண், பெண் ரண்டு பேற்றையும் உடம்பில இளவிருத்திச் சுரப்பியள் இருக்கு. பருவம் வந்த உடன ஆணுக்கு பெண்ணிலயும் பெண்ணுக்கு ஆணிலயும் கவர்ச்சி அல்லது வேட்கையை உண்டா டாக்கிறது இந்தச் சுரப்பியளின்ரை சுரப்புத்தானே?இதே விதத்தில தான் எனக்கும் நிரஞ்சனில ஆசை வந்திது.அந்த நேரத்தில அந்த வயசில இந்த ஆசை என்ன மாதிரியானதெண்டு பகுத்தறியிற பக்குவம் எனக்கிருக்கேல. அதால கண்மூடித்தனமா அவனோடை பழகிவிட்டன். அவன் என்ரை உடம்பிலருட் டுற அளவுக்குப் பழகிவிட்டன். இது நடந்து முடிஞ்சு போச்சு.

இப்ப எனக்கு எல்லாமே தெரியுது.இந்த ஆம்பிளையள், இந்த ஊர் எல்லாம் எப்பிடிப்பட்டதெண்டு இப்ப வடிவா விளங்குது. இனியும் இந்த மாதிரி பிழையளை நான் செய்ய மாட்டன். அப்பிடியெண்டா நானேன் பய ந்து தற்கொலை செய்ய வேணும்?என்னை நம்பி அப்பா எத்தினை கனவு கண்டிருப்பர்.தெரியாத்தனமா அவற்றை முகத்தில கரி பூசினது பத்தாதெ ண்டு அவற்றை நம்பிக்கைளையும் உடைக்க வேணுமே. நான் செத்துப் போனால் அப்பாவால தாங்கவே முடியாது.இந்தக் கவலையோட தம்பி தங்கச்சியை வளக்க அவர் எவ்வளவு கஷ்டப்பட வேணும்?

நான் சாகமாட்டன். கண்ணுக்கு முன்னால பத்மாவும், அவவின் ரைஅம்மாவும் இது சாத்தியமெண்ட மாதிரி வளந்து காட்டேக்க நானேன் கனக்க யோசிக்க வேணும். இப்பிடி ஆதரவும், அன்பும் கிடைக்கேக்கஎன்ன பிரச்சினையெண்டாலும் சமாளிக்கலாம்.

உமா மெல்ல மெல்ல தன்னுடைய மனதைத் திடமாக்கிக்கொ ண்டிருந்தாள். உறுதி என்ற கற்களைப் பொறுக்கி எதிர்காலம் என்ற அத்தி வாரத்தைப் போட ஆரம்பித்நாள்.

அவள் முகத்தில் தெரியும் மாறுதல்களை பத்மா கூர்மையாக அவதானித்துக் கொண்டிருந்தாள். வாட்டம் மறைந்து அங்கே தெளிவு பர வுவதைப் பார்க்க அவளுக்குச் சந்தோசமாயிருந்தது.

"உமக்கு இன்னும் கொஞ்சம் சொல்லுறன் உமா. ரண்டு காரணங்களாலதான் இந்தத் திருமணங்களே நடக்குது. ஒண்டு பொம்பிளைய லால தனிய ஒண்டும் செய்யேலாது. அவைக்கொரு பாதுகாப்பு அல்லது ஆதாரம் தேவை. அனபடியாக் கலியாணம் அவசியமெண்டது முதலாவது கா ரணம்.

பொம்பிளையளுக்கு ஆரால பாதுகாப்பில்லை?இந்த ஆம்பி ளையளாலதான். இப்பிடியிருக்க, கஷ்டப்பட்டு பணம், நகையெண்டு சேர்த்து ஆம்பிளையிட்டக் குடுத்து என்னைக் காப்பாத்து எண்டு காலில விழுறது கேவலமாயில்லையே?இது கனபேருக்கு விளங்குதில்லை. நல்ல மதிப்பான

படிப்பகம்

www.padippakam.com



வேலயில இருக்கிற, வாட்டசாட்டமான, அந்தஸ்தான, கவர்ச்சியான புருசன் எனக்கு என்டு தம்பட்டமடிக்கத்தான் விரும்பினமேயொழிய ஆதாரம் தேடித் தாங்கள் தாழ்ந்து போறதை ஆரும் நினேச்சுப் பாக்கினமில்லே. இப்பிடி பொம்பிளேயள் கொழுகொம்பு தேடுற படியாத்தான் ஆம்பிளேயையும் நாங்கள் உங்களுக்கு பாதுகாப்பளிக்கிறம், ஆதாரமா இருக்கிறம். வேற சுகமெல்லாம் தாறம். இதுக்கான்டி எங்களுக்கு நீங்கள் காசையும் பொருளையும் தந்தா என்ன என்டு கேக்கிறுங்கள். இந்த ரீதியில நடக்கிற கலியாணம் தேவையே? நீரே யோச்சுப் பாரும். தங்கட தாழ்வுக்கு தாங்களே காரணமா இருக்கிறதை பொம்பிளேயள் உணர்ந்திருக்கினமா என்டதை சிந்திச்சுப் பாரும்.

கலியாணம் கட்டுறதுக்குச் சொல்லுற ரண்டாவது காரணம் வாழ்க்கையென்டா கலியாணம் கட்டி, பிள்ளே குட்டியோட குடும்பமாயிருக்கிறதுதானும். எங்கட சனங்களுக்கு எவ்வளவு குறுகின மனப்பான்மை என்டு பாரும். வாழ்க்கையென்டா கலியாணம் மட்டுந்தானே? வேற ஒன்டும் இல்லேயே?

இந்த உலகத்தில, இந்த நாட்டில, என் இந்த ஊரில ஒவ்வொருத்தரும் செய்யிறதுக்கு எவ்வளவோ காரியங்கள் இருக்கு. ஒவ்வருத்தற்றை கண்ணுக்கு முன்னலயும் எவ்வளவோ பிரச்சினே இருக்கு. மனுசரைக் கேவலமாக்கிற சமுதாயச் சீர்கேடுகள் ஏராளமாய் இருக்கு. கலியாணம் முடிச்சு ஒவ்வொருத்தரும் தானும் தன்ரை குடும்பமுமாய் இருந்தா இதை எல்லாம் ஆர் செய்யிறது? வேற கிரகத்தில இருந்து ஆரேன் வந்து இதுகளேச் செய்வினமென்டு எல்லாரும் எதிர்பாக்கினமோ? கலியாணம் மட்டுந்தான் வாழ்க்கையென்டு நினேச்சா இன்டைக்கு எந்த நாட்டிலயுமே எந்த உரிமைப் போராட்டமும் நடந்திருக்காது. மற்றவைக்கான்டி தங்களே உயிரைப் பலி குடுக்க ஆரும் முன்வந்திருக்க மாட்டினம்.

கலியானம் என்டது வாழ்க்கையின்ரை ஒரு பகுதிதானேயொழிய கலியாணம் தான் வாழ்க்கையில்லே. ஆனபடியா கலியாணம் சரிவரேல அல்லது சரிவராதென்டு செத்துப் போறதோ விரக்தியடைஞ்சு மூலேயில ஒதுங்கியிருக்கிறதோ சுத்த முட்டாள்த்தனம். ஒரு பகுதி இல்லாமல் போட்டுது. பறவாயில்லே. எங்கட வாழ்க்கையில இன்னும் கனக்க இருக்குது என்டு நினேச்சுக் கொண்டு எங்கட பணியேத் தொடர வேணும். வாழ்க்கையை நாங்கள் எங்களுக்காகத்தான் தீர்மானிக்கிறதேயொழிய வேற ஆருக்காகவோ அல்லது வேற ஆரோவோ தீர்மானிக்கிறயில்லே.

இப்பிடியெல்லாம் காரணங்கள் சொல்லுறபடியா திருமணம்என்டதையே நான் எதிர்க்கிறன் என்டு நினேக்காதையும். ஒரு பெண்ணும் ஆணும் மனமொத்து திருமணம் செய்யிறது வேற விசயம். அது இந்தக் காலத்தில

www.padippakam.com



அநேகமா அப்பிடி நடக்கேல. எல்லாம் காசுதான். கடையில போய் தேவையான சாமானுகளை வாங்கிற மாதிரித்தான் வாழ்க்கைக்குத் தேவையான துணையையும் பொருளால நிர்ணயிக்கினம். பச்சையாய் சொன்னா பொம்பிளையளால வாற சீதனத்துக்காண்டி பாலியல் சுகத்துக்குப் பாவிக்க ஆம்பிளையள் தங்கட உடம்பை ஒரு விலைபோட்டு விக்கினம். இதே மாதிரி பொம்பிளையளும் சீதனத்தைக் குடுத்து தங்களுக்குத் தேவையான பாலியல் சுகத்தை அனுபவிக்கினம். சுருக்கமா சொன்னா சீதனம் வாங்கிக் கலியாணம் செய்த அத்தனை பேரும் சிவப்பு விளக்குப் போடாம விபச்சாரம் செய்து கொண்டிருக்கினம். விபச்சார விடுதியளுக்கு அரசாங்கம் அனுமதி குடுக்கிற மாதிரி இவையும் தாங்கள் செய்யிற விபச்சாரத்துக்கு திருமணம் என்ட அனுமதியைச் சமுதாயத்திட்ட இருந்து கௌரவமா வாங்கியிருக்கினம்.

இப்ப சொல்லும். திருமணமென்டது இந்த நிலையில புனிதமான தொண்டா? வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதொண்டா? எப்ப மனதை மட்டுமே நேசிக்கத் தொடங்கியினமோ அப்பதான் புனிதம் வரும். உம்மட கலியாணம் குழம்பிப் போச்சு. இனி வேற ஆரும் முடிக்கவும் மாட்டாங்கள்என்டு இனி நீர் கவலைப்பட மாட்டீரென்டு நினைக்கிறன். எங்களைச் சுத்தி சோடி சேந்திருக்கிற கேவலமானதுகளைவிட தனிய இருக்கிற நாங்கள் கௌரவமா சுதந்திரமா, நிம்மதியா இருக்கிறம். எங்களைப் பாத்துச் சிரிக்கிறவையின்ரை அறியாமையப் பாத்து நாங்கள்தான் சிரிக்க வேணும்.

எப்பவாவது உண்மையான ஆம்பிளை ஆராவது எங்களைச் சந்திக்கு மட்டும் இப்பிடியே இருப்பம். சந்திச்சா கலியாணத்தைப் பற்றி யோசிப்பம். அப்பிடிச் சந்திக்க இல்லையென்டாலும் பிரச்சினை இல்லை. இப்பிடி நாங்கள் இருக்கிறதுதான் வாழ்க்கை"

மூச்சு விடாமல் பேசி முடித்த பத்மாவை திறந்த வாய் மூடாமல் உமா பார்த்துக் கொண்டிருந்தாள். தனக்கு முன்னால் நிற்கும் பெண் சாதாரணள் அல்ல என்ற உணர்வு வியக்க வைத்தது. 'இவ்வளவு தூரம் சிந்திப்பவளா வீடும், வேலையுமாக சாதாரணமா எளிமையாக இருக்கிறள். அநுசரி போலியள் எல்லாம் தம்பட்டம் அடிச்சுக் கொண்டு திரியேக்க பத்மாவைப் போல ஆக்களை இனம் கண்டு கொள்ளுறது சிரமந்தான்.

வாழ்க்கை என்டதைப் பற்றி எவ்வளவு துல்லியமாய் சொன்னா. அப்பாவை உட்கார்த்தி சந்தோசமாகச் சாப்பாடு போடும் போதும், தம்பி, தங்கையை படிப்பிக்க, இவர்கள் பெரியவர்களாகி இப்பிடியெல்லாம் வருவார்கள் என்று பூரிக்கும் போதும் கிடைக்காத திருப்தியும், சந்தோசமுமா நிரஞ்சன் போன்ற முள்ளந்தண்டில்லாதவர்களைத் திருமணம் செய்தால் கிடைக்கப் போகிறது? இல்லை. நிச்சயமா இல்லை. சந்தோசம் வெளியிலே இல்லை. அது வீட்லதான் இருக்கு. நான்தான் அதைக் கண்டு பிடிக்க இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



இனி நான் வேல தேட வேணும். உழைச்சு அப்பாவுக்கு என்ரை கையால சாப்பாடு போட வேணும். தம்பி, தங்கச்சியை குளிக்கவாத்து, உடுப்புகளைப் போட்டு பள்ளிக்கூடம் அனுப்பி.... 'என்று உமா சிந்தித்துக் கொண்டிருக்கும்போது பத்மா தொடர்ந்தாள்.

"இப்படி நாங்கள் ஒருத்தருக்கொருத்தர் ஆறுதல் சொல்லிப் போட்டு எங்கட அலுவலுகளைப் பாத்துக் கொண்டிருந்தா ஆருக்கும் எந்த பிரயோசனமுமில்லை. பதிலா உமக்கு, எனக்கு நடந்ததுதான் மற்றவைக்கும் நடக்கும். இப்பிடி நடக்கக் கூடாது என்டு நாங்கள் விரும்பிற எங்கட அலுவலோட மற்ற விசயங்களையும் கொஞ்சம் கவனிக்க வேணும். சமுகத்தோட நாங்கள் கதைக்க வேணும். நான் உமக்குச் சொன்னதை, நீர் புரிஞ்சு கொண்டதை, எங்கட அனுபவங்களை மற்றப் பொம்பிளையளுக்கும் தெரிவிக்க வேணும். அப்பதான் இந்தப் பிரச்சினைக்கு பொதுவான தீர்வு காணலாம் "என்று பத்மா சொன்னபோதுதான் உமாவுக்குள் அந்தக்கேள்வி எழுந்தது.

"இந்த நாட்டில எல்லாத்துக்கும் ஆம்பிளையளுக்குத்தான் முதலிடம் கிடைக்குது. படிக்கிறதுக்கு கூட பொம்பிளையளுக்கு அனுமதி இல்லை. அவையள் வலுக்கட்டாயமா அடுபபடிக்கு அனுப்பப்படியினம். இல்லாட்டி கலியானம் கட்டுக் குடுக்கப்படியினம். ஆம்பிளையளைத்தான் வற்புறுத்திப்படிக்க அனுப்பியினம். வேலையும் அப்பிடித்தான். ஆம்பிளையளுக்குத்தான் எல்லா வேலையிலயும் முதலிடம் கிடைக்குது. பொம்பிளையள் இரண்டாம் பட்சமாயும் இல்லை. இதுக்குள்ள பொம்பிளையளுக்கென்டு பிறிம்மா கொஞ்ச வேலையளும். இந்த நிலைமையில நாங்கள் ஆம்பிளையளோ மட்டும் போராடிறு சரியே?"

உமாவின் கேள்வி உண்மையிலேயே பத்மாவைத் திகைக்க வைத்தது. இது அவளுக்குப் புதிய கோணம். புதிய பார்ர்வை. ஆண்களின் மேலுள்ள வெறுப்பின் அடிப்படையில் மட்டும் சிந்தித்துக் கொண்டிருந்தவள் இப்போது இந்தப் புதிய ரீதியில் சிந்தித்தாள். விடை சுலபமாகக் கிடைத்தது.

"நீர் கேட்டது நூறுக்கு நூறு சரி உமா. எங்கட போராட்டம் ஆம்பிளையளோட மட்டும் என்டா அதில பிரயோசனம் கொஞ்சந்தான். எங்கட போராட்டத்தை நாங்கள் சமுகத்திலதான் ஆரம்பிக்கவேணும். பொம்பிளையள் தங்கட படிப்பை முழுமையாத் தொடர்றதுக்கு பெற்றோர் அனுமதிக்க வேண்டின அவசியத்தை வலியுறுத்த வேணும். பொம்பிளையள் தங்கட சொந்தக் காலில நிக்கத் தேவையான தொழிற்பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுறதுக்கு வசதியும் அனுமதியும் ஊக்கமும் குடுக்க வேணுமெண்டதை தெளிவாக்க வேணும். அதே மாதிரி சொந்தக் காலில நிக்க வேண்டிய தேவையை பொம்பிளையளுக்கும் வலியுறுத்த வேணும். இதைமுதல் ஊர் மட்டத்தில ஆரம்பிச்சு எங்களோ ஆக்கள் சேந்தாப் பிறகு பரவலா

படிப்பகம்

www.padippakam.com



க்கிக் கொண்டு போகலாம்.

இப்பிடிச் சமுதாயத்தில ஆரம்பிக்கிற போராட்டம் அடுத்தபடியா ஆண், பெண் வர்க்க பேதத்தைத் தங்களுக்குச் சாதகமாய் பாதுகாத்து வைச்சிருக்கிற அரசாங்க அமைப்புக்கு எதிரா மாத்த வேணும். சனங்களுக்கிடையில வர்க்க ரீதியில பேதங்களை உண்டாக்கி தங்கட நலனைப் பேணுற அரசாங்கம் எங்களுக்குத் தேவையில்லை. சனங்களின்ரை நலனை விரும்புற, சனங்களால அமைக்கப்படுற அரசாங்கந்தான் எங்களுக்குத்தேவை. இதையும் மற்றவைக்குத் தெளிவுபடுத்த வேணும். இந்தப் பொதுவான போராட்டத்தில ஒருவேளை ஆம்பிளையளும் எங்களோட சேர்ந்து கொள்ளலாம். அப்ப உண்மையான ஆணைக் கண்டுபிடிக்கிறது எல்லாருக்கும் சுகமாயிருக்கும்.

இவ்வளவு காரியங்கள் இருக்கு. நாங்கள் இன்னும் எங்களைப் பற்றித்தான் கதைச்சுக் கொண்டிருக்கிறம். இனி இந்த வேலயளையும் கவனிப்போம். இதால எங்களைப் பற்றின கவலையும் மறையும். பிரயோசனமான அலுவலைப் பாத்தாயும் இருக்கும். நீர் என்ன சொல்லுறீர்?" என்று பத்மா புதிய உணர்ச்சியுடன் கேட்க "நிச்சயமாக" என்று உமா கையை நீட்டினள்.

பி.கு

வைத்தியநாதனின் மகளை நிரஞ்சன் திருமணம் செய்து கொண்டான். அவனுடைய மனைவி ஊர இடத்தில் படிக்கும்போது வேறு ஒருவனுடன் ஆழமாக தொடர்பு வைத்திருந்ததும், அந்தஸ்து பொருத்தமின்மை காரணமாக அவனை அவசரமாகச் 'சுத்தம்' செய்து, அவளுக்கொரு பொம்மை மாப்பிளையாக நிரஞ்சனை அவர் 'தெரிவு' செய்து வீட்டோடு வைத்துக்கொண்டது நிரஞ்சனுக்குத் தெரிய வந்தபோது அந்த ஊருக்கும் தெரிய வந்தது.

தவபாலனின் தங்கையின் திருமணம் முடிந்தபின் தவபாலனின் திருமணமும் சிறப்பாக நடந்தது. "எழுத்தில் மட்டும் நில்லாது வாழ்விலும் ஒரு லட்சியவாதியாக. . . . " என்று தங்கள் 'பாரதி'யை வாழ்த்தி வாசகர்கள் திருமண விழாவில் வாழ்த்துப்பா பாடினர்கள்.

---

கதையில் வந்த பெயர்கள் கற்பனையே.

படிப்பகம்

www.padippakam.com

# உங்கள் பார்வையில்




தங்களின் 'பாதி உறவு' நாவல் இன்றைய சமுதாயத்தில் நிலவும் பலவகையான பாதி உறவுகளையும் பல கோணங்களில் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளது. குழந்தை வளர்ப்பு பற்றிய தங்களின் கருத்துகள் யாவும் நிச்சயம் மறுக்க முடியாதவை மட்டுமல்ல, அவை இன்றைய சமுதாயத்தில் பல பெற்றோரின் குறைபாடுகளுமேயாகும். இதனைப் பெற்றோர்கள் மனதில் கொண்டால் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.

தங்களின் நாவலில் வரும் இலக்கணப் பிழைகள் தங்களின் வசன அமைப்புக்கு நன்றாக இருப்பினும் அவை வளரும் தமிழ் மக்களின் மனதில் தப்பான இலக்கண அறிவைப் புகுத்திவிடும் என்பது எனது கருத்தாகும்.

பெரிய சமுதாயக் குறைபாடுகளை எடுத்துக் காட்டி அவற்றை நாவலாக்கி வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் மத்தியில் சிறந்த முறையில் எழுதிக் கொண்டிருக்கும் தங்களின் சேவை தொடரவும், இன்னும் பல சீர் திருத்தக் கதைகளைப் படைக்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கு ஜேர்மனி — இ. பரிமளராஜா

குழந்தை நல்லவராவது பெற்றோர் வளர்ப்பினிலே என்ற கதையின் கரு சிறப்பாக இருந்தபோதும் ஒரு நல்ல கதைக்குரிய சரியான அமைப்பு இல்லாததால் முழுமையாகச் சுவைக்க முடியாமல் போய்விட்டது. ஆண்களையே வெறுக்கும் நந்தினி படித்தவள். விபரம் தெரிந்தவள். ஏன் விரும்பாத திருமணத்திற்குச் சம்மதிக்க வேண்டும்.

22ம் பக்கம் இடம்பெற்ற நந்தினி, சுஜாதா சம்பாசனையில் நந்தினிதான் உயர்தர வகுப்புவரை படித்து முடித்து விட்டதாகவும், சுஜாதா நந்தினி விட்டதைத் தொடர்வதாகவும் கூறப்படுகிறது. அதாவது பல்கலைக்கழகத்தை. அதைவிடுத்து 'பாடசாலை' விடுமுறை என்று கூறப்பட்டது ஏன்?

எந்த ஒரு பெண்ணும் சொல்ல முடியாத, கூடாத ரகசியங்களை ஒரு மாதத்திற்குள்ளாகவே சொல்லியிருப்பாள். தனக்கொரு சகோதரன் இருப்பதை

படிப்பகம்

www.padippakam.com



பற்றி நந்தினி ரவீந்திரனுக்குச் சொல்லாதது ஏன்?

ரேகா, கார்த்திக் போன்றவர்கள் என்னதான் உறவு முறையானாலும் புதும ணத் தம்பதியரைப் பார்த்து இப்படிக் கதைக்குமளவிற்கு எங்கள் இளைய தலைமுறைகள் மட்டமானவர்கள் இல்லை. உங்கள் கற்பனையை சென்றி மீற் றர் அளவில்கூட ஏற்றுக் கொள்ள முடியாது.

கதையின் இடையிடையே பெண்களுக்குக் கிடைக்காத சுதந்திரத்தைக் கூறி விட்டு நந்தினியை மனநோயாளியாக்கி கதைகளில் கூட பெண்களுக்குச் சுத ந்திரம் கொடுக்க மறந்து விட்டீர்களே?

ஆனாலும் இந்தக் குறைபாடுகளை இட்டு நிரப்புகிற மாதிரி சமுதாயப்பா ர்வையுடன் கூடிய அழுத்தமான கதாபாத்திரங்கள் மகாலிங்கம்-கனகேஸ்வரி தம்பதிகள் நம் மனங்களில் மணந்து கொண்டிருப்பதை இன்னும் உணரக்கூடி யதாக இருக்கிறது.

கதை பாதி ரசிக்கும்படி உள்ளது. மீதி... ?

மேற்கு ஜேர்மனி நிருபா தங்கவேற்பிள்ளை

முன்னணியில் சிறிது குழப்பமாக இருந்தாலும் முடிவு நன்றாக இருந்தது. பெற் றோரின் கவனக் குறைவால் பிள்ளைகள் எப்படி வளர்கின்றார்கள், அவர் களின் மனதில் எவ்வளவு பாதிப்பு ஏற்படுகிறது என்பதை இந்தக் கதையில் நன்றாகச் சித்தரித்திருக்கிறீர்கள். இது மட்டுமல்ல வெளிநாடுகளில் வாழும் சில தமிழ் மக்கள் தங்கள் பண்பாடு, கலாச்சாரங்களை மறந்து எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உங்கள் பேனா எழுத மறந்து விடக் கூடாது.

மேற்கு ஜேர்மனி நா. நிருபா

சம காலத்திற்கமைய பல உண்மைச் சம்பவங்களோடு தொடரும் தங்கள் உணர்வுள்ள வெளியீடுகள் எதிர்காலத்திற்கேற்றவாறு தொடர்ந்தும் வெளி வர வாழ்த்துகள்.

கதையில் திடீர் திடீரென பலரின் பெயர்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. இதனால் யார் யாருக்கு என்ன தொடர்பு என இலகுவில் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

மண வாழ்க்கையில் ஏற்படும் சந்தேகங்களில் ஏற்பட்ட பாதி உறவையும், சந்தேகம் ஏற்பட்டுவிட்டால் அதை நியாயப் படுத்துவது சிரமம் என்பதை யும் இதனால் ஏற்பட்ட குடும்பப் பிரிவினையையும் தங்களின் நாவலின் மூலம்

படிப்பகம்

www.padippakam.com



தெளிவாக அறியக் கூடியதாக இருக்கின்றது.

கனடா — பி.குயின்டன்

இந் நாவல் ஒரு பக்கம் விளக்கத்தினையும் மறு பக்கம் குழப்பத்தினையும் அளித்துள்ளது. விறுவிறுப்பு நிறைந்த விதத்தில் இந் நாவல் அமைந்திருக்கவில்லை. கதைகள் தொகுக்கப்பட்ட விதம் குழப்பம் ஊட்டுகின்றது.

1983 ஆடி மாத இனக் கலவரத்தின் உண்மைநிலை ஒரே பக்கத்தில் "தமிழர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள் என்னும் அரசியல்வாதிகளின் விளம்பரப்போக்கு சிங்கள மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை விதைத்துள்ளது" என்று தெளிவாக்கப்பட்டுள்ளது.

"ஒரு கணவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதுதான் நல்ல மனைவியின் பண்பு என்றால் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றும் நல்ல பண்புள்ள கணவனாக நீ ஏன் இருக்கக் கூடாது?" என்ற பியதாசவின் கேள்வி சிந்திக்க வைக்கின்றது.

குடும்பத்தில் கணவனும் மனைவியும் சமமாவது புரிந்துணர்விலும் மன ஒற்றுமையிலும்தான் என்பதனை நாவல் புரிய வைக்கின்றது.

தங்களின் ஏற்றம் மிகு ஆக்கங்களை எழுத்தாணியின் தாக்கம் மிகு ஆக்கத்துடன் எதிர்பார்க்கிறோம்.

மேற்கு ஜேர்மனி — கி.வே.அல்ஸ்ரன்

ஆரம்பத்தில் கதாபாத்திரங்கள் அவர்களது வயது, அமைப்பு என்பவற்றை சிறிதளவு அறிமுகப்படுத்தியிருந்தால் அரைவாசிக்குப் பிறகு தான் விளங்கும் என்ற பிரச்சினையிருந்திருக்காது.

கனகேஸ்வரி பாத்திரத்தை நான் வேறாக கற்பனை பண்ணினேன். ஆனால் அவரின் தோழிக்கு இப்போதுதான் காதல் வந்ததும் அப் பாத்திரத்தை விளங்கக் கூடியதாகவிருந்தது.

கதையின் முக்கிய பாத்திரங்களான கனகேஸ்வரியின் எதிர்காலம் என்ன மாதிரி? சிறுவன் என்ன மனோநிலையில்?

மேற்கு ஜேர்மனி — எஸ்.சிறிநிவாசன்

கணவன் மனைவிக்கிடையிலான முரண்பாடுகள் பற்றி தெட்டத் தெளிவாக தங்களின் தரமான எழுத்தாற்றலிலும், தெளிவாற்றலிலும் வெளிக்கொ

படிப்பகம்

www.padippakam.com



ன்டு வந்ததிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். ஒவ்வொருவரும் தங்க ளுடைய வாழ்வில் சந்தேகங்களையும், வீணை தப்பபிப்பிராயங்களையும்முற் றிலும் தவிர்த்துக் கொண்டால் நல்லதொரு அன்பான, ஒற்றுமையான வாழ் க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

மேற்கு ஜேர்மனி — விமலேந்திரன்

---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

குதுகள். இதுகளைப் பாத்தும் உன்ரை மனம் மாற இல்லையே?" என்று அவள் ஆவேசமாகக் கேட்டபோது அவன் நிலைதடுமாறுகிறன். அவள் எடுத்துப்போட் ட உண்மைகள் அவனில் வெண்மையாகப் படிந்தன. அவன் சிந்திக்க ஆரம்பித்தா ன் என்று கதையை முடித்தால், எடுத்துக் கொண்ட பிரச்சினைக்கு அது ஒருநிர ந்தர தீர்வாக அமையாது. நிகழ்கால சம்பவங்களினால் ஏற்பட்ட மனமாற்ற மாகவே அமையும். இதுவே முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம், உண்மையில் இப்போது இலங்கையின் தமிழ்ப் பகுதிக ளிலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருப்பது கண் மூடித்தனமான வெறும் கொலைகளும், பழிவாங்கல்களுமே. எந்த அரசியல் நியாயமும் கற்பிக்கப்படாமல், இவை பற்றி யாராலும் கேட்கப் படாமல் கொலைக் கலாச்சாரம் நாடு முழுக்க பரவிக் கொண்டிருக்கிறது. பாதைய ல் கிடக்கும் பிணத்தைக் காலால் விலத்திவிட்டுப் போக எல்லோரும் பழகிக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் நிமிடத்துக்கு நிமிடம் நிலைமைகள் மாறிக்கொ ண்டிருக்கின்றன. எதிரி நண்பனாகிறான். நண்பன் எதிரியாகிறான். மறுபடி எதிரி நண் பனாகிறான். இந்தக் குழப்பங்களுடன் நாவலை இணைக்க முடியவில்லை.

சமகால அகால மரணங்களைத்தான் தவிர்த்திருக்கிறேனே தவிர சமகாலப் பிரச்சினையை அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகி ன்றேன்.

தொடர்ந்தும் சந்திப்போம்.

— பார்த்திபன்

12/88

**தொடர்பு முகவரி**

SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL 2
WEST GERMANY

Süd-Asien-Büro
Große Heimstraße 58
4600 Dortmund 1

www.padippakam.com

# தூண்டில்

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)
6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு டி.எம். மேலதிகமாகும்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL

BLZ 330 500 00




படிப்பகம்

www.padippakam.com

# SÜDASIEN BÜRO




Kiefernstr. 45
5600 Wuppertal 2
Tel (0202) 50 71 56

Das Südasien Büro, das im deutsch-sprachigen Raum arbeitet, ist ein gemeinnütziger Verein, der seit 198o besteht und seine Hauptaufgabe in der Beschaffung und Weiterleitung von Informationen über die Länder Südasiens sieht. Zu diesen Ländern zählen: Sri Lanka, Indien, Bangladesh, Pakistan und Nepal. Über das Büro können unter anderem bezogen werden:

- Die Zeitschrift 'Südasien', die in 8 Nummern jährlich (Umfang 44-6o Seiten zum Jahresbezugspreis von DM 42,-- (europ. Ausland: DM 52,--) erscheint.

- Die 'Kurzinformationen', (nur für Mitglieder), die etwa alle 2-3 Wochen als internationaler Pressespiegel erscheinen. In dem Pressespiegel werden überwiegend aktuelle Artikel, Meldungen, Nachrichten, Reportagen etc. aus insgesamt über 2o srilankanischen und indischen Medien aufgenommen. Preis: siehe 'Mitgliedsbeiträge'.

- Die tamilische Zeitschrift 'Thoondil', die monatlich im Umfang von ca. 4o Seiten erscheint. Diese Zeitschrift wendet sich an tamilische Asylbewerber in der Bundesrepublik. Preis: 6 Monate 2o,-- DM, ein Jahr 38,-- DM. (eur. Ausland: 48,-- DM, Übersee: auf Anfrage).

-Das Büro gibt in unregelmäßiger Folge Dokumentationen zu Schwerpunktthemen heraus. Bisher erschienen:

- Der autoritäre Staat - Die Institutionalisierung von Gewalt in Sri Lanka, 2. Auflage, Februar 1986, Preis: 3,-- DM

- Sri Lanka - Zeugen sagen aus/Menschenrechtsverletzungen im Jahre 1984, 8o S., Preis: 6,-- DM (vergriffen)

- Weg in den Ruin - Sri Lankas Minderheitenproblematik, 56 S., Oktober 1986, 4,-- DM

- Tamilen Asyl gewähren - Dokumentation zum 'Hearing' im Mai 1987 zur Rechtsprechung in der Bundesrepublik, Juni 1987, 28 S., 3,-- DM

- Lehren aus Bhopal - Ein Jahr nach dem Giftgasunglück, Januar 1986, 86 S., 7,-- DM

- Pakistan im Wandel, Januar 1989, ca. 8o S., 7,-- DM

- Sri Lanka Situation Report (engl.), Situation in the South of Sri Lanka, November 1988, 13 S., 3,-- DM

Das Büro organisiert Veranstaltungen und Seminare und vermittelt Referent(inn)en.

---

Erbitte Probeheft 'Südasien'/Ich möchte 'Südasien' abonnieren/ Möchte Mitglied werden/Möchte 'Thoondil' abonnieren: (nicht Zutreffendes streichen):

Name:.........................................................................................

Anschrift:....................................................................................

Datum/Unterschrift .......................................

(Der Mitgliedsbeitrag beträgt monatlich DM 1o,-- (für Studenten DM 5,-- gegen Nachweis). Der Beitrag schließt folgendes ein: 'Südasien', 'Kurzinformationen', Dokumentationen (nicht: 'Thoondil').

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE


Bankverbindung: Stadtsparkasse Wuppertal BLZ 330 500 00
Kto - Nr.: 26 05 40

படிப்பகம்

www.padippakam.com

வெளியீடு - 3

பார்த்திபன்



பாரதி ஊற்று



# வித்தியாசப்படும்
# ங்கள்



படிப்பகம்

www.padippakam.com

அடுத்த வெளியீடு....

# அம்மா பாவம்




# SÜDASIEN BÜRO

KIEFERN STR. 45
5600 WUPPERTAL - 2
Tel. 0202/507156

Süd-Asien-Büro
Große Heimstraße 58
4600 Dortmund 1

படிப்பகம்